சொர்ணம்மாள் அறக்கட்டளைச் சொற்பொழிவுகள் 1974—75

திருவானைக்காக் கோவில்

ஆசிரியர் :

திவான்பகதூர் **தி. மூ. நாராயணசாமிப் பிள்ளை**, எம்.ஏ.,பி.எல்.,

சென்னைப் பல்கலைக் கழக வெளியீடு

1975

முன்னுரை

சென்னைப் பல்கலைக் கழகத்தின் தமிழ்த்துறைத் தலைவராய் விளங்கிய சொல்லின் செல்வர் டாக்டர் ரா. பி. சேதுப்பிள்ளை அவர்கள் தம் அன்னையார் பெயரில் நிறுவிய 'சொர்ணம்மாள் அறக்கட்டளைச் சொற்பொழிவு' வரிசையில், நான் நிகழ்த்திய 1974ஆம் ஆண்டுக்கு உரிய சொற்பொழிவே இந் நூலாகும்.

தமிழகத்தின் தலைசிறந்த தலங்களுள் ஒன்றாகத் திகழ்வது திருச்சிராப்பள்ளியை அடுத்த திருவானைக்காக் கோவில். இக் கோவிலின் திருப்பணிகளிலேயே நாளும் ஈடுபட்டுவரும் நான் திருவானைக்காக் கோவிலைப் பற்றியே பேசுமாறு அமைந்தது தெய்வத் திருவருளினால் போலும். சொல்லின் செல்வர் டாக்டர் ரா. பி. சேதுப் பிள்ளையவர்களின் பேச்சிலும் பணியிலும் எனக்குப் பெருமதிப்பு உண்டு. அவர்களிடம் நான் வைத்துள்ள ஈடுபாடும் இவ் வுரையை நிகழ்த்துவதற்கு என்னை ஊக்கியது.

தமிழரின் தொன்மை நாகரிகத்திற்கும் கலையுணர்விற்கும் சான்றாக விளங்குவன கோவில்கள். இத்தகு கோவில்களின் வளர்ச்சியையும் வரலாற்றையும் முழுமையாக அறிந்துகொள்ள வேண்டுவது நம் முடைய கடமையாகும். நாளும் தமிழிசையால் பாடித் துதித்த நாயன் மார்களும் கோவிலின் வளர்ச்சியும் வாழ்வுமே தம் வாழ்வாகக் கொண்ட வேந்தர்களும் வாழ்ந்த அப் பொற்காலத்தை நினைக்கும் பொழுதெல்லாம் இன்பம் பெருகும்.

அறநிலைய நிர்வாகப் பொறுப்பில் நானிருந்த நாளிலேயே கோவில் களின் வரலாற்றையும் அங்குள்ள கல்வெட்டு, அதைச் சார்ந்த இலக்கி யங்கள் முதலானவற்றையெல்லாம் ஒருங்கு திரட்டி வெளியிடுவ தற்குப் பெரிதும் முயன்றேன். ஆனால், கோவில்களைப்பற்றிய சிறு விளக்கக் கையேடுகள் வந்துள்ளனவேயன்றி கல்வெட்டு முதலிய வற்றையெல்லாம் நன்கு ஆராய்ந்து எழுதப்பட்ட நூல்கள் இன்னும் வெளிவரவில்லை. இத்தகைய நூல்கள் வெளிவந்தால்தான் நமது நாட்டு வரலாறு மக்களின் பண்பாடு முதலியனவெல்லாம் தெளி வாக உணரமுடியும். இந்த வகையில், என்னுடைய இச் சொற் பொழிவு ஒரு சிறு முயற்சியே.

காலந்தோறும் திருவானைக்காக் கோவில் எப்படியெல்லாம் வளர்ச்சிப் பெற்றது என்பதனைக் கல்வெட்டுகள், இலக்கியங்கள் முதலானவைக் கொண்டு ஒருவாறு முதல் நாள் பேச்சில் சுருக்கமாக எடுத்துச் சொல்லியுள்ளேன். சோழ, பாண்டிய, ஹொய்சள, விஜய நகர, மதுரை நாயக்க மன்னர்கள் இக் கோவிலின் வளர்ச்சியில் ஈடுபாடு கொண்டிருந்ததை வரலாற்றுக் கூறுகள் நன்கு எடுத்துக் காட்டும்.

இரண்டாம் நாள் சொற்பொழிவில் பழமையும், வரலாற்றுச் சிறப்பும், மூர்த்தி மகிமையும் கொண்டு விளங்கும் ஆனைக்கா அண்ண லாரை சிவத் தொண்டர்களும் செந்தமிழ்ப் புலவர்களும் எப்படி யெல்லாம் நினைந்து நினைந்து, நெகிழ்ந்து நெகிழ்ந்து பாடியுள்ளனர் என்பதனைக் கோடிட்டுக் காட்டியுள்ளேன். ஐயடிகள் காடவர்கோன் முதல் அப்புலிங்கம் பிள்ளை ஈறுக அண்ணலாரின் அருள்நிலையைத் தெள்ளுதமிழில் வழங்கிய புலவர் பெருமக்களின் தமிழ்ப் பாக்கள் நினைக்கும்தோறும் இன்பம் பயப்பனவாம்.

திருவானைக்காச் சொற்பொழிவுக்காக ஆய்ந்தபோது இதுவரை வெளிவாராத தந்திவனப் புராணம், திருவானைக்காத் திருப்பணிமாலை என்னும் நூல்களின் சிறப்பையும் உணர நேர்ந்தது. இவை இன்னும் அச்சிடப் பெருமலிருப்பது இலக்கியத்துக்கும் வரலாற்றுக்கும் ஏற் பட்ட குறையாகும். இதனைப் பல்கலைக் கழகம் போன்ற நிறுவனங்கள் வெளியிடவேண்டும் என்பது என் விருப்பம்.

மூன்றும் நாள் சொற்பொழிவில் திருக்கோவிலில் நடைபெறும் விசேட வழிபாடு, திருவிழாக்கள் ஆகியன பற்றியும், சமயத் தத்து வத்தைப் பற்றியும் ஓரளவு விளக்கியுள்ளேன்.

இத் தள்ளாத வயதினிலும் இப் பணியை ஒருவாறு நிறைவேற்றிய திருவருட் கருணைத்திறத்தை முதற்கண் வழிபடுகின்றேன். இந்த வாய்ப்பினை நல்கிய சென்னைப் பல்கலைக் கழகத் துணைவேந்தருக்கும், ஆட்சிக் குழுவினருக்கும், தமிழ்த்துறைத் தலைவருக்கும் நன்றி கூறும் கடப்பாடுடையேன்.

சொற்பொழிவினை உருவாக்கிடப் பலர் அன்புடன் உழைத்துத வினர். கல்வெட்டுப்பற்றிய செய்திகளை ஆய்வதற்குச் சென்னைப் பல்கலைக் கழகத் தொல்பொருள் ஆய்வுத்துறை விரிவுரையாளர் திரு. சா. குருமூர்த்தி அவர்களும், தமிழ்நாட்டு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை இயக்குநர் திரு. இரா. நாகசாமி அவர்களும், அவருக்குக் கீழ்ப் பணிபுரிந்துவரும் திரு. நடன காசிநாதன் அவர்களும், திருச்சியில் என் நண்பர் இராமமூர்த்தி அவர்களும் பல குறிப்புகளை நல்கினர். அடுத்து இலக்கியம் பற்றிய பல நூல்களையும் ஒருங்கு திரட்டி ஆய்வ தற்கு மறைமலையடிகள் நூல் நிலைய நூலகர் திரு. முத்துக்குமாரசாமி

அவர்கள் பெரிதும் உதவினர். தந்திவனப் புராணம், அகிலாண்ட வல்லி தோத்திரம், திருப்பணிமாலை முதலிய அச்சேருத அருந்தமிழ் நூல்களைப் பார்வையிட டாக்டர் உ. வே. சாமிநாதையர் நூலகர் திரு. மு. கோ. இராமன் செய்த உதவி மறக்கற்பாலது அன்று. மேலும், திருச்சியில் நண்பர் ஆறுமுகம் அவர்கள் செய்த பணியையும் மறக்க முடியாது. இவர்கள் அனைவர்க்கும் என் நல்வாழ்த்தும் நன்றியும்.

இலக்கிய நூல்கள் முதலியவற்றின் கருத்துகளை விளக்கியும், இந் நூலினைச் செப்பமுற அமைப்பதற்கு உடனிருந்து உதவியும் அரும்பணி புரிந்த சென்னைப் பல்கலைக் கழகத் திருக்குறள் ஆராய்ச்சித்துறை விரிவுரையாளர் புலவர்மணி மு. சண்முகம் பிள்ளை அவர்கட்கும் என் நல்வாழ்த்துகள். அவருடன் பணியாற்றிய திரு. அமிர்தலிங்கம் முதலான மாணவர்கட்கும் என் நல்வாழ்த்துகள் உரித்தாகுக.

திருச்சி,
5—9—75.

தி. மூ. நாராயணசாமிப் பிள்ளை

சொற்பொழிவுகள்

திருவானைக்காக் கோவில்

1. வளர்ச்சி, வரலாறு, கல்வெட்டுகள்

திருவானைக்காக் கோவில் பிரசித்தி பெற்ற கோவில்களுள் முக்கியமான ஒன்று. அதன் பரப்பு சுமார் 80 ஏக்கர் இருக்கலாம். பஞ்சபூத தலங்களுள் பெருமை வாய்ந்த ஒன்று; ஆதிசங்கரரால் போற்றப்பட்டுத் தாடங்கம் சாத்தப்பட்ட பெருமையுடையது; நாயன்மார்கள் நால்வராலும் பாடப்பட்ட பெருமை வாய்ந்தது; இன்னும் அநேக புலவர்கள் போற்றிப் பாடியிருக்கிறார்கள்.

கோவிலின் அமைப்பு சிற்பம் முதலியவை மிகச் சிறந்தவை. இந்தக் கோவிலின் ஒரு மதில், சிவனே சித்தர் உருவில் எழுந்தருளி, விபூதியைக் கூலியாகக் கொடுத்துக் கட்டப்பட்ட தனிப் பெருமையுடையது. இந்தக் கோவிலில் வழிபாடு செய்து பயனடைந்தவர்கள் பல பெரியார்கள். சோழ, பாண்டிய, ஹொய்சள, விஜயநகர, மதுரை நாயக்க மன்னர்கள் இதன் வளர்ச்சியிலும், கோபுரம், மண்டபம் முதலியவைகளைக் கட்டுவதிலும் ஈடுபட்டிருந்திருக்கிறார்கள்.

இக் கோவிலைப் பற்றி மூன்று தலைப்புகளின்கீழ் மூன்று உரைகளில் எடுத்துச் சொல்ல நான் முயலுகின்றேன். முதல் உரையின் தலைப்பு 'திருவானைக்காக் கோவில்—அதன் வளர்ச்சி—வரலாறு—கல்வெட்டுகள்' என்பது.

இந்தக் கோவில் முதன் முதலில் எப்பொழுது உண்டானது?

இந்தக் கோவில் முதன் முதலில் எப்போது உண்டானது என்பதை அளவிட்டு உரைக்க முடியாது. இப்பொழுது காணப்படும் கோவில், சரித்திர காலத்தில் கி. பி. இரண்டாம் நூற்றாண்டில் கோச்செங்கணான் என்ற சோழ அரசனால் கட்டப்பட்டது என்று நிச்சயமாகச் சொல்லலாம்.

கோச்செங்கணான் காலத்திற்குப் பிறகு கோயில் மிகுந்த வளர்ச்சியை அடைந்திருக்கிறது. இப்பொழுது அநேக பெரிய பெரிய கோபுரங்கள் — தீர்த்தங்கள் — சுவர்கள் — சிறு சிறு கோயில்கள்— பெரிய சிறிய மண்டபங்கள் முதலியவை அலங்கரிக்கின்றன.

ஆனல் அதற்கு முன்னரே—சரித்திர காலத்திற்கு முன்னரே— இதே இடத்தில், இன்றைய அமைப்பில் இல்லாமல் சுயம்பு லிங்கத் துடனும், வெண்ணவல் மரத்துடனும், செழுநீர்த்திரளான ஊற்றுட னும் வழிபடும் இடமாக விளங்கி வந்திருக்கிறது. இந்தச் செய்தியை பாத்ம புராணமும், திருவானைக்காப் புராணமும் கூறுகின்றன.

கோச்செங்கணன் காலம்

சங்க காலத்தில் மிகப் புகழ் கொண்டு விளங்கிய கரிகாலன் என் பவர் சோழ நாட்டையும், பிற நாடுகளையும் இணைத்து ஆண்டவர். அவர் தான் காடுகளை அழித்து நாடாக்கியவர்; காவிரிக்குக் கரை எடுத்தவர். திருப்பதிக் கோயிலையும் சென்று கைக்கொண்டார் எனச் சரித்திரம் கூறுகிறது. திருவானைக்காக் கோவிலை முதலில் கட்டிய செங்கணன் கரிகாலனுக்கு முன்னவனே பின்னவனே என்று வரலாற்று ஆசிரியர்கள் ஐயப்படுகின்றனர்கள். கரிகாலன் காலத்தை வரையறுத் திட முனைந்தவர்கள், அவன் காலம் கி.பி. முதல் நூற்றாண்டாக இருக் கலாம் என்று கருதுகிறார்கள்.

திரு. எஸ். பாலசுப்பிரமணியம் அவர்கள் தமது 'Early Chola Art—Part I' என்ற நூலில் 63—வது பக்கத்தில் செங்கணனின் காலம் சங்ககாலத்தின் இறுதிப்பகுதி எனக் குறிப்பிடுகின்றார். கி.மு. மூன்றும் நூற்றாண்டிலிருந்து கி. பி. மூன்றும் நூற்றாண்டு வரை — சங்ககாலம் எனக்கொண்டு கி. பி. மூன்றும் நூற்றாண்டினனாக இம் மன்னனைக் குறிப்பிடுகின்றார். ஆனல், தகுந்த ஆதாரங்கள் குறிப்பிடப் பெற வில்லை.

'சேரர் வரலாறு' என்ற நூலில் அதன் ஆசிரியர் துடிசைகிழார் அ. சிதம்பரனார் அவர்கள் செங்கணன் காலம் கி.மு. 50 முதல் கி.பி. 25 வரை எனக் குறிப்பிடுகின்றார் (பக்கம்-138). இந்தச் செங்கணன், கணைக்கால் இரும்பொறையுடன் கி.மு. 45, கி.மு. 42, கி.மு. 40, கி.மு. 35—ஆகிய நான்கு ஆண்டுகளிலும் நடைபெற்ற நான்கு போர்களிலும் கலந்துகொண்டு வெற்றி பெற்றான் என்றும் கூறியுள்ளார். எந்த வரலாற்று ஆசிரியரும் இந்த அளவிற்கு அறுதியிட்டு உரைக்கவில்லை. ஆனல் தகுந்த ஆதாரங்களை ஆசிரியர் கொடுக்கவில்லை.

திரு. கா. அப்பாத்துரை அவர்கள் தமது 'தென்னாட்டுப் போர்க் களங்கள்' என்ற நூலில், கோச்செங்கணன் சங்ககாலத்தின் இறுதியில் இருந்தவன் எனக் குறிப்பிடுகின்றார் (பக்கம்-112).

பன்னிரு திருமுறையின் தொகுப்பில், இரண்டாம் தொகுதியில், திரு. க. வெள்ளைவாரணர் அவர்கள் செங்கணன் காலத்தைக் கி.பி. முதலாம் நூற்றாண்டின் இறுதிப் பகுதி எனக் குறிப்பிடுகின்றார்.

திரு. ந.மு. வேங்கடசாமி நாட்டார் அவர்கள், தமது 'நானுற்பது' உரை நூலில், களவழி நாற்பது எழுதப் பெற்ற காலத்தை ஆய்வு

செய்கின்றார். இந் நூல் செங்கணானைப் பற்றிப் பொய்கையார் பாடியது. இந் நூல், கி.பி. 250-க்கும் பிற்பட்டது ஆகாது என வலியுறுத்துகின்றார் (பக்கம்-6).

பரணியின் அடிப்படையில் பார்க்கின்ற பொழுது, கோச் செங்கணான் கரிகாலனுக்கு முன் வாழ்ந்ததாக உணர வேண்டிய நிலை உருவாவதாய்க் குறிப்பிடுகின்றார். ஆனால் உலா, கரிகாலனை அடுத்துக் கோச்செங்கணானை வைக்கத் தூண்டுவதாய்க் குறிக்கின்றார். ஆகவே கரிகாலனை ஒட்டி, அவனுக்கு முன்னோ பின்னோ வாழ்ந்தவன் செங்கணான் என்பது இவரது துணிபு. ஆகவே, கரிகாலன் காலத்தை ஆய்வது செங்கணான் காலத்தை அறிவதற்குத் துணைபுரியும்.

கரிகாலன் காலம்

"The Tamils Eighteen Hundred years ago" என்ற நூலில் திரு. வி. கனகசபைப் பிள்ளை அவர்கள் கரிகாலனது ஆட்சிக் காலத்தைக் கி.பி. 50 முதல் கி.பி. 90 வரை என்று வரையறை செய்கின்றார்கள்.

கஜபாகு (கயவாகு) மன்னன் இலங்கையைக் கி.பி. 113 முதல் கி.பி. 125 வரை ஆண்டமைக்கு ஆதாரங்கள் உள்ளன. ஆட்சிக் காலத்தின் இறுதியாண்டில் சேர நாட்டின் தலைநகரத்திற்குக் கஜபாகு வந்தார்; சிலம்புச் செல்வியாம் கண்ணகிக்குக் கோயில் எடுப்பித்த சேரன் செங்குட்டுவனின் வயது அப்போது ஐம்பதாகும்.

எனவே, சேரன் செங்குட்டுவன் கி.பி. 75-ல் பிறந்திருக்க வேண்டுமென்று நிச்சயிக்கின்றார் (பக்கம் 65). அவருடைய (செங்குட்டுவன்) தாய் கரிகாலன் மகளாவாள். எனவே, பேரன் பிறந்த ஆண்டு கி.பி. 75 ஆக இருந்தால் தாத்தா 40 ஆண்டுகளாவது முன்பு தோன்றி இருக்க வேண்டும். எனவே கரிகாலன் கி.பி. 35ல் தோன்றியிருக்க வேண்டும். அவரது ஆட்சிக் காலம் கி.பி. 50 முதல் கி.பி. 95 வரை. இந்த அடிப்படையில் பார்த்தால், செங்கணான் காலம் கி.பி. முதல் நூற்றாண்டின் இறுதியிலும் இரண்டாம் நூற்றாண்டின் தொடக்கத்திலும் இருக்க வேண்டுமென்ற முடிவுக்கு வரலாம்.

திரு. சேஷகிரி சாஸ்திரி அவர்கள் கரிகாலன் காலத்தைக் கி.பி. இரண்டாம் நூற்றாண்டு எனக் குறிப்பிடுகின்றார்கள். இந்த அபிப் பிராயத்தை, தமது "History of the Tamils from the Earliest Times to 633 A. D." என்ற நூலில் திரு. பி. டி. சீனிவாச ஐயங்கார் குறிப்பிட்டு, (பக்கம் 372) அதன் உண்மையினை ஆய்வு செய் கின்றார். டாக்டர் கிருஷ்ணசாமி ஐயங்கார், கரிகாலனை முதல் நூற்றாண்டில் இருந்தவரென்று குறிப்பிடுகின்றார் என்று சொல் கின்றார். திரு. பி. டி. சீனிவாச ஐயங்கார் சொல்வது என்னவெனில், கயவாகு 1 இலங்கையை ஆண்டது மகாவம்சத்தில் கி.பி. 113 முதல் கி.பி. 135 வரை எனக் காணப்படுவதாகக் குறிப்பிடுகின்றார். மேலும்,

திரு. குமாரசாமி என்பவர் கரிகாலனை முதல் நூற்றுண்டினனுகக் குறிப்பிடுகின்றுர். இவர்கள் கூற்றை மறுத்துவிட்டு, கல்வெட்டுச் சான்றுகளின் அடிப்படையில் கீழ்வருமாறு குறிப்பிடுகின்றுர். "Epigraphical evidence points to the end of the IV century as the period when Karikal flourished." இவர்தம் அபிப்பிராயத்தைத் திரு. நீலகண்ட சாஸ்திரி அவர்கள் தமது "Studies in Chola History and Administration" என்ற நூலில் நுணுக்கமாக, விரிவாக ஆதாரங்கள் கூறி மறுக்கின்றுர். கரிகாலனைப் பற்றி எங்கெங்கெல்லாம் குறிப்புகள் வருகின்றனவோ அவற்றின் நீண்ட பட்டியலைக் குறிப்பிடுகின்றுர்.

7, 65, 66, 224 ஆகிய புறநானூற்றுப் பாடல்களும், 55, 125, 141, 246, 376 ஆகிய அகநானூற்றுப் பாடல்களும், 6, 230, 239 ஆகிய பழமொழி நானூற்றுப் பாடல்களும், முடத்தாமக் கண்ணியார் இயற்றிய பொருநராற்றுப்படையும், கடியலூர் உருத்திரங்கண்ணனூர் இயற்றிய பட்டினப்பாலையும், கரிகால் பெருவளத்தானைப் பற்றிக் குறிப்பிடுகின்றன. சிலப்பதிகாரத்தில் மூன்றிடங்களிலும், மணிமேகலையில் முதல் காதையிலும் அவனது குறிப்புக் காணப்படுகின்றது. கி.பி. 8-ஆம் நூற்றுண்டில் வாழ்ந்த புண்ய குமாரனின், 'மேலப்பாடு பட்டயம்' கரிகாலனைப் பற்றிக் குறிப்பிடுகின்றது.

அன்பில் செப்பேடு மன்னர்களைச் சென்னி, கிள்ளி, கரிகாலன், கோச்செங்கணுன் என வரிசைப்படுத்துகிறது. திருவாலங்காட்டுச் செப்பேடு பெருநற்கிள்ளி, கரிகாலன், கோச்செங்கணுன் என வரிசைப் படுத்துகின்றது. The larger Leyden grant (vii) Panacapa, Karikalan, Chenganan என வரிசைப்படுத்துகின்றது. கரிகாலனை அரிகாலன் Arikala எனவும் குறிக்கின்றது.

கன்னியாகுமரிக் கல்வெட்டு, பெருநற்கிள்ளி, கரிகாலன், வளபா (Valaba) என முறைப்படுத்துகிறது.

பரணி, மூவர்உலா, குலோத்துங்கன் பிள்ளைத்தமிழ், திருக்குறிப்புத் தொண்ட நாயனுர் புராணம் ஆகியவற்றிலும் கரிகாலனைப் பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன.

13-ஆம் நூற்றுண்டில் தெலுங்கில் எழுதப்பெற்ற 'Panditaradhna' என்ற சைவநூல் பரணி கூறும் செய்திகளையே கூறுகின்றது. கி.பி. 1023-ஆம் ஆண்டைச் சேர்ந்த தெலுங்குக் கல்வெட்டும் கரிகாலனைப் பற்றிக் குறிப்பிடுகின்றது. 14-ஆம் நூற்றுண்டைச் சேர்ந்த பிரகதீசுவர மகாத்மியமும் சோழ மண்டல சதகமும் கரிகாலனைப் பற்றிக் குறிப்பிடுகின்றன. கரிகாலனைப் பராந்தகனின் மகனுகச் செவ்வந்திப் புராணம் குறிப்பிடுகின்றது. கரிகாலனை கி.பி. இரண்டாம் நூற்றுண்டில் நிலைநிறுத்துவதற்காக மட்டுமே தான் இத்துணை ஆதாரங்களைத் தரவில்லை என்று குறிப்பிடுகின்றுர் (பக்கம் 72). இதற்கு முன்னே பின்னே கரிகாலனை இழுப்பார்தம் கூற்றுகள் தவறுடையன என்பதை

எளிதாக்கவே இம் முயற்சியில் ஈடுபடுவதாகக் குறிக்கின்றார். ஆனால், கரிகாலன் காலம் கி. பி. 2ஆம் நூற்றாண்டு என்று தெளிவாக இந் நிலையில் குறிப்பிடக் காணேம். கரிகாலன் காலம் கி. பி. 2ஆம் நூற்றாண்டு என்பது ஒருசாரார் கொள்கை.

கரிகாலன் மகள் ஆதிமந்தி என்பதும், அவள் ஆட்டனத்தியை மணந்துகொண்டமையும், காவிரியில் ஆடிய அத்தியைக் காவிரி அடித்துச் சென்றமையும் அகநானூறு 222, 376 பரணரின் பாக்களால் அறியலாம். குடவாயிற்கீரத்தனர் பாடிய அகநானூறு 44-வது பாடலில் ஆட்டனத்தி கணைக்கால் இரும்பொறையின் படைத்தலைவர் அறுவரில் ஒருவர் எனக் காண்கின்றோம். கழுமலப் போரில் கணையன் அகப்பட்டமையையும் அப் பாட்டு உணர்த்தும். பரணரின் அகம் 386-வது பாட்டில், ‘கணையன் நாணியாங்கு’ என்ற தொடரும் சேரமான் கணைக்கால் இரும்பொறையையே குறிக்கும். களவழி நாற்பது பாடப் பெற்ற நோக்கம் சேரனை விடுதலை செய்வதே. புறநானூறு 74-வது பாட்டின் கீழ்க் காணப்படும் குறிப்பும் கணைக்கால் இரும்பொறையும் செங்கணனும் மோதியமையைக் காட்டும். “சேரமான் கணைக்கால் இரும்பொறை சோழன் செங்கணனெடு திருப்போர்ப்புறத்துப் பொருது பற்றுக்கோட்பட்டு குடவாயிற் கோட்டத்துச் சிறையில் கிடந்து தண்ணீர் தாவென்று கேட்டுப்பெருது — பெயர்த்துப் பெற்றுக் கைக் கொண்டிருந்து உண்ணுன் சொல்லித் துஞ்சிய பாட்டு” — எனவே, கரிகாலனின் மருமகன், சேரமான் கணைக்கால் இரும்பொறையின் படைத்தலைவர் அறுவருள் ஒருவனய் நின்று கோச்செங்கணனேடு மோதியமை புலப்படுகின்றது. எனவே, கரிகாலன் காலத்தை ஒட்டிக் கோச்செங்கணன் காலம் அமைகிறது. கரிகாலன் காலமும், கோச் செங்கணன் காலமும் முறையே கி. பி. 2ஆம் நூற்றாண்டின் முற்பகுதி யாகவும், பிற்பகுதியாகவும் கொள்ளுதல் முறையே.

கோச்செங்கணன் காலம் கி. பி. 2ஆம் நூற்றாண்டின் பிற்பகுதி. திருவானைக்காத் திருக்கோவில் கட்டப்பெற்ற காலமும் அதுவே.

கோச்செங்கணனின் காலஆராய்ச்சியின் முக்கியத்துவம்

கோச்செங்கணன் காலத்தைப் பற்றிப் பல ஆசிரியர்களின் கூற்றையும் சற்று விரிவாகப் பார்த்தமைக்குப் பல காரணங்கள் உண்டு. இந்தியாவிலேயே முதன் முதலாக, திருவானைக்காத் திருக் கோயில் கட்டப்பட்டிருக்கலாம் என்ற நிலையை அறிவதற்குக் கோச் செங்கணன் கால ஆராய்ச்சி கண்டிப்பாகத் தேவைப்படுகிறது.

சோழர்கள் உலகப்புகழ் பெற்றமைக்குரிய அடிப்படைக் காரணங் களுள் ஒன்று அவர்கள் செய்த கோயில் கட்டும் திருப்பணியாகும். அவர்களுக்கு முன்னேடியாகக் கோச்செங்கணன் அமைவதால் அவன் கால ஆராய்ச்சி இன்றியமையாதது. சமயக் காழ்ப்பின்றிச் சிவனுக் கும் விஷ்ணுவுக்கும் 70 மாடக் கோயில்களைக் கட்டிப் பெரும்புகழ்

கொண்டவன் கோச்செங்கணன். சேக்கிழார், அப்பர், சம்பந்தர், ஆழ்வார்கள் ஆகிய யாவரும் இச் சிறப்பினைப் பெரிதும் பாராட்டு கின்றனர். விஜயாலயன், ஆதித்தன், இராஜராஜன், இராஜேந்திரன் போன்றோர் பிற்காலத்தில் கருங்கல்லால் கோயில் கட்டிச் சமயத் தொண்டாற்றியமைக்கு வித்திட்ட பெருமை கோச்செங்கணனையே சேரும்.

கருங்கல் கட்டிடம் ஏற்பட்டது எப்போது? யார் காலத்தில்?

இக் கோயில் ஆதித்த சோழனால் முதன் முதலில் கற்றளியாய் ஆக்கப்பட்டிருக்கவேண்டும். ஆதித்தன் காலம் கி. பி. 870 முதல் கி.பி. 907 வரை. இவர்தான் காவிரிக்கரை நெடுகிலும் பல கற்கோவில் களைக் கட்டினர். அதற்கு வரலாற்றுச் சான்றுகள் உள்ளன. கோச் செங்கணன் வந்த சோழ மரபிலேயே வந்தவன் ஆதித்த சோழன். திருவானைக்காவை ஒட்டிய சுற்றுப்புற ஊர்களில் உள்ள சில கற்றளிகள் ஆதித்த சோழனால் கட்டப்பெற்றவை. ஆகவே, திரு வானைக்காக் கோவிலையும் ஆதித்த சோழன்தான் கற்றளியாக மாற்றியிருக்க வேண்டும் என்று கொள்ளலாம். திருவானைக்காவில் இன்றும் நாம் காணும் சில சின்னங்கள்—முதலாவது பிராகாரத்தில் இருக்கும் சப்த மாதர்கள், யாளி வரிசைகள், ஆயிரங்கால் மண்டபத் தில் சேகரித்து வைக்கப்பட்டிருக்கும் சில சிற்பங்கள்—இவையாவும் சந்தேகமின்றி ஆரம்பகாலச் சோழர்களின் காலத்தவை! இதனை நிறுவ ஒரு கல்வெட்டுச் சான்றும் கிடைத்திருக்கிறது.

திருவானைக்காவிற்குக் கிழக்கே திருப்பாற்றுறை என்றோர் பாடல்பெற்ற சிவத்தலம் இருக்கிறது. இந்தச் சிவத்தலத்தில் ஒரு கல்வெட்டுக் காணப்படுகின்றது. இந்தக் கல்வெட்டு கி.பி. 961-ஆம் ஆண்டினது. திருவானைக்காக் கோவிலைப் பற்றிய குறிப்புகளைத் தருகிறது. கி.பி. 961-இல் திருவானைக்காக் கோவில் முதல் பிரகாரத் துடன் கூடிய ஒரு கற்றளியாகவாவது இருந்திருக்கவேண்டும் என்பதை உறுதிப்படுத்துகிறது. அவ்விடத்தில்—முதற் பிராகார மேற்கு மூலையில் — பெருங்கூட்டம் கூடியதாகக் குறிக்கிறது.

இதனோடு திருவானைக்காவிலேயே உள்ள கி.பி. 937-ஆம் வருடத்திய — பராந்தகன் காலத்திய—ஒரு கல்வெட்டையும் சேர்த்துக் கவனிக்கலாம். அந்தக் கல்வெட்டில் "மகாதேவ பிடாரருக்கு" என்ற சொற்களை மட்டும்தான் நாம் இப்பொழுது காணமுடிகிறது; அதற்கப்புறம் சிதைந்துள்ளது. இக் கல்வெட்டினால் சுவாமிக்கு ஏதோ நிவந்தம் செய்திருக்க வேண்டுமெனத் தெரிகிறது. இந்த இரண்டு கல்வெட்டுகளிலிருந்தும் கி. பி. 937-க்கு முன்னமேயே இக் கோவில் கற்றளியாக ஆகியிருக்க வேண்டும்; இரண்டு பிராகாரமும் முடிந் திருக்க வேண்டும்; கி. பி. 937-லேயே திருவானைக்காவில் சிறந்து விளங்கி, 'மகாதேவ பிடாரர்' என்ற பெரும் புகழை அடைந்திருக்க வேண்டும் என்பதனை அறியலாம்.

ஆதித்தன்தான் இதைக் கற்றளியாக ஆக்கியிருக்க முடியும். இவன் கி. பி. 870 இல் பட்டத்துக்கு வந்தான். கி. பி. 880வரை பல்லவ பாண்டியர் பகைமையால் தொல்லைகளுக்குள்ளானான். திருப்புறம் பயம் முதல் போருக்குப் பிறகுதான் சோழ மண்டலத்தில் ஆதித்த சோழன் ஆட்சி வலுவாக வேரூன்றியது. ஆகையால் கி. பி. 880-க்கு மேல் கி. பி. 907-க்குள் கோவில்கட்கு கற்றளி எடுப்பிக்கும் பணியை ஆதித்தன் மேற்கொண்டிருக்க வேண்டும்; அந்தக் காலத்தில்தான் திரு வானைக்காக் கோவிலுக்கும் கற்றளித் திருப்பணி நடந்திருக்கவேண்டும்.

கல்வெட்டுகள் கூறும் சரித்திரம்

இந்தக் கோவிலில் இதுவரை காணப்பட்ட கல்வெட்டுகளின் எண்ணிக்கை-146. இவைகளில் பராந்தகன் காலத்துக் கல்வெட்டை-அதாவது கி. பி. 937-வது வருடக் கல்வெட்டை முன்னரே பார்த்தோம். காலத்தால் முந்திய கல்வெட்டு அதுதான்.

அடுத்த பழமையான கல்வெட்டு முதல் குலோத்துங்க சோழனின் 47-ஆம் ஆட்சி ஆண்டினது (கி.பி. 1117). இது இரண்டாம் பிராகாரக் கீழ்ப்புறச் சுவரில் இருக்கின்றது. இது ரிஷப வாகன தேவர்க்கும், பிராட்டியாருக்கும் திருமஞ்சனம், திருவமுது படையல் செய்வதற்கு ஏற்படுத்தப்பட்ட நிவந்தத்தைத் தெரிவிக்கிறது.

குலோத்துங்கனுக்கு முன்னால் இராஜராசன், இராஜேந்திரன் முதலியவர்கள் ஆண்டிருக்கிறார்கள். அவர்கள் பெரும் சிவ பக்தர்கள். அவர்கள் ஏன் இப் பெருமை வாய்ந்த கோவிலுக்கு ஒன்றும் கொடுக்க வில்லை? திருப்பணியும் செய்யவில்லை? அவர்கள் காலத்திய கல்வெட்டு ஒன்றாவது இக் கோவிலில் இல்லாதது ஏன்? இதற்குக் காரணம் தெரியவில்லை.

முதல் குலோத்துங்க சோழனுக்குப் பிறகு இரண்டாம் இராஜ ராஜனின் இரண்டு கல்வெட்டுகள் கிடைக்கின்றன. இவனது கல் வெட்டுகள் இரண்டாம் பிராகாரத்தின் தென்புறச் சுவரில் காணப் படுகின்றன. இவை முக்கியமானவையல்ல.

மூன்றாம் குலோத்துங்கன் கல்வெட்டுகள்

இவனது கல்வெட்டுகள் 12. மூன்றாம் பிராகாரத்து மேற்குப் புறச் சுவரில் இரண்டு கல்வெட்டுகள் காணப்படுகின்றன. இவை 5-ஆம் ஆட்சியாண்டைச் சேர்ந்தவை (கி.பி. 1183). இவை முக்கிய மானவை அல்ல.

இன்னும் 4 கல்வெட்டுகள் அரசியல் சம்பந்தமானவை; ஒன்று சங்கமேசுவரன் கோபுரத்தின் இடதுபுறப் பகுதியில் காணப்படு கின்றது. இது கி.பி. 1184-ஆம் ஆண்டினது. இரண்டாம் கல்வெட்டு இரண்டாம் பிராகாரத்தில் உள்ள நடராசப் பெருமான் கோவிலுக்கு முன்னால் உள்ள மேற்குப் புறச் சுவரில் காணப்படுகிறது; கி. பி. 1185

-ஆம் ஆண்டினது. மூன்றும் கல்வெட்டு 18-ஆம் ஆட்சியாண்டினது; இக் கல்வெட்டு சங்கமேசுவர கோபுர இடது சுவரில் காணப்படுகிறது; நான்காம் கல்வெட்டு கோபுரத்தின் உள்நடையில் வலப்புறச் சுவரில் காணப்படுகிறது. 19-ஆம் ஆட்சியாண்டில் பொறிக்கப் பட்டது; இந்த நான்கு கல்வெட்டுகளும் பின்வரும் செய்திகளைத் தெரிவிக்கின்றன. 'சோழப் பேரரசுக்குட்பட்ட சிற்றரசர்கள் தம்முள் பிணக்குக் கொள்ள, அதன் காரணமாகச் சோழப் பேரரசுக்கு ஊறு நேர்ந்தபொழுது, இவன் தன்னுடைய திறமையினால் அவர்கள் பிணக்கு விலகும்படி செய்தான்; அதன்பயனாக அச் சிற்றரசர்கள் திருவானைக்கா உடையார்முன் பேரரசுக்கு ஒருவிதத் தீங்கும் செய்வதில்லை என்றும், அதற்குச் சாதகமாக வேண்டிய பணிகளைச் செய்வதாகவும் உறுதி மொழி எடுத்துக் கொண்டனர்' என்பன அக் கல்வெட்டுகளால் அறியவரும் செய்திகளாகும். தெய்வத்தின்முன் உறுதிமொழி எடுத்துக்கொண்டதை நோக்கும்போது அவர்களுக்கிருந்த தெய்வ நம்பிக்கை புலனாகின்றது.

அடுத்த 4 கல்வெட்டுகள் 21-ஆம் ஆட்சி ஆண்டினவை (கி. பி. 1199). மூன்றும் பிராகாரத்தின் தென்புறச் சுவரில் காணப்படுகின்றன. இவை முக்கியமானவை அல்ல.

அடுத்த 2 கல்வெட்டுகள் கோவிலின் நான்காம் பிராகாரமாகிய வீதியின் வடக்குப் புறத்திலுள்ள மடத்துக்கு மேற்குப்புறச் சுவரில் காணப்படுகின்றன. 'எண்ணாயிரவர் திருமடம்' ஒன்று அப்போது இருந்ததாகத் தெரிய வருகிறது. இந்த மடத்துச் சைவத் துறவிகளுக்கு அன்னம் அளிக்க நிலம் நிவந்தம் அளிப்பதற்கு வரி விலக்குச் செய்த செய்தி இதில் காணப்படுகிறது.

இக் கல்வெட்டுகளில் இறுதி இரண்டைத் தவிர மற்ற கல்வெட்டுகள் எல்லாம் மூன்றும் பிராகாரத்தின் சுவர்களிலும் சங்கமேசுவரர் கோபுரத்திலும் இருப்பதால், இந்த அரசன் (குலோத்துங்கன் III) காலத்துக்கு முன்னேயே சங்கமேசுவரன் கோபுரமும், மூன்று பிராகாரங்களும் கட்டி முடிந்திருக்க வேண்டும். இது குறிப்பிடத்தக்க செய்தியாகும்.

அப்படியானால் சங்கமேசுவரர் கோபுரத்துக்கு மேற்கில், மேற்குப் புறத்து நுழைவாயிலில் அதற்கு நேர் எதிரிணையாக இருக்கும் கார்த்திகைக் கோபுரமும் அதற்குக் கிழக்கிலிருக்கும் மணிமண்டப கோபுரமும் முடிந்து போய்விட்டனவா? கார்த்திகை கோபுரத்திலிருந்து கருவறைக்குப் போகும் மண்டபமும், மூன்றும் பிராகாரத்துச் சுற்றுச் சுவர்களும் கட்டடமாகி விட்டனவா? இவை ஆய்வுக்குரியன.

மூன்றும் இராஜராஜனின் கல்வெட்டுகள்

24 கல்வெட்டுகள் உள்ளன. இவன் கி. பி. 1216-இல் சிம்மாசன மேறினன். இவனது 17-ஆம் ஆட்சியாண்டிற்குரியனவாக 6 கல்

வெட்டுகள் உள்ளன. இவற்றுள் ஐந்து கல்வெட்டுகள் ஒரே நாளில் பொறிக்கப்பட்டவை. அதாவது கி. பி. 1233-இல் பொறிக்கப்பட்ட நான்கு கல்வெட்டுகள் மூன்றும் பிராகாரத்துத் தென்புறச் சுவரில் காணப்படுகின்றன. இவை முக்கியமானவையல்ல. இவை நிலம் விற்றுக் கொடுத்த செய்தியைத் தெரிவிப்பனவாகும்.

அடுத்த கல்வெட்டு மூன்றும் பிராகாரத்து வலதுபுறச் சுவரில் காணப்படுகிறது. காலம் கி. பி. 1233. இக் கல்வெட்டு நல்ல தமிழில் எழுதப்பட்டுள்ளது ; சட்ட அறிவைக் காட்டுகிறது; பத்திரம் எழுதும் போது காட்டிய ஜாக்கிரதையையும் காட்டுகிறது. மெய்க்கீர்த்தி கம்பீரமான நடையிலிருப்பதால், இக் கல்வெட்டிலிருந்து சில வரிகளை மட்டும் இங்குக் காண்போம் :

"சுவஸ்தி ஸ்ரீ சிர் மன்னி
இரு நான்கு திசை விளங்கு
திருமடந்தையும் புவிமடந்தையும் மணம்புணர
அருமறைகள் நெறிவாழ
அருந்தமிழர் கிளைவாழ
பொருவில்மனு நெறிவாழ
பொன்மகுடம் கவித்தருளி
வெண்கோபக் கருங்கலிப் பகைவீட
நாகடிப்படர் செங்கோலும் கொடிப்புலியும்
திகிரிவரை வரம்பளக்க
எண்டிசா முகத்து எண்கரிக்கு
எடுத்த தனிக்கூடமென
அண்ட கூடமுற நிமிர்ந்து
முழுமதிக்குடை நின்று அழகெறிப்ப
நடுவுநின்று குடிகாத்து
நன்றுற்றும் திறம் புணர்ந்து
கடிது இழைத்த உட்பகையும்
புறப்பகையும் அறக்கடிந்து
பொலன்திகிரி பதினான்கு
புவனங்களும் அடிப்படுத்தி
இலங்குகதிர் வடமேருவிலிருந்து
வயப்புலி ஏறன்ன செம்பொன்வீர சிம்மாசனத்து
புவனம் முழுதுடையாளொடும்
வீற்றிருந்து அருளிய கோராஜகேசரி—
வர்மரான திரிபுவன சக்கரவர்த்திகள்
ஸ்ரீ ராஜராஜதேவர்க்கு —"

இவனது பிற கல்வெட்டுகள்

கி. பி. 1236-ஆம் வருடத்து கல்வெட்டுகள் இரண்டனுள் ஒன்று, மூன்றும் பிராகாரத்து மேற்குப் புறச்சுவரில் காணப்படுகிறது. இது திருவானைக்காக் கோவிலுக்கு 18 காவலர்களை நியமித்த செய்தியைக் கூறுகிறது. மற்றது மூன்றும் பிராகாரத்துக் கிழ்ப்புறச் சுவரில் காணப் படுகிறது. இது நிலம் வாங்கியளித்த செய்தியைக் குறிப்பது; முக்கிய மானதன்று. மேலும், மூன்றும் பிராகாரத்து வடபுறச் சுவரில் ஒரு கல்வெட்டுக் காணப்படுகிறது. இது ஒரு ஓடக்காரன் மற்றொரு ஓடக் காரனுக்காகவும், தனக்காகவும் ஓடப்பாக்கி நாற்பதினுயிரம் காசுக்கு எழுதிக் கொடுத்த ஒப்பந்தத்தைக் குறிக்கிறது. அடுத்தது இவனது 24ஆம் ஆட்சியாண்டினது (கி. பி. 1240). இது மூன்றும் பிராகாரத்துத் தென்புறச் சுவரில் காணப்படுகிறது. இது நிலம் விற்ற செய்தியைக் குறிப்பது; முக்கியமானதன்று. இவனது 29ஆம் ஆட்சி ஆண்டுக் கல்வெட்டு ஒன்று, மூன்றும் பிராகாரத்து வடபுறச் சுவரில் காணப் படுகிறது. திருவானைக்காக் கோவிலுக்கு நிலத்தைத் தானமாகக் கொடுத்த செய்தி இதில் காணப்படுகிறது. இந்த மூன்றும் இராஜ ராஜன் காலத்தில் திருவானைக்கா உடையாருக்குப் பலரிடமிருந்து நிலம் கிடைத்திருக்கின்றது.

புதுக்கோட்டைக் கல்வெட்டு

இந்தப் புதுக்கோட்டைக் கல்வெட்டு இவனது 24ஆம் ஆட்சி ஆண்டில் (கி. பி. 1240) பொறிக்கப்பட்டது. இதில் திருவானைக் காவில் உள்ள 'அகிலாண்ட நாயகி திருமடம்' என்ற திருமடத்தில், அப்போது மடாதிபதியாய் இருந்த விசுவேசுவரஜீயர் என்ப வருக்கு மடப்புற இறையிலியாக நிலம் விற்ற செய்தி குறிப்பிடப் பட்டுள்ளது.

விஸ்வேசுவரஜீயர் (ஐயர்)

விஸ்வேசுவரஜீயர் ஆந்திர நாட்டிலுள்ள வாரங்கல் நகரைத் தலைநகராகக் கொண்டு அரசாண்ட காகதிய மன்னனுன கணபதி என்பவருக்கு இராஜகுருவாக விளங்கியவர். இவர் மத்த மயூர வம் சத்துச் சிவாச்சாரியர் பரம்பரையில் வந்தவர் என்று சொல்லப் படுகிறது. இவரைப்பற்றி வடநாட்டிலுள்ள பல கல்வெட்டுகள் சிறப்பித்துக் கூறுகின்றன என்று திரு. இராமமூர்த்தி சொல்லு கிறர். பேராசிரியர் கில்ஹாரனும் இவரைப் பற்றி விரிவாக எழுதியுள்ளதாகவும் தெரிகிறது. ஆகவே, 13ஆம் நூற்றுண்டிலே திருவானைக்கா பாரதம் முழுதும் போற்றிய சைவத் துறவியை ஈர்க்கும் அளவிற்குச் சிறப்புப் பெற்று விளங்கியது. சைவ சமயத்தின் ஒரு பெரு மையமாகவும் (great centre) விளங்கியது. விஸ்வேசுவரர் பாசுபத சமயத்தைச் சேர்ந்தவர் என்று சிலர் கருதுகின்றனர்; ஆனுல், சுத்த சைவ சமயத்தைச் சேர்ந்தவரென்று மற்றவர்கள் கூறு கின்றுர்கள்.

விஸ்வேசுவரர் திருவானைக்காவில் இருந்த அகிலாண்ட நாயகி மடத்திற்குத் தலைமைப் பீடாதிபதியாக இருந்துள்ளார்.

இந்த அகிலாண்ட நாயகி மடம் பாரதம் முழுதும் பரவியிருந்த 'கோலகி மட'த்தின் ஒரு கிளை. கோலகி என்ருல் வட்ட வடிவமானது என்று பொருள். இந்த மடத்தார்கள் நதிக்கரைகளிலும், கோவில்களுக்கு அருகிலும், வட்ட வடிவமான மடங்கள் கட்டி வழிபாடு, மத போதனை முதலியவைகளைச் செய்து வந்ததால், அவைகளுக்குக் 'கோலகி மடம்' என்று பெயர் வந்தது போலும்.

திருவானைக்காவில் இரண்டாம் பிரதாப ருத்ர மகாராஜனின் கல்வெட்டு ஒன்று இரண்டாம் பிராகார மேற்குப்புறச் சுவரில் காணப்படுகிறது. இக் கல்வெட்டில் "காகதாய ஸ்தாபனுச்சார்ய" என்ற வாசகம் இருக்கிறது. இது விஸ்வேசுவரஜீயரைத்தான் குறிக்கிறதென்று திரு. இராமமூர்த்தி சொல்லுகிருர். இந்தக் கல்வெட்டில் 'சுவாமிதேவர்' என்று ஒரு வரியும் காணப்படுகிறது. இந்தச் சுவாமிதேவர் மூன்ரும் குலோத்துங்க சோழனுக்கு இராஜகுருவாக இருந்தார் என்றும் தெரிகிறது. 'சுவாமிதேவர்' — என்று ஒருவர் பெயரும் வீரராமநாதனுர் காலத்துக் கல்வெட்டில் காணப்படுகிறது. இந்தச் சுவாமிதேவர் என்பவரே மூன்ரும் குலோத்துங்கனுக்கு ராஜகுருவாக இருந்தவர் என்று திரு. இராமமூர்த்தி கருதுகிருர். இவையெல்லாம் ஆய்வுக்குரியன. இப்போது வீரராமநாதனின் கல்வெட்டுகளைப் பார்ப்போம்.

வீரராமநாதன் 14ஆம் ஆட்சி ஆண்டு கல்வெட்டு (கி. பி. 1269 இல்) இரண்டாம் பிராகாரத்து வடபுறத்துச் சுற்றுமாளிகைச் சுவரில் காணப்படுகிறது. இந்தக் கல்வெட்டு பலப்பள்ளி நீலகண்ட நாயக்கர் என்பவர் அகிலாண்ட நாயகி கோயிலுக்கு முன்னுல் உள்ள கோசாலையில், தாம் எழுந்தருளுவித்த பசுபதிஸ்வர சுவாமி உடையாருக்கு நித்திய வழிபாட்டிற்கு நிவந்தமாக ஒரு பகுதி நிலம் கொடுத்திருக்கிருர். இப்பொழுது அகிலாண்டேசுவரி முன்னுல் உள்ள வட்டவடிவமான கோவிலைத்தான் பசுபதிஸ்வர உடையார் கோயில் என்று திரு. இராமமூர்த்தி கருதுகிருர். அகிலாண்ட நாயகி மடமும் அங்கேதான் இருந்திருக்க வேண்டுமென்றும் கருதுகிருர். இது ஆய்வுக்குரியது.

மூன்ரும் இராஜராஜனின் மகன் மூன்ரும் இராசேந்திரன் கல்வெட்டுகள்

இரண்டு கல்வெட்டுகளில் முக்கியமான விஷயம் ஒன்றுமில்லை. மூன்ரும் கல்வெட்டு மூன்ரும் ஆட்சி ஆண்டைக் குறிப்பது; திருவானைக்கா உடையார் வழிபாட்டிற்கு 36 வேலி நிலத்தின் வரிப் பணத்தை அளித்ததைக் குறிக்கிறது.

நான்காவது கல்வெட்டு: இது இவனது ஆரும் ஆட்சி ஆண்டினது. இக் கல்வெட்டு சிங்கண்ண தண்ட நாயக்கன் என்பவன் தான் கட்டிய

சித்தேஸ்வரம் என்னும் கோவிலில் வழிபாட்டிற்கென நிலம் வாங்கி அளித்த செய்தியைத் தெரிவிக்கிறது. இந்தக் கல்வெட்டு விபூதி பிராகாரத்தின் உட்புறச் சுவரில் காணப்படுவதாகத் தெரிகிறது. ஆனல், எங்கென்றுதான் அறிய முடியவில்லை. இந்தச் சிங்கண்ணதண்ட நாயக்கன் போசள மன்னன் வீரசோமஸ்வரனின் படைத்தலைவன்.

போசள மன்னர்களின் கல்வெட்டுகள்

மூன்ரும் இராஜராஜனின் காலம் முதலே போசள மன்னர்கள் சோழநாட்டு அரசியலில் பெரும்பங்கு கொள்ளத் தொடங்கி விட்டனர். காரணம் என்னவென்ருல், மூன்ரும் இராஜராஜன் போசள வீரநரசிம்மனின் மகளை மணந்திருந்ததேயாம். இவ்வுறவால் தனி அரசு நிறுவி, தமிழகம் முழுவதையும் தம் ஆளுகைக்குக் கொண்டு வர முயன்ற பாண்டிய மன்னர்களால், மூன்ரும் இராஜராஜன் பெருந்துன்பம் அனுபவித்தான்; அந்தத் துன்பத்தில் இருந்து அவனை மீட்டு ஆட்சி உரிமையை வழங்கியதில் இந்த வீரநரசிம்மனுக்குப் பெரும்பங்குண்டு. இவன் தன்னைச் "சோழ ராஜ்ய பிரதிஷ்டாசாரியன்" எனக் கூறிக் கொண்டான். தமிழகத்தில் இவர்கள் (போசளர்கள்) இப்பொழுது சமயபுரம் என வழங்கும் கண்ணனூரைத் தங்கள் தலைநகராகக் கொண்டு சோழ மண்டலத்தில் ஒரு பகுதிக்கு அரசர்களாய் விளங்கி வந்தனர்.

வீரசோமேஸ்வர தேவனின் கல்வெட்டுகள்

இம் மன்னனது கல்வெட்டுகள் மொத்தம் பதின்மூன்று. இவனது இருபத்திரண்டாம் ஆட்சி ஆண்டுக் கல்வெட்டு ஒன்று, தியாகப்பெருமான் என்பவன் மூன்ரும் பிராகாரத்தில் தியாகவினேதீஸ்வரர் என்ற பெயரில் கோவில் ஒன்றை எழுப்பித்து, சண்டேசுவர தேவருக்கு திருவாசி ஒன்று செய்து அளித்தான் என்ற செய்தியைக் காட்டுகிறது. இந்தத் தியாகவினேதீஸ்வரம் எது என்று தெரியவில்லை. இவனது மற்ரெரு கல்வெட்டு வடதிருவானைக்காவில், இவன் வல்லாளீஸ்வரம், பதுமாளீஸ்வரம், போசளேஸ்வரம், சோமளீஸ்வரம் என்ற பெயர்களில் தன்னுடைய பாட்டனர், தந்தை, தாய் முதலானேர் நினைவாகச் சிறு கோவில்களை எழுப்புவித்தமையைத் தெரிவிக்கிறது.

இன்னெரு சிதைந்த கல்வெட்டு (மூன்ரும் கல்வெட்டு) இவன் திருவானைக்காக் கோவிலில் எழுநிலை கோபுரம் ஒன்று எடுக்கத் தொடங்கிய செய்தியைத் தெரிவிக்கிறது. இந்தக் கோபுரம்தான் இப்பொழுது 'சுந்தர பாண்டியன் கோபுரம்' என்று வழங்கப்படுகிறது.

மாறவர்ம சுந்தர பாண்டியன் கல்வெட்டுகள்

இவனுடைய கல்வெட்டுகள் மூன்றனுள் ஒன்று, இவனது நான்காவது ஆட்சி ஆண்டில் பொறிக்கப்பட்டது (கி.பி. 1240). இக் கல்வெட்டு முதல் பிராகாரத்து வடபுறத்துச் சுவரில் காணப்படுகிறது. இதில்

அகிலாண்ட நாயகிக்கும், திருவானைக்கா உடையாருக்கும் உள்ள நகைகள், மற்றப் பொருள்கள் ஆகியவற்றின் விவரம் காணப்படுகிறது. இதற்குப் பக்கத்தில் இருக்கும் இரு கல்வெட்டுகள் முக்கியமானவை யல்ல.

இவனது ஏழாம் ஆட்சி ஆண்டில் ஏற்பட்ட மற்றொரு கல்வெட்டு, இவன் தன் பெயரால் "சுந்தர பாண்டியன் சந்தி" என்று ஒரு கால பூஜை நடத்த நிலத்தை அளித்ததையும், இவனுடைய பிறந்த தினமான புரட்டாசி மாதம் அவிட்ட நாளில் திருவிழா ஒன்று ஏற்படுத்தியதையும் இக் கல்வெட்டுத் தெரிவிக்கிறது. உற்சவ மண்டபத்தின் உள்ளே இரண்டாம் பிராகாரத்து மேலைப்புறச் சுவரில் காணப்படுகிறது.

ஜாவலதேவியின் அருள் உள்ளம்

வீரசோமேஸ்வரனின் மற்றொரு கல்வெட்டு அரசி ஜாவலதேவி திருவானைக்கா உடையாருக்கு ஒவ்வோர் ஆண்டும், திருவிழா நடத்துவதற்கும், திரு ஆபரணம் செய்து சாத்தவும், நிலம் விட்ட செய்தியைத் தெரிவிக்கிறது. இவனது இருபத்தொன்றும் ஆண்டுக் கல்வெட்டு ஒன்றிலிருந்து (கி. பி. 1254) கோவில் நிர்வாகக் குழுவில் இருந்த ஒருவன் தன்னிடமிருந்த ஆறு மா நிலத்தை விற்றதாகத் தெரிகிறது. அந்த ஜாவலதேவி வாங்கின நிலத்தை உடையாருக்கே நிவந்தமாகக் கொடுத்துவிட்டார். இன்னொரு கல்வெட்டில் இதில் கண்ட ஜாவலதேவியின் கணவன் ஜாவலதேவன் என்பான் காஷ்மீர தேசத்து சௌபான குலத்தினன் எனவும், நாராயண பீம தேவன் என்ற அரசனின் மகன் என்றும் குறிக்கப்பட்டுள்ளது. ஆகவே, ஆனைக்கா அண்ணலின் பெருமை காஷ்மீர தேசம் வரையிலும் பரவி இருந்தது என்று புலப்படுகிறது.

சுந்தர பாண்டியனின் பிற கல்வெட்டுகள்

இவனது நாலாம் ஆட்சி ஆண்டுக் கல்வெட்டு ஒன்றிலிருந்து இவன் நான்காம் பிராகாரத்தின் சங்கர நயினார் கோவில் எடுப்பித்தான் என்று தெரிகிறது. இக் கோவில் இறைவன் பூசைக்கென, அழகிய மணவாள நல்லூர் முதலிய கிராமங்களில் இருந்து ஆயிரம் கலம் நெல் நிவந்தம் அளித்த செய்தியைத் தெரிவிக்கிறது. இந்தச் சங்கர நயினார் கோவில் இப்பொழுது வழங்கப்படும் சங்கராலயமா? இது ஆய்விற்குரியது.

இன்னொரு கல்வெட்டு இவனது மூன்றும் ஆட்சி ஆண்டினது. இவன் திருவானைக்கா உடையாருக்கு மாசி மாதத்தில் ஒரு திருவிழா நடத்த நிலம் நிவந்தம் விட்ட செய்தியைத் தெரிவிக்கிறது. அடுத்து இன்னொரு கல்வெட்டு வெள்ளத்தில் சேதம் கொண்டதைச் சரிப்படுத்தினான் என்று தெரிவிக்கிறது. இந்தக் கல்வெட்டு இருபத்தைந்தாம் ஆண்டினது.

இன்னொரு கல்வெட்டு ஐந்தாம் ஆட்சி ஆண்டினது. இவன் சோமளாதேவிக்கு ஒரு பள்ளிப்படைக் கோவில் சோமளீஸ்வரம் என்ற பெயரில் கட்டியதைத் தெரிவிக்கிறது. இவன் காலத்தில் 'சங்கர தேவர் மடம்' ஒன்று இருந்ததையும் அதற்குச் சில நிலம் வரி விலக்கு அளித்ததையும் காட்டுகிறது.

போசள வீரராமநாத தேவனின் கல்வெட்டு

கல்வெட்டுகள் ஆறு. அவைகளில் இரண்டு கல்வெட்டுகள் கோலகி மடம் பகுதியில் கண்டோம். மற்ற நான்கில் ஒன்று இவனது ஆறும் ஆட்சி ஆண்டினது; மூன்றும் பிராகாரத்து மேற்புறச் சுவரில் காணப் படுகிறது. இதில் இரண்டாம் பிராகாரத்து மேற்கு மூலையில் கருப்பூர் ஞானசம்பந்தன் என்பவன், உற்சவ மண்டபத்தின் உள்ளே தான் கோவில் கட்டி எழுந்தருளிவித்த—"ஸ்ரீ பாதேஸ்வரமுடைய நாய னுருக்கு" (நடராஜபெருமான்) நிவந்தமாக நிலம் விலைக்கு வாங்கி விட்ட செய்தியைக் கூறுகிறது. ஆகவே இரண்டாம் பிராகாரத்து உற்சவ மண்டபத்துள் அமைந்துள்ள நடராசப் பெருமானின் கோவிலைக் கட்டியவன் வீரராமநாதன் காலத்தைச் சார்ந்த கருப்பூர் ஞானசம்பந்தன் எனத் தெரிகிறது. இது கவனிக்கத்தக்கது.

அடுத்த கல்வெட்டு இவனது ஏழாம் ஆட்சி ஆண்டினது; இரண் டாம் பிராகாரத்து மேற்புறச் சுவரில் காணப்படுகிறது. இதில் வீர ராமநாத தேவனின் மனைவியர்களுள் ஒருத்தியான அரியபிள்ளையாருக் குப் பிறந்த சிக்க சோமளாதேவி என்பவளுக்குத் திருவானைக்கா இறைவனின் அர்ச்சனு போகக் காணியான நாலு வேலி நிலத்தை நாற் பதாயிரம் காசுக்கு விற்று, அப் பணத்தையும் முன்னுள் திருவானைக்கா உடையாருக்குத் தங்கத்தினுல் சிம்ம வாகனம் செய்யச் சேமித்து வைத் திருந்த ஆயிரத்து நூறு காசையும் சேர்த்து ஆக நாற்பத்தோரா யிரத்துநூறு காசுக்குத் தங்கச் சிம்ம வாகனம் செய்வித்து வைத்த தோடு விற்ற நிலம் நாலு வேலியையும் மீண்டும் அர்ச்சனு போகக் காணியாகவே கொடுத்து, இதில் விளையும் நெல்லில் அரசாங்கத் திற்குச் சேரவேண்டிய கடமை போகப் பாக்கி நெல்லைக் கொண்டு திருவானைக்கா உடையாருக்கும், அகிலாண்ட நாயகியாருக்கும் உச்சி சந்தியில் அமுது படைக்க வகை செய்த செய்தி காணப்படுகிறது.

இதற்கு அடுத்த கல்வெட்டு இவனது ஆறும் ஆட்சி ஆண்டினது. இரண்டாம் பிராகாரத்துத் தென்புறச் சுவரில் காணப்படுகிறது. இதில் வடதிருவானைக்காக் கோவிலில் உள்ள சங்கமேஸ்வர உடையாருக்கு நிலம் கொடுத்த செய்தி காணப்படுகின்றது.

சடையவர்மனின் ஐந்து கல்வெட்டுகள்

இந்த முதலாம் சடையவர்மன் சுந்தரபாண்டியன் பெருவலிமையும், ராஜதந்திரச் சிறப்பும் உடையவன். தமிழ்நாட்டு மன்னர்கள் தம்மை மீறி வலிவு அடையாத வகையில் திட்டங்கள் தீட்டிக் கண்ணனூரைத்

தலைநகராகக்கொண்டு, தமது ஆணையை நிலைநிறுத்தி, அந்நாள் வரை (கி. பி. 1251) போசள மன்னர்கள் ஆண்டு வந்தார்கள். ஆனால் கி. பி. 1251-ல் சடையவர்மன் ஆளத் தொடங்கவே, போசள மன்னர் வலிமை குன்றியது.

இவனுடைய கல்வெட்டுகள் ஐந்தனுள் முதல் கல்வெட்டு பத்தாம் ஆட்சி ஆண்டினது; மூன்றும் பிராகாரத்துத் தெற்குச் சுவரில் காணப்படுகிறது. இதில் ஈழ மண்டலத்தை வென்றதால் இரண்டாம் 'இராமன்' என்றும் சோழகுலத்திற்கு 'அந்தகன்' என்றும் போசள 'அரசர்களை நாசமடையச் செய்தவன்' என்றும் தெலுங்குச் சோழனை வென்று, காஞ்சிபுரத்தைக் கைப்பற்றியதால், 'காஞ்சிபுரவா தீஸ்வரன்' என்ற பட்டம் பெற்றவன் என்றும் காகதிய அரசர்களை வென்று நெல்லூரில் வீராபிஷேகம் செய்து கொண்டான் என்றும் இவனுக்குப் புகழ் சூட்டியிருக்கிறார்கள்.

"கோச் சடாவர்மனான திருபுவன சக்கரவர்த்திகள் எம்மண்டலமும் கொண்டு அருளிய சுந்தர பாண்டிய தேவருக்கு, யாண்டு பத்தாவது, ரிசப ஞாயிற்று அமரபட்சத்து புதன்கிழமையும், பிரதமையும் பெற்ற அனுசத்து நாள்'' என்று மற்றொரு கல்வெட்டுக் கூறிச் செல்கிறது.''இதில் திருவானைக்கா உடையாரின் அர்ச்சனா போகக் காணியில் இருந்து, ஒரு வேலி நிலத்தை விற்று அந்தத் தொகைக்கு அகிலாண்ட நாயகியாருக்கும் ஆனைக்கா அண்ணலுக்கும், நெற்றிப் பட்டம் செய்து சாற்றிய செய்தியைத் தெரிவிக்கிறது. இடையே சிதைந்து இருப்பதால் செய்தியின் மற்ற பாகத்தை அறிய முடியவில்லை.

இன்னொரு கல்வெட்டு அடுத்த மூன்றாவது பிராகாரத்தில் மேற்புறச் சுவரில் நுழைவாயிலுக்கு இடப்புறத்தில் காணப்படுகிறது; ஜடாவர்மனின் பிறந்த நாளாகிய சித்திரை மூலத்தன்று இவன் சேர நாட்டை வென்று கைப்பற்றியதைக் குறித்து, சேரனை வென்றான் திருநாள் நடத்துவதற்கும், அந் நாளில் அபிஷேகம் திருவமுது ஆகியவற்றிற்காகவும் நிவந்த நிலங்கள் அளிக்கப்பட்டவைகளுக்கு, வரி விலக்கு அளித்த செய்தியைத் தெரிவிக்கிறது.

அடுத்துவரும் இரு கல்வெட்டுகள் சங்கமேஸ்வர கோபுர நுழைவாயிலின் வலதுபுறத்தில் காணப்படுகின்றன. ஒன்று, அரசனால் சோழ நாட்டையே ஒரு பாணர் குல அரசனுக்குக் கொடுக்கப்பட்ட செய்தியையும், மற்றொன்று பாண அரசின் குலப்புகழையும் தெரிவிக்கிறன. இதில், 'வீரமகதன்' என்பவன் பெயர் வருகிறது. சேலம் தென்னார்க்காடு பகுதிகளில் அடங்கிய ஒரு பகுதி அக் காலத்தில், 'மகத நாடு' என்று சொல்லப்பட்டது. மகதநாடு இப்பொழுது, 'ஆறகளூர்' என்று வழங்கப்படுகிறது. வீரமகதன் அதை ஒரு தலைநகரமாகக்கொண்டு ஆண்ட ஒரு சிற்றரசன். இவனது நாட்டைப் பாண்டியன் ஜடாவர்மன் வென்று, அடிமைப்படுத்தி பிறகு அவனிடமே அதைக் கொடுத்ததுமன்றியும் சோழநாட்டையும் அவனுக்கே நன்

கொடையாகக் கொடுத்து ஆட்சி உரிமையையும் தந்திருக்கிருன். இச் செய்தி சுந்தர பாண்டியனுடைய வடமொழி மெய்க்கீர்த்தியில் குறிப் பிடப்பட்டிருக்கிறது.

மாறவர்மன் குலசேகர பாண்டியன் கல்வெட்டு

ஒரே ஒரு கல்வெட்டு, இரண்டாம் பிராகாரத்து மேற்புறத்துச் சுவரில் காணப்படுகிறது. இப்பொழுது சிதைந்து இருக்கின்றது. ஆனல், முன்னலேயே முழுதும் எடுத்து எழுதி வைக்கப்பட்டுள்ளது.

பிரபுடதேவ மகாராஜன் கல்வெட்டு

பிரபுடதேவ மகாராஜர் விஜயநகர அரசர் பரம்பரையைச் சேர்ந் தவர். இவர் காலத்துக் கல்வெட்டு இரண்டாவது பிராகாரத்திலே நடராசர் கோவிலுக்கு முன்னல் இருக்கும் மேல் மட்டத்தில் காணப்படு கிறது. மன்னர் பெயர் காணப்படவில்லை. குறிப்பிட்டுள்ள ஆண்டும், ‘சிறுபராசர்’ என்ற சிற்றரசர் பெயரும் கி. பி. 1406-க்குப் பொருத்த மாக இருக்கிறது. பிரபுடதேவர் கி. பி. 1406 முதல் கி. பி. 1423 வரை அரசாண்டவர்.

இக் கல்வெட்டில் இம் மண்டபம் சிறுபராசரின் மகனை அன்னப் பையன் என்பவன் ஆணையின்பேரில் சங்கண்ணன் என்பவனுல் கட்டப் பட்டது என்ற செய்தி காணப்படுகிறது.

இதற்கு அடுத்த கல்வெட்டு மூன்றும் பிராகாரத்து மேற்புறச் சுவரில் காணப்படுகிறது; வீரப்பிரதாப தேவராயருடையது. இக் கல்வெட்டின் சரியான ஆண்டு கி. பி. 1428 ஆகும்.

சிறுபராசருக்கு, பிரதாப தேவராயர் தனது ஆதிக்கப் பகுதிகளுக் குள்ளே இருக்கும் சிவன் கோவில் விஷ்ணு கோவில்களில் அர்ச்சகர் களுக்குச் சேரவேண்டிய விபூதி காணிக்கை ஒன்றைத் தவிர, மற்றைய எல்லா வரிப் பணத்தையும் அந்தந்தக் கோவில்களுக்கே — அளித்து வழிபாடு சிறப்புடன் செய்யும்படி ஆணையிட்ட செய்தி கல்வெட்டில் காணப்படுகிறது.

இதே சுவரில் காணப்படும் மற்றெரு கல்வெட்டு — மூன்றும் பிரபுடதேவராயர் காலத்தது. (கி. பி. 1471.) இதில் திருவாணைக்கா கோவிலில் வழிபடும் உரிமைகளையும், மனைகளையும், நான்கு தரத்து ஸ்தானிகர்களும் தொண்டை மண்டலத்தில் பெருமான் என்பவருக்கு விற்ற செய்தி கூறப்பட்டுள்ளது.

கிருஷ்ணதேவராயர் கல்வெட்டு

புகழ்பெற்ற கிருஷ்ணதேவராயரின் முதல் கல்வெட்டு கி. பி. 1510 ஆண்டினது. இக் கல்வெட்டு இரண்டாம் பிராகாரத்து வடபுறச்

சுவரில் காணப்படுகிறது. இதில் கிருஷ்ணதேவராயரது அதிகாரியான வாசல் மல்லப்ப நாயக்கரின் மகன், திம்மப்ப நாயக்கன் திருவானைக்காப் பெருமானுக்கும் அகிலாண்ட நாயகியார்க்கும் நித்திய வழிபாட்டிற்கு நிலம் நிவந்தமிட்ட செய்தி குறிப்பிடப்படுகிறது.

அடுத்த கல்வெட்டு கி. பி. 1520ஆம் ஆண்டினது. மேலே சொன்ன கல்வெட்டில் கூறப்பட்ட திம்மப்ப நாயக்கர் ஒவ்வோர் ஆண்டிலும் பிரம்மோத்சவத்தில் இரண்டாவது திருநாளன்று கிருஷ்ணதேவராயரது நன்மையைக் கருதி, ஒரு மண்டகப்படி ஏற்படுத்தி அதற்கு வடுவூரில் நிலம் விட்ட செய்தியைத் தெரிவிக்கிறது.

மல்லப்பன் கோபுரத்தில் காணப்படும் கிரந்தக் கல்வெட்டு

இந்த விஜயநகர வேந்தர்களது காலத்தில், திருவானைக்காக் கோவிலில் இரண்டு ராஜ கோபுரங்கள் கட்டப்பட்டிருக்க வேண்டுமென்று தெரிகிறது. ஒன்றிற்குக் கல்வெட்டு இருக்கின்றது. மற்றொன்றிற்குக் கல்வெட்டு இல்லை. இப்பொழுது மல்லப்பன் கோபுரத்தில் காணப்படும் கிரந்தக் கல்வெட்டு கி. பி. 1435ஆம் ஆண்டினது. இந்தக் கோபுரத்தை இவ்வாண்டில் வசிஷ்ட கோத்திரத்தைச் சேர்ந்த ஆதித்த தேவன் என்பவனின் மகன் சந்திரபேந்திரன் என்பவன் கட்டினான் என்று கூறப்படுகிறது. சந்திரபேந்திரன், அரசனாகத் தெரியவில்லை; அதிகாரியாக இருக்கலாம். இதைப் பற்றி இன்னும் ஆய்வு செய்ய வேண்டியிருக்கிறது.

ஆரவிட்டான் கோபுரம்

சேக்கிழாரும் சுந்தரரும் குறிப்பிடும் சோழன் ஒருவன் தன் ஆரத்தை ஆற்றில் நழுவவிட, அவன் பெருமானே என்று வேண்ட, அந்த ஆரத்தைத் திருமஞ்சனக்குடத்தில் விழச் செய்து, அதைச் சோழன் வந்து வழிபடும்போது சுவாமி அணிந்திருந்தார். இதனால் ஆரவிட்டான் கோபுரம் அந்தச் சோழனாலோ, அவன் ஞாபகமாகவோ கட்டப்பட்டு இருக்கலாம் என்று திரு. இராமமூர்த்தி என்பவர் நினைக்கின்றார். வேறு விதமாக மற்றவர் நினைக்கின்றனர். இது ஆய்வுக்குரியது.

மதுரையை ஆண்ட வீரப்பநாயக்கன் கல்வெட்டுகள்

ஏழு கல்வெட்டுகள் உண்டு. அவைகளில் ஐந்து மதுரை நாயக்கர் வம்சத்து முதல் அரசரான விஸ்வநாத நாயக்கரின் பேரனும் கிருஷ்ணப்ப நாயக்கர் மகனும் ஆன வீரப்பநாயக்கரின் காலத்தவை. வீரப்பநாயக்கர் கி.பி. 1572-1592 வரையில் ஆண்டவர்.

முதல் கல்வெட்டு, கிழக்குப்புறச் சுந்தர பாண்டியன் கோபுரத்திற்குக் கீழ்ப் பாகத்தில் ஒரு மடம் இருந்ததைத் தெரிவிக்கிறது. 'ஏகவீரம்மாள் மடம்' என்று பெயர். காளி தேவியை அதிஷ்டான தேவதையாகக் கொண்டதால் ஏகவீரம்மாள் மடம் என்று பெயர்

வந்திருக்கிறது. அது இடிந்த நிலையில் இருக்கிறது. அங்கே ஒரு பெரிய கல் இருக்கின்றது. தமிழும் கிரந்தமும் கலந்த மணிப்பிரவாள நடையில் எழுதப்பட்டிருக்கிறது. இதில் குறிக்கப்படும் ஆண்டு கி. பி. 1586 ஆகத் தெரிகிறது. இக் கல்வெட்டு சந்திரசேகர குருவுடையார் என்னும் பாசுபத கிரகஸ்தருக்கு அளித்த திருமுகமாகத் தெரிகிறது. இவர் குலசேகர பீடத்தின் தலைவராக நியமிக்கப்பட்ட செய்தியை இத்திரு முகம் உணர்த்துகிறது. கிருகஸ்தர்களுக்கு எப்படித் தலைமைப் பதவி ஏற்பட்டது? நடுவில் ஒரு மாற்றம் ஏற்பட்டிருக்கிறது. இந்த மடத்தைப் பற்றியும் இதன் தலைமைப் பதவியைப் பற்றியும் இன்னும் நன்ருக ஆய்வு செய்யவேண்டும்.

அடுத்த கல்வெட்டு கி.பி. 1595ஆம் ஆண்டினது. மேலக் கோபுரத்திற்கு அருகே காணப்படுகிறது. வேலைக்காரக் குடும்பத்தினரால்— தலைவனுக்குக் கிடைத்து வந்த 41 பொன்னை—அவரால் எழுந்தருளச் செய்யப்பட்ட கங்காள நாதற்குப் பிரம்ம உத்ஸவத்தில் நிவேதனத்திற்கு நிவந்தம் விடுத்த செய்தி கூறப்பட்டுள்ளது. இவர்கள்—இந்த வேலைக்காரக் குடும்பத்தார்—கி. பி. 1404-1406-இல்—வீர விருப்பண்ண உடையார் காலத்தில் குடியேற்றப்பட்டவர்களாகத் தெரிகிறது.

இன்னெரு கல்வெட்டு—கி. பி. 1595-ல் திருவானைக்காவில் வேதம் கற்றுக் கொடுக்கும் பாடசாலை ஒன்றில் பயிலும் மாணவர்களுக்கும் நிர்வாகிகளுக்கும் உணவு முதலானவை அளிக்க நெல் நிவந்தம் அளித்த செய்தியைக் கூறுகிறது.

ஆனைக்கா அண்ணல் நுழைவாயிலில் இரு துவார பாலகர்கள் வைக்கப்பட்டிருக்கிருர்கள். தெய்வாங்கப் பெருமாள் என்பவன் செய்து வைத்ததாக அந்த உருவங்களின் பாதங்களில் பொறிக்கப் பட்டிருக்கிறது. மற்றைய கல்வெட்டுகள் கி.பி. 1707-1736 வரை மதுரையை ஆண்ட, விஜயரங்க சொக்கநாதருடையதாகும். இவற்றுள் ஒன்று இவர் திருவானைக்கா அண்ணலின் மேல் வைத்த அளவில்லாத பக்தியைத் தெரிவிக்கும். அடுத்தது சம்புதீர்த்த குளக்கரை மண்டபத் தரையில் காணப்படுகிறது. சம்பு தீர்த்தக் குளத்தின் படிக்கட்டுகளையும் வெங்கடேஸ்வர ஐயர் என்பவர் கட்டிய செய்தியைத் தெரிவிக்கிறது. இவர் மதுரை நாடக சாலையின் ஆசிரியர்.

சதாசிவ தீட்சிதரின் கல்வெட்டுகள்

இவர் குலசேகர பீடத்தின் மூன்ருவது பீடாதிபதி ஆவர்; பாசுபத கிரகஸ்தர்; ஆனைக்கா அண்ணலின் மீது எல்லையற்ற பக்தி பூண்டவர்; எல்லாராலும் மதிக்கப்பட்டவர். ‘ஐயர்கள் ஐயர்’ என்று போற்றப் பட்டிருக்கிருர். அந்தக் குடும்பத்திற்கே அந்தப் பெயர் வந்திருக்கிறது.

இவரும் நெருரில் சமாதி அடைந்த சதாசிவ பிரம்மேந்திராளும் ஒருவரேயா? அல்லது வெவ்வேறினரா?—இது ஆய்வுக்குரியது.

இந்தச் சதாசிவ தீட்சிதர் கல்வெட்டுகளாக 32 கல்வெட்டுகள் இருக்கின்றன. கீழ்ப்புறத்துச் சங்கராலய கோபுரம்—சங்கமேஸ்வர கோபுரத்திற்கு அடுத்திருப்பது இவரால் கட்டப்பட்டது என்று சொல்லப்படுகிறது—இது ஆய்வுக்குரியது.

சதாசிவ தீட்சிதர் மிகப் பெரியவர். இவர் 60 ஆண்டுக் காலம் தர்ம கருத்தாவாக விளங்கினுர். இந்த அறுபது ஆண்டுகளில் பல திருப்பணிகளைச் செய்துள்ளார். திருவானைக்காவில் உள்ள உற்சவ மண்டபம், சங்கராலயத்தில் சில பகுதிகள் ஆகியவை இவரால் கட்டப்பட்டவை என்று தெரிகிறது. ‘தாருகா விலாச மண்டபம்’ எங்கு உள்ளது என்று தெரியவில்லை. உற்ஸவ மண்டபத்தில் ஒரு சிலை இருக்கின்றது. அது சதாசிவ தீட்சிதரின் சிலையென்று நண்பர் திரு. இராமமூர்த்தி கருதுகிறுர்.

இன்னும் சில கல்வெட்டுகள் இருக்கின்றன. அவைகளைப் பரிசீலிக்க வேண்டும்.

கடைசியாகத் திருநீறிட்டான் மதிலைப் பற்றிச் சில வார்த்தைகள் சொல்லி இந்த உரையைப் பூர்த்தி செய்கிறேன்.

5 ஆம் பிராகாரத்துச் சுவர்-கிழக்கு மேற்காய்ச் சுமார் 2500 அடி நீளமுள்ளது; தென் வடலில் 1600 அடி அகலம் உள்ளது. 30 அடி உயரம் உள்ளது. இந்தச் சுவர் 6 அடி கனமுள்ளது. எவரையும் கவர்ச்சி செய்யும் இந்தச் சுவர், புராணப்படியும் பெரியவர்கள் நம்பிக்கைப் படியும் சிவனே சித்த வேடம் கொண்டு எழுந்தருளி விபூதியைக் கூலியாகக் கொடுத்துக் கட்டியது என்பது கொள்கை. தெய்விகம் பொருந்தியது. சிவனே தாம் கட்டும்பொழுது இதைச்சுற்றி வருபவருக்குத் தீங்குகள் நீங்கி நன்மைகள் உண்டாகும் என்று நிர்மாணித்தார். அப்படியே மக்கள் வேண்டிக்கொண்டு நலனைப் பெற்று வந்திருக்கிறுர்கள்.

இந்தச் சுவரில் வடபுறத்தில் நுழைவாயிலுக்குப் பக்கமாக ஒரு கல்வெட்டு உள்ளது அந்த இடத்தில் மீன் அடையாளம் பொறிக்கப்பட்டு இருக்கிறது. சுந்தரபாண்டியன் என்று அடியில் பொறிக்கப்பட்டிருக்கிறது. இதிலிருந்து சிலர், இந்தச் சுவர் ஒரு பாண்டியனுல் கட்டப்பட்டிருக்க வேண்டுமென்று கருதுகிறுர்கள். பாண்டியன் கட்டியிருந்தால்—மாறவர்மன் அல்லது ஜடாவர்மன் கட்டியிருக்க வேண்டும்; அப்படியிருந்தால் அவர்கள் கல்வெட்டுக் காணப்படவேண்டும். அப்படி ஒன்றும் காணப்படவில்லை. அப்படி அவர்கள் கட்டியிருந்தால், “திருநீறிட்டான் மதில்” என்று எழுதப்பட வேண்டியதில்லை. மாறவர்மனுக்கோ, ஜடாவர்மனுக்கோ ‘திருநீறிட்டான்’ என்ற பட்டம் இல்லை. ஆகவே, சுந்தர பாண்டியன் என்பவன் இதைத் திருநீறிட்டான் அதாவது சிவபெருமான் இம் மதிலை உலகுக்காக நன்கொடையாகக் கொடுத்திருக்கிறுன் என்று பறைசாற்றுவதுபோல் தெரிகிறது.

“சித்தாய வேடத்தாய்” என்றும், “மதில் திருவானைக்காவாய்” என்றும் அப்பர் பாடி இருக்கிறுர். திருவானைக்கா மதிலில் உள்ளாய்

என்று பொருள்படும். அந்தப் பதிகத்தின் முதல் பாட்டில் வருகிறது. இதில் அவர் பாதத்தைக் கண்டால் அல்லல்கள் இல்லையென்றும் கம்பீர மாகச் சொல்கிறார்.

ஆகவே இந்தத் திருநீறிட்டான் மதில்மட்டும் இக் கோவிலுக்கு அப்பர் காலத்திற்கு முன்னால் 7ஆவது நூற்றாண்டிலேயே ஏற்பட்டிருக்க வேண்டும்; இரண்டாம் நூற்றாண்டில் செங்கணான் கட்டிய மாடக் கோவிலுக்குப் பாதுகாப்பாகக் கட்டப்பட்டிருக்கவேண்டும். இச் செய்தி பாத்ம புராணத்திலேயே விவரிக்கப்பட்டிருக்கிறது. பாத்ம புராணம் பாண்டியர் காலத்திற்கு முன்னதாகவே ஏற்பட்டது என்பதில் சந்தேகம் இல்லை. இந்த மதில் அந்தக் காலத்தில் ஊருக்கு அரண்; கோயிலுக்கு அரண். அந்தக் காலத்தில் அந்த இடத்தில் மதில் இல்லாவிட்டால் வெண்நாவல் ஈசனரை வழிபாடு செய்யமுடியாது. மேலும், அருணகிரிநாதர், "ஆழித்தேர் மறுகில் பயில் மெய்த் திருநீறிட்டான் மதில் சுற்றிய அப்பர் பிரியப்படும் பெருமாளே" என்று பாடியிருக் கிறார். சிவபெருமானே திருநீறு கொடுத்துக் கட்டியதை மெய்ப்பிக்கும் வகையில் பாடல்கள் அமைந்துள்ளன. ஏதோ ஒரு மனிதன் — போலி யானவன் — திருநீறிட்டான் என்ற பெயரை வைத்திருப்பவன் கட்டின தன்று என்பதை நிலைநிறுத்துகிறது. அப்படிச் சாதாரண மனிதன் (பெயர் மட்டும்) கட்டியிருந்தால் அது 'மெய்த்' திருநீறிட்டான் மதிலாகாது. அது 'பொய்' அல்லது 'போலித்' திருநீறிட்டான் மதி லாகும். மெய்யாகத் திருநீறு கொடுத்தவன் ஒருவன் — சிவனே — அவன் திருநீறு கொடுத்துக் கட்டியதை அருணகிரியார் மெய்ப்பிக் கிறார். எப்படியானாலும் இது ஆய்விற்கு உரியது.

கல்வெட்டில் காணாது 19ஆம் நூற்றாண்டில் ஆரம்பிக்கப்பட்டு 1908 வரையில் நடந்து, அந்த ஆண்டிலேயே சிறப்பாக நடந்தேறிய திருப்பணியையும் இங்குக் கூறலாம் என்று நினைக்கின்றேன். தமிழ் நாட்டில் கோயில் திருப்பணிகளில் நாட்டுக்கோட்டை நகரத்தார்கள் பெரும்பங்கு கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு நம் நன்றி. இந்தக் கோயிலில் கானாடுகாத்தான் எஸ். ஆர். எஸ். சிதம்பரம் செட்டியார் அவர்களும், அவர்கள் மகனார் எஸ். ஆர். எம். சி. இ. டி. இராமசாமி செட்டியார் அவர்களும் இருபது வருஷங்களுக்கு மேலாகத் தொடர்ந்து திருப்பணி செய்து வந்தார்கள். இப்பொழுது சுவாமி கோயில் கொடி மரத்திற்கு நான்கு புறமும் ஒவ்வொரு தூணிலும் 8 சிங்கங்கள் அமைத்து நான்கு தூண்களைக் கொண்டு ஒரு அருமையான திருப்பணி செய்திருக்கிறார்கள். யார் வந்தாலும் அதைப் பார்த்து வியப்பு அடை யாதவர், மகிழாதவர் இல்லை என்றே சொல்லலாம். அதற்கு வடக்கி லும் தெற்கிலும் அழகான உயர்ந்த நடைக்கூடம் அமைத்து இருக் கிறார்கள். சுவாமி கோவிலிலும், அம்மன் கோவிலிலும் பல உயர்ந்த திருப்பணி செய்திருக்கிறார்கள். அவர்களுக்குப்பின் அவர்கள் குடும்பமே திருப்பணியில் ஈடுபட்டிருக்கிறது. சிதம்பரம் செட்டியார் அவர்களுக்கும், அவர்கள் குடும்பத்தாருக்கும் பொதுமக்கள் நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறார்கள்.

2. திருவானைக்கா இலக்கியம்

'திருவானைக்கா இலக்கியம்' என்னும் பொருள் பற்றி, என் இரண்டாம் நாள் பணியை நிறைவேற்ற முன் வருகின்றேன்.

திருவானைக்கோவில், பழமையும் வரலாற்றுச் சிறப்பும், மூர்த்திப் பெருமையும் கொண்டு இலங்கும் திருக்கோயில் ஆகும்; அவைகளோடு இத் திருத்தலம் பல பெரியவர்களின் பாடல் பெற்ற இலக்கியச் சிறப்பையும் பெற்ற தலமாகும்.

இப்பொழுது நான் அறிந்த வரையில் திருவானைக்காவைப் பற்றித் தமிழில் பதினெட்டுப் பெரியவர்கள் பாடிய பாடல்கள் அச்சிடப்பட்டு, நூல்கள் வடிவில் நாட்டில் வழங்கி வருகின்றன என்பது தெரிய வருகிறது. திருவானைக்காத் தலத்திற்குப் பாமாலை சூட்டிய பெரியவர்களாவார்: கால வரிசையில் பின்வருமாறு:

1. ஐயடிகள் காடவர்கோன்
2. திருஞானசம்பந்த சுவாமிகள்
3. திருநாவுக்கரசு சுவாமிகள்
4. சுந்தரமூர்த்தி சுவாமிகள்
5. வாதவூரடிகள் மாணிக்கவாசகப் பெருமான்
6. கபிலதேவர்
7. சேக்கிழார் பெருமான்
8. காளமேகப் புலவர்
9. அருணகிரிநாத சுவாமிகள்
10. தாயுமான சுவாமிகள்
11. கச்சியப்ப சுவாமிகள்
12. மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளை
13. தண்டபாணி சுவாமிகள்
14. மனோன்மணி அம்மையார்
15. கே. வி. சுப்பையர் அவர்கள்
16. சிங்கார வடிவேல் வன்னியமுண்டார்
17. வேலாயுத சுவாமிகள்
18. அப்புலிங்கம்பிள்ளை அவர்கள்.

இப் பெரியவர்களின் பாடல்களே அல்லாமல் இன்னும் மூவருடைய பாடல்களும், என் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டன. ஆனால், அப் பாடல்கள் இன்னும் அச்சாகவில்லை.

1. அகிலாண்ட வல்லி ஆசிரிய விருத்தம்
2. திருவானைக்காத் திருப்பணி மாலை
3. தந்திவனப் புராணம்

என்னும் இம் மூன்று நூல்களும் அச்சிடப்படாமல் இருப்பன. இதில் தந்திவனப் புராணத்தை இயற்றியவர் கமலைஞானப் பிரகாச சுவாமிகள் ஆவார். திருவானைக்கா புராணம் இயற்றிய கச்சியப்ப சுவாமிகளுக்கும் இரு நூற்றாண்டுகளுக்கு முன் வாழ்ந்த இவர், 570 செய்யுட்களைக் கொண்டதாகச் செய்த நூல்தான் தந்திவனப் புராணம். இம் மூன்று நூல்களும் விரைவில் அச்சாகி நாட்டில் வழங்க வேண்டும்.

இனி, எனக்குக் கொடுக்கப்பட்டிருக்கிற கொஞ்ச நேரத்தில், அத்தனை நூல்களையும் விரித்துச் சொல்வது என்பது இயலாத காரியம். ஆகவே, திருவானைக்கா இலக்கியங்களைப் பெரியவர்கள் எப்படிப் பாடி இருக்கிறார்கள் என்பதைத் தொட்டுக் காட்டிச் செல்ல இருக்கிறேன்.

1. ஐயடிகள் காடவர்கோன்

ஆறும் நூற்றாண்டில் வாழ்ந்த இவர், ஒரு பல்லவச் சிற்றரசராய் இருந்து, அரசியல் தொண்டு ஆண்டவன் தொண்டுக்கு இடையூறாக இருப்பதால், ஆட்சியைப் புதல்வரிடம் ஒப்படைத்துவிட்டு, அடியவராய் ஊர்ஊராகச் சென்று ஆலயங்களை வணங்கியும், பாமாலை சூட்டியும் வாழ்ந்த சிவபக்தர் என்பது குறிப்பிடத்தக்கது. ஆனைக்கா ஆண்டவனுக்குப் பூமாலை சூட்டி வணங்கியவர் இவருக்கு முன் எவ்வளவோ பேர் இருந்திருக்கலாம். ஆனால், பாமாலை சூட்டித் திருவானைக்காப் பெருமானைப் பரவிய முதல்வர் இவரே. இவர் ஆனைக்காப் பெருமானைப் பாடிய பாடல் ஒன்று, 'க்ஷேத்திரத் திருவெண்பா' என்னும் இவர் நூலில் காணக் கிடைக்கிறது. "தென் ஆனைக் கா அடை! நீ, சென்று!" என்று நமக்கு உத்தரவிடுகின்றார். அப் பாடலில் அதற்கான காரணத்தையும் விளக்குகின்றார்.

வாழ்க்கை நிலையற்றது; வாழ்வாவது மாயம், அது மண்ணாவது திண்ணம்; காலன், காலம் பார்த்துக் கொண்டிருக்கிறான், ஒவ்வோர் உயிரையும் கொத்திக்கொண்டு போவதற்கு. "அடடா! அவன் ரொம்ப நல்லவனாயிற்றே! அவனுக்கா வந்தது சாவு!" என்று சுற்றத்தார் ஒருபுறம் அமர்ந்து, குணங்களைப் பாராட்டவும், "ஐயோ! எம்மை விட்டுப் போனீரே!" என்று மனைவி மக்கள் ஒருபால் நின்று அரற்றவும், உயிர் ஒருநாள் உடலைவிட்டுப் பறப்பது நிச்சயம். ஆக அந்த நாள் என்று வருமோ! அதை யாரே அறிவார்கள்? அந்த நாள் வரும்

முன்னே ஆற்ற வேண்டிய முக்கியமான பணி, ஆனைக்காப் பெருமானை அடி வணங்குவதே ஆகும். அப்படி அடி பணிந்தால், பிறவித் துன்பம் நீக்கி, பேரின்ப வீட்டை ஆனைக்கா ஆண்டவன் கொடுப்பான் என்ற செய்தியைத் தம் பாடலில் கூறியிருக்கிறார் ஐயடிகள் காடவர்கோன்.

“ சூழ்இயிருந்த சுற்றங்கள் குணங்கள்பா ராட்ட
வழிஇயிருந்த அங்கங்கள் எல்லாம்—தழீஇயிருந்தும்
என்னானைக் காவா! இதுதகா! என்னாமுன்
தென்ஆனைக் காவடை நீ சென்று ”

என்னும் இவர் பாடல், வாழ்க்கை நிலையாமையையும், இறைவனை வழிபட வேண்டிய அவசியத்தையும் அறிவுறுத்துகிறது.

நால்வர் சமயத் தொண்டின் சிறப்பு

இனி, திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர், மாணிக்க வாசகர் ஆகிய நால்வரும் திருவானைக்காப் பெருமானைப் பாடிய பாடல்களை வரிசையாகப் பார்ப்போம். இந் நால்வரும் சைவ சமயத்தை நாளும் இன்னிசை பாடி வளர்த்தவர்கள். இவர்கள் தோன்றி, சைவ சமயப்பணி ஆற்றியிராவிடில் சைவசமயம் அழிந்தே யிருக்கும்.

“ சொற்கோவும் தோணிபுரத் தோன்றலும் என் சுந்தரனும்
சிற்கோல வாதவூர்த் தேசிகனும்—முற்கோலி
வந்திலரேல் நீறெங்கே? மாமறைநூல் தானெங்கே?
எந்தைபிரான் ஐந்தெழுத்தெங் கே?”

என்னும் பாடல் ஒன்று, சைவ சமயக் குரவராம் இந் நால்வரின் சிவத் தொண்டை மிகவும் சிறப்பித்துக் கூறுகின்றது.

2. திருஞானசம்பந்தர்

திருஞானசம்பந்தர் ஆனைக்காத் தலத்தின்மீது மூன்று பதிகங்களைப் பாடியிருக்கிறார்; அதில் ஒரு பதிகம், அகப்பொருள் துறையில் அமைந்திருக்கின்றது.

திருவானைக்கா சக்தி தலங்களுள் ஒன்றாகப் பேசப்படுகிறது. அதற்கேற்பவே திருஞானசம்பந்தரும், தாம் பாடிய பாடல்களில் அகிலாண்டேசுவரிக்கே முதன்மை தந்து, இறைவனைத் “தேவி பாக மாயினான்” என்று குறிப்பிடுகின்றார்.

“ வானைக் காவில் வெண்மதி மல்கு புல்கு வார்சடைத்
தேனைக் காவி லின்மொழி தேவி பாக மாயினான் ”

(தேவா. 3:53:1)

என்று பாடியுள்ளார். இப் பாடலில் "தேவி பாகமாயினுன்" என்று பாடி, தேவிக்கு முதன்மை தந்திருக்கிருர் போலும். மரபுப்படி இறைவனின் பாகமாக இறைவியை வைக்காமல், இறைவியின் பாகமாக இறைவனைக் காட்டுகின்ருர். தேவி தன் உடலில் இறைவனை ஒரு பாகமாக வைத்துள்ளாள் என்பது சுவாமிகள் பாடலில் தொனிக்கிறது.

ஆதிசங்கரர் ஏழாம் நூற்ருண்டில் திருவாணைக்கா வந்து, பிரசன்ன கணபதியை அம்மனுக்கு முன்புறத்தில் பிரதிஷ்டை செய்தும், அம்மனுக்குத் தாடங்கம் சாத்தியும் வழிபட்டார் என்பது வரலாறு. அவ் வரலாற்றிலிருந்து அம்மன் கோவில் ஏழாம் நூற்ருண்டிலேயே ஏற்பட்டிருக்கவேண்டும் என்று புலனுகிறது. அந்தக் கருத்திற்குத் "தேவி பாகமாயினுன்", "தையல் பாகமாயினுன்" என்றெல்லாம் வரும் சம்பந்தர் பாத் தொடர்கள் அரண்செய்கின்றன போலும்.

திருஞானசம்பந்தர் தம் பாடலில், திருவாணைக்காப் பெருமான் செங்கட் சோழனுக்கு அருள்செய்த வரலாற்றைக் கூறியிருக்கிருர்.

"செங்கட் பெயர்கொண் டவன்செம் பியர்கோன்
அங்கட் கருணை பெரியதா யவனே" (தேவா. 2 : 25 : 5)

என்று பாடியுள்ளார். அவரே, ஆனைக்கு அருள் செய்த வரலாற்றையும்,

"விறல்மிக்க கரிக்கருள் செய்தவனே!" என்று பாடுகிருர்.

சம்பந்தர்தம் பாவில் கூறும் இன்னெரு வரலாறு கண்ணப்பரது வரலாறு ஆகும். ஊன் உணவு, இறைவனுக்குப் படைத்த அவர் பக்தியின் சிறப்பை,

"ஊனெ டுண்டல் நன்றெனு ஊனெ டுண்டல் தீதென
ஆன தொண்டர் அன்பினல் பேச நின்ற தன்மையான்
வானெ டொன்று சூடினுன் வாய்மை யாக மன்னிநின்
ருனெ டஞ்சு மாடினுன் ஆனைக் காவு சேர்மினே"
(தேவா. 3 : 53 : 9)

என்ருெரு பாடலில் பாடுகிருர்.

"கண்ணப்பர்க் கருள்செய்த கயிலை யெங்கள்
அண்ணலா ருராதி ஆனைக் காவே" (தேவா. 3 : 109 : 7)

என்று கண்ணப்பர்க்கு அருள் செய்தமையைத் திருஞானசம்பந்தர் இன்னெரு பாடலிலும் போற்றியுள்ளார்.

3. திருநாவுக்கரசர்

திருஞானசம்பந்தரும், திருநாவுக்கரசரும் சமகாலத்தவராவர். சைவ சமயத்தொண்டை இணைந்து நின்று காத்து நிலைநிறுத்தியவர்கள்.

வேத நெறி தழைத்து ஓங்கவும் மிகுசைவத்துறை விளங்கவும் செய்த பெரியார்கள். இவர்கள் இருவருடைய பெருமையையும் சேக்கிழார் பெருமான் தெளிவாகப் பாடியிருக்கிறுர்.

திருநாவுக்கரசர் தமிழகமெங்கும் பல சிவத்தலங்கட்குச் சென்று, இறைவனை வழிபட்டு, இறைவழிபாட்டின் அவசியத்தை வலியுறுத்தியவர்; இவருக்குத் திருவானைக்காத் தலத்தின் மீது பெரும் ஈடுபாடுண்டு. மூன்று பதிகம் இத் தலத்தின்மீது பாடியுள்ளார்.

சிலந்தியும் யானையும் இவ்வானைக்காத் தலத்தை வழிபட்டதும், இறைவன் அருளால் அச் சிலந்தியே கோச்செங்கட் சோழனுய்ப் பிறந்து, திருவானைக்காக் கோவில் திருப்பணி செய்ததும், இத் தலம் பற்றிய பண்டை வரலாறு. இச் சரித நிகழ்ச்சியைத் திருநாவுக்கரசர், தம் பாடலுள் தெளிவாகப் பாடியிருக்கிறுர் :

"சிலந்தியும் ஆனைக்காவில் திருநிழற் பந்தர்செய்து
உலந்தவன் இறந்தபோதே கோச்செங்க ணுனுமாகக்
கலந்தநீர்க் காவிரிசூழ் சோணுட்டுச் சோழர்தங்கள்
குலந்தனிற் பிறப்பித்திட்டார் குறுக்கைவீ ரட்டனுரே" (4:49:4)

எனத் தெளிவாக அவ் வரலாற்றைக் கூறியிருக்கிறுர்.

திருவானைக்காவில் இறைவன் நீர்வடிவாய் இருத்தலால் "அப்புலிங்கம்" என்று கூறுவார்கள். அப்புலிங்கத்தை அப்பர் சுவாமிகள் செழுநீர்த்திரள் என்று குறிப்பிட்டு "செழுநீர்த் திரள் சென்று ஆடினேனே" என்று பெருமையுடன் ஒரு பதிக முழுதும் பாடுகிறுர்.

திருவானைக்கா இறைவன், ஊனுகி உயிராகி அதனுள் நின்ற உணர்வாகி இருப்பவன். அவன் ஞான வடிவானவன். அனைத்துமாய் உள்ள அவனை அறிந்து கொண்டவர்களுக்கு அல்லலேதும் இல்லை என்று பாடுகிறுர் திருநாவுக்கரசர்.

"திருவானைக் காவிலுறை சிவனே ஞானம்
ஆனுய்உன் பொற்பாதம் அடையப் பெற்றுல்
அல்ல கண்டங் கொண்டடியேன் என்செய்கேனே!"

என்று பாடியிருக்கிறுர்.

4. சுந்தரர்

பெருந்தொகை நூற்காரர், சுந்தரரை 'என் சுந்தரன்' என்று உரிமை பாராட்டுவதைப் போலவே, நாமும் இவரை 'நம் சுந்தரர்' என்று உரிமை பாராட்டலாம். இவர் ஆரூர்ப்பெருமானுக்குத் தம்பிரான் தோழர் ஆகையால், பெண் வேண்டும்; பொன் வேண்டும் என்றெல்

லாம் இன்றைய பத்தனைப்போலக் கேட்டும், பாடிப் பெற்றும் வாழ்ந்த வர். இவர் திருவானைக்காப் பெருமான்மீது ஒரு பதிகம் பாடியிருக்கிறார். இவருடைய பாடலில், மற்றொரு சோழ மன்னர் வரலாறு கூறப்பட்டுள் ளது. சோழ மன்னன் ஒருவன், தன் மனைவியுடன் காவிரியில் நீராடிய போது, கழுத்தாரம் ஆற்றில் கழன்று விழுந்தது; "அந்த ஆரம் ஆனைக்காப் பெருமானுக்கு அர்ப்பணம் ஆகுக'' என்றான் மன்னன். நீராடிய பின் மன்னவன், ஆனைக்காப் பெருமான் சன்னிதி முன்னர் வந்து, வணங்கி நின்றான். அப்போது பெருமானுக்குக் காவிரியிலிருந்து குடத்தில் நீர் எடுத்து வந்து திருமுழுக்காட்டினர். அந்தக் குடத்து நீருடன் ஆற்றில் விழுந்த ஆரமும், இறைவன் சென்னியில் வந்து சேர்ந்தது. அது கண்டு மன்னவன் வியப்புற்று இறைவனின் இன் னருளை நினைந்து உருகிப் போற்றினான். இந்த வரலாற்றைச் சுந்தரர்,

"தார மாகிய பொன்னித் தண்துறை யாடி விழுத்தும்
நீரின் நின்றடி போற்றி நின்மலா கொள்ளென ஆங்கே
ஆரங்கொண்டஎம் ஆனைக்காவுடை ஆதியை நாளும்
ஈர முள்ளவர் நாளும் எம்மையும் ஆளுடையாரே'' (7 : 75 : 7)

என்று பாடியிருக்கிறார்.

5. மாணிக்கவாசகர்

இவர் பாடிய "திருவாசத்திற்கு உருகாதார் ஒரு வாசகத்திற்கும் உருகார்'' என்பர். இராமலிங்க அடிகளாரும் இவர் பாடிய திரு வாசகத்தின் பெருமையை,

"வான்கலந்த மாணிக்க வாசக! நின் வாசகத்தை
நான்கலந்து பாடுங்கால் நற்கருப்பஞ் சாற்றினிலே
தேன்கலந்து பால்கலந்து செழுங்கனித் தீஞ்சுவை கலந்து
ஊன்கலந்து உயிர்கலந்து உவட்டாமல் இனிப்பதுவே"

என்று போற்றியிருக்கிறார். இவருடைய அம்மானைப் பாடல் ஒன்றி லும் 'ஆனைக்கா' இடம்பெறுகின்றது.

"தென்ஆனைக் காவானைத் தென்பாண்டி நாட்டானை
என்னானை என்அப்பன் என்பார்கட்கு இன்னமுதை
அன்னானை அம்மானை பாடுதுங்காண் அம்மானாய்!''

(திருவாசகம்: திரு அம்மானை, 19)

என்று பாடியுள்ளார்.

6. கபிலதேவர்

கபிலதேவ நாயனார் சிவபெருமான் திருவந்தாதி என்னும் நூலில் திருவானைக்காவை "ஆனையூர்'' என்று குறிப்பிடுகின்றார். "ஆனேறுகிய இடபத்தில் ஊர்ந்து வருபவன்; அவன் ஆனையூரில் விளங்குபவன்'' என்று போற்றியுள்ளார்.

7. சேக்கிழார்

சேக்கிழார் பெருமான், பன்னிரண்டாம் திருமுறையாகிய தம் பெரியபுராணத்தில் திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர் ஆகியோர் வரலாறு கூறும் இடங்களில் திருவானைக்காத்தலம் சென்று அவர்கள் வணங்கிய பான்மையை விரித்துரைத்திருக்கிறார். திருநாவுக்கரசு சுவாமிகள் வரலாறு கூறும் பகுதியில், சிலந்திக்கருள் செய்த அருட்சிறப்பைக் கூறுகின்றார்.

"சிலந்திக் கருளுங் கழல் வணங்கிச்
செஞ்சொல் மாலை பல பாடி"

திருநாவுக்கரசர் வழிபட்டார் என்று கூறுகிறார். அவ்வாறே, திருஞானசம்பந்தர் வரலாறு கூறும் பகுதியில், கோச்செங்கணான் செய்த சிவத்தொண்டைக் குறிப்பிட்டுள்ளார்.

"விண்ணவர் போற்றிசெய் ஆனைக்காவில்
வெண்ணாவல் மேவிய மெய்ப்பொருளை
நண்ணி இறைஞ்சிமுன் வீழ்ந்தெழுந்து
நாற்கோட்டு நாகம் பணிந்ததுவும்
அண்ணல் கோச்செங்கண் அரசன் செய்த
அடிமையும் அஞ்சொல் தொடையில் வைத்துப்
பண்ணுறு செந்தமிழ் மாலை பாடிப்
பரவிநின் றேத்தினர் பான்மையினால்" (பெரிய. 2248)

என்று பாடியுள்ளார் சேக்கிழார்.

8. காளமேகனார்

கம்பர், வில்லிபுத்தூராழ்வார் முதலான பெரிய கவிஞர்களுக்குப் பின்னால் தோன்றிய பெரிய கவிஞர் இவரே. "வசை பாடக் காளமேகம்" என்பதால், இவர் வசை பாடுவதில் வல்ல புலவர் என்பதும் தெரிய வருகிறது. இவர் சிலேடை பாடுவதிலும் மிக வல்லவர். இவர் பல நூல்களும் தனிப்பாடல்களும் செய்திருக்கிறார். இவர் நூல்களில் "திருவானைக்கா உலா" திருவானைக்காப் பெருமான் மீது பாடப்பட்ட உலாவாகும்.

இவருடைய பாடல் ஒன்றில், ஒன்று முதல் ஏழு இறுதியாக அமைத்து, எண்ணலங்காரத்தில் ஆண்டவனைப் புகழ்ந்து பாடியிருக்கும் நயம் போற்றுதற்குரியது. பருவப்பெண், பாங்கியரும் அன்னையரும் பார்த்திருக்கப் பெண்ணொருத்தியுடன் கழங்காடினாள். ஒன்பது மணிகளில் ஏழு மணிகளைத் திரட்டி, அவற்றைக் கோள்கள் என்று மாறுகையில் ஏற்றெறிந்து ஆடலானாள். அப்போது அவள் பாடிய பாடல் எண்ணலங்காரம் அமைந்து விளங்குகின்றது :

படர்கயிலை வெற்பெடுத்த பத்திருதோள் வீரன்
உடல்சரிய ஊன்றியதாள் ஒன்றும்—மடல் அவிழ்பூந்
தேங்காவி சூழும் திருவானைக் காவிலுறை
ஓங்கார மூர்த்தி உரு இரண்டும்—ஓங்கற்
கொடிக்கு அன்பு கொண்டபிரான் கோலம் மூன்றாக்கி
முடிக்கும் திருக்கருமம் மூன்றும்—அடைக்கலம் என்று
ஏத்தெடுக்கும் எம்மை எழுபிறப்பின் வீழாமற்
காத்தெடுக்கும் நாதன் கரம்நான்கும்—பூத்தொடுக்கும்
தார்காக்கும் செஞ்சடையான் சங்கரிக்கு நாள்வரைமால்
பார்காக்கத் தந்தபடை ஐந்தும்—போர்காட்டும்
திண்பி னாகப்படையான் சேவடிசே ரத்தவம்செய்
பண்பினர் வெல்லும் பகைஆறும்—ஒண்பார்
திருந்து விடங்கரெனத் தேற்றும்பார் ஏத்த
இருந்த இடங்கள்தாம் ஏழும்—மருந்தனையாள்
பாடிவிளை யாடும் பருவத் துருவத்துக்
கூடிவிளை யாடுமலர்க் கொம்பினாள் ''

என்பதே அப் பாடல்.

இருபது தோளுடை இராவணன் உடல் அழுந்துமாறு, ஊன்றிய இறைவன் தாள் ஒன்று; திருவானைக்காவல் ஓங்கார மூர்த்தியின் உரு இரண்டு (தேவிபாகமாக இருத்தலால் இறைவன் உரு இரண்டு); இவனுக்குப் படைத்தல், காத்தல், அழித்தல் எனத் தொழில் மூன்று; பரவுவார் பிறவித் துன்பம் எய்தாவாறு அருள் செய்யும் கரங்கள் நான்கு; திருமாலுக்குச் சிவபெருமான் வழங்கிய படைக்கலங்கள் வில், வாள், கதை, சங்கு, சக்கரம், என ஐந்து; அவன் அடிசேர்ந்த அடியவர்கள் வெல்லும் பகை காமம், குரோதம், மோகம், லோபம், மதம், மாற்சரியம் என ஆறு; தியாகேசமூர்த்தி எழுந்தருளியுள்ள திருத்தலங்கள் திருவாரூர், திருநாகை, திருநள்ளாறு, திருமறைக்காடு, திருக்காறாயல், திருவாய்மூர், திருக்கோளிலி என ஏழு என்று எண்ணலங்காரம் அமையப் பாடப்பட்ட இப் பாடலில் இறைவன் பெருமை விரித்துரைக்கப்பட்டிருக்கிறது.

இவர் பாடிய தனிப்பாடல்கள் மிகப்பல. தனிப்பாடல் திரட்டு என்னும் நூல் பல புலவர்களின் தனிப்பாடல்களைத் தொகுத்த தொகுப்பு என்றபோதும், காளமேகனாரின் தனிப்பாடல்களை முதன்மையாக வைத்துத் தொகுத்திருப்பது, அவர்தம் தனிச்சிறப்பைப் போற்றுவதாய் உள்ளது. இவருடைய தனிப்பாடல்களுள்ளும் முதல் தனிப் பாடல், ஆனைக்காவில் எழுந்தருளியுள்ள ஆனைமுகனைப் போற்றிச் செய்யப்பட்டதாகும்.

'' ஏரானைக் காவிலுறை என்னானைக் கன்றளித்த
போரானைக் கன்றுதனைப் போற்றினால்—வாராத

புத்திவரும் பத்திவரும் புத்திரவுற் பத்திவரும்
சத்திவரும் சித்திவரும் தான் ''

என்ற இத் தனிப்பாடலில், ஆனைமுக கணேசனைப் பரவினல் பெறக் கூடிய வரங்களைக் கூறியிருக்கிருர்.

இவர் வாழ்ந்த 14 ஆம் நூற்ருண்டிலும் சைவ, வைணவப் பூசல் மிகுந்திருந்தது. சிவன் பெரியவரா? விஷ்ணு பெரியவரா? என்ற தேவையற்ற சண்டையைத் தவிர்ப்பதற்காக இவர் பாடிய பாடல், தனிப்பாடல் திரட்டில் கிடைக்கிறது.

'' சீரங்கத் தாரும் திருவானைக் காவாரும்
போரங்க மாகப் பொருவதேன்—ஓரங்கள்
வேண்டாம் இதெல்லாம் விகற்பம் தெரியாதோ
ஆண்டானும் தாதனு மானல் ''

என்று பாடியுள்ளார். 'ஆண்டானும் தாதனும் ஆனல்' என்ற ஈற்றடிக்கு, 'ஆண்டியும் தாதனும் ஆனல்' என்ற பாடபேதம் காணப் படுகிறது. ஆண்டியும் தாதனுமானல் என்ற அடியே இவ்விடத்தில் பொருத்தமாகத் தெரிகிறது. 'சிவனை வணங்கும் அடியவர்களோ ஆண்டிகள்; திருமாலை வணங்கும் அடியவர்களோ தாசர்கள். அடிமை களும் ஆண்டிகளும் ஒன்றே. இவ்வாறிருக்க உங்களுக்குள் ஏன் ஓரங்கள்? சமாதானமாகப் போங்கள்' என்று காளமேகர் கூறுவதாகக் கொள்ளலாம். 'ஆண்டானும் தாதனு மானல்' என்ற பாடத்தைக் கொள்வது மேலும் சைவ வைணவப் பூசலை வளர்ப்பதேயாகும். ஆனல், திருவரங்க மடப்பரிசாரகராய் இருந்து, காதலி மோகனங்கி யைக் கைப்பிடிக்கும் பொருட்டுத் திருவானைக்கா மடப் பரிசாரகராய் மாறிய இவர், இரு சமயத்தாரின் பூசலைத் தவிர்க்க எண்ணி, 'ஆண்டி யும் தாதனு மானல்' என்றே பாடியிருப்பார் என்று எண்ணத் தோன்றுகிறது.

ஆனைக்காப் பெருமானை இவர் பாடிய இன்னொரு பாடல் கற்பனை நலம் சான்றதாக உள்ளது. பாற்கடலைக் கடையும்போது, முதலில் ஆலகால நஞ்சு வெளிப்பட்டது. அவ்வாலகால நஞ்சை உண்டு, அகிலத் தைக் காத்தமையால், சிவனுக்கு நஞ்சுண்ட பெருமான் என்பதும் ஒரு சிறப்புப் பெயர். இவ்வாறு சிவபெருமான் நஞ்சுண்ட காரணம் தெளிவாக அறியப்பட்டாலுங்கூட இவர் புதிய காரணங்களைத் தேடு கின்ருர். 'ஆனைக்காப் பெருமானே! அறிவேன் நான், நீ நஞ்சுண் டதன் காரணம், அடிதாங்க முடியாமல்தானே நீ நஞ்சுண்ண முற் பட்டாய்! பாவம் நீ என்ன செய்வாய்! ஒருவன் கல்லெடுத்து அடிக் கிருன்; இன்னெருவன் காலால் எட்டி உதைக்கிருன்; இன்னெருவன் வில்லால் அடிக்கிருன்; பலர் அடித்துச் சாவதை விடத் தாமே வாழ்வை முடித்துக் கொள்வதே நல்லது என்ற முடிவுக்கு வந்தல்லவோ, நீ நஞ்சுண்டாய்!' என்று ஆனைக்காப் பெருமானிடத்தில் கேட்கிருர்.

"கல்லால் அடித்ததற்கோ காலால் உதைத்ததற்கோ
வில்லால் அடித்ததற்கோ வெட்கினீர் சொல்வீரால்
மஞ்சுதனைச் சூழும் மதிலானைக் காவாரே
நஞ்சுதனைத் தின்றதென் முன்னுள்"

என்ற ஆனைக்காப் பற்றிய இப் பாடல், கற்பார்க்கு முறுவலை உண்டாக்கும் கற்பனைநலம் சான்றது. மேலும், இறைவன் சாக்கிய நாயனருக்கு அருள் செய்த வரலாறு, கண்ணப்பர் வரலாறு, அர்ச்சுனனுக்குப் பாசுபதம் தந்த வரலாறு, பாற்கடலை அமிர்தம் வேண்டிக் கடைந்த வரலாறு அனைத்தையும் இவ்வொரு பாடலில் நமக்கு எடுத்துக் காட்டுகிறார்.

9. அருணகிரிநாதர்

'வாக்கிற்கு அருணகிரி' என்று இவரைச் சிறப்பித்துக் கூறுவார்கள். சந்தக் கவி பாடிய மகாகவி; திருப்புகழ் தந்த முருக பத்தர்; கந்தனைக் கண்ணாரத் தரிசித்தவர்; வேளாளர் குலத்தில், 15 ஆம் நூற்றாண்டில் பிரபுடதேவராயன் காலத்திலே வாழ்ந்தவர்; ஆறுபடை வீடுகளுக்கும் சென்று, அப்பன் முருகனைப் பாடியவர். இவர் ஆனைக்காவில் எழுந்தருளியுள்ள முருகன் மீதும், திருப்புகழ், பாடியிருக்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

திருப்புகழ் விரிவுரை ஆற்றி வருபவரும், "திருப்புகழ் அமிர்தம்" என்னும் வெளியீட்டினைத் தொடர்ந்து வெளியிட்டு வருபவரும் ஆகிய திருமுருக கிருபானந்தவாரியார் தம் திருப்புகழ் விரிவுரைகளைப் பல தொகுதிகளாக இப்பொழுது வெளியிட்டிருக்கிறார்கள். அருணகிரிநாதர் ஆனைக்கா முருகன் மீது பாடிய திருப்புகழ்களைக் கவனிப்போம்.

அருணகிரிநாதர், ஆனைக்காவிற்கு வேறு பல பெயர்களும் கூறியிருக்கிறார். ஆனைப்புரம், கரிவனம், கயப்பதி, கஜாரண்யம், காவைமூதூர், சம்புகேசுரம் எனப் பல பெயர்கள் திருவானைக்காத் தலத்திற்கு வழங்கி வந்த பெயர்களாக அவர் வாக்கால் அறிகிறோம். ஆனைக்கா, கரிவனம், கயப்பதி, கஜாரண்யம் என்பனவெல்லாம் ஒரு பொருள் குறித்த பல பெயர்களே. ஆனை, ஆண்டவனுக்குப் பணி செய்து உய்ந்த வரலாற்றை உணர்த்துவனவே அப் பெயர்கள். காவைமூதூர் என்ற பெயர், சோலைகள் நிறைந்திருந்தமையால் ஏற்பட்டிருக்கலாம். மூதூர் என்பதால், மிகப் பழங்காலமாகப் புகழுடன் விளங்கி வரும் திருப்பதி எ பதும் தெளிவாகிறது.

இந்தத் தலத்தில் முருகன் எழுந்தருளியிருந்த இடம் இது என்பதையும் தெளிவாக உணர்த்தியிருக்கிறார் அருணகிரிநாதர். சம்புகேசுவரமாகிய இத் தலத்தில் உள்ள உத்தம தடாகம் சம்பு தடாகமாகும். சம்பு தடாகத்திற்குத் தெற்கில் உள்ள மதிலுக்குப் பெயர் சுந்தர மாறன் மதில் என்பது. அம் மதிலுக்கு அண்மையிலேயே முருகன் எழுந்தருளியிருந்தான்.

"துங்கக ஜாரணி யத்தில் உத்தம
சம்புத டாக மடுத்த தட்சிண
சுந்தர மாறன்ம திட்புறத்துறை பெருமாளே !"

என்று வரும் அருணகிரியாரின் திருப்புகழில் முருகன் எழுந்தருளியுள்ள இடத்தைத் தெளிவாகச் சுட்டியிருக்கிறார்.

மணத்த சோலைசூழ் ஆனைக்காவில், வெண்ணாவலின்கீழ் எழுந்தருளியுள்ள முக்கண்ணன் அருள் செய்ய அவதரித்த முருகனைப் பெண்களெல்லாம் இசைபாடிப் போற்றுவர் என்கிறார் அருணகிரிநாதர் :

"ஏழிசைத் தமிழிற்பய னுற்றவெ
ணாவ லுற்றடியிற்பயி லுத்தம
ஈசன் முக்கணிருத்தன் அளித்தருள் பெருமாளே !"

என்றும்,

"ஆசைத் தோகை மார்க ளிசையுடன்
ஆடிப் பாடி நாடி வருதிரு
ஆனைக் காவில் மேவிய பெருமாளே !"

என்றும் அருணகிரியார் பாடியிருக்கிறார்.

சிலந்தி பந்தரிட்டுச் சிவனை வணங்கியதும் இத் தலத்தில்தான். பிரமனும் திருமாலும் வந்து வணங்கிய சிறப்புடைய தலமும் இத் தலமே. ஆனைக்காவுறை ஆதியைத் தரிசிப்பதற்காக, ஒன்பது வாசல் கொண்ட சாளரம், கர்ப்பக்கிரகத்தில் உள்ளது. அதன் வழியே மக்கள் இறைவனைத் தரிசிப்பதும் இத் தலத்தில்தான். இப் பெருமைகளை அருணகிரியார்,

"சிவத்தியான முற்றோர் சிலந்தி நூல்செய்
திருக்கா வணத்தே யிருப்பா ரருள்கூர்
திருச் சாலகச் சோதி தம்பிரானே !"

எனவும்,

"கமலனும் ஆகண்ட லாதி அண்டரும்
எமது பிரானென்று தாள் வணங்கிய
கரிவனம் வாழ்சம்பு நாதர் தந்தருள் பெருமாளே !"

எனவும், திருப்புகழில் பாடியிருக்கின்றார்.

திருவானைக்கா சத்தித்தலம் என்பதை முன்னரே கூறி, தேவாரம் பாடிய மூவரும் தேவி பாகமாயினன் என்று தேவிக்கே முதன்மை தந்து பாடியிருத்தலைச் சொன்னேன். அருணகிரிநாதரும், அகிலாண்டேசுவரிக்கே முதன்மை தந்து பாடுகிறார்.

"கரிவனம் உறை அகிலாண்டநாயகி அருள்பாலா!"

என முருகனை அழைக்கிறார். இன்னும்,

"ஞால முதல்வி இமயம் பயந்தமின்
நீலிசவுரி மரைமங்கை குண்டலி
நாளுமினிய கனியெங்கள் அம்பிகை த்ரிபுராயி
நாத வடிவி அகிலம் புரந்தவள்
ஆலி னுதரம்உள பைங்கரும்பு வெண்
நாவ லரசுமனை வஞ்சி தந்தருள் பெருமாளே!"

என்னும் திருப்புகழில், சத்தியைப் பலவாறு போற்றியிருத்தலைக் காணலாம்.

முருகனிடம் அருணகிரியார் வெளியிடும் வரங்கள் பல. அன்புடன் நாவால் சந்தத் திருப்புகழ் பாடி ஏழைப் பாவியேன் முருகனைத் தொழல் வேண்டும் என்று வேண்டுகின்றார். தம்மை மாதர் வலைப்பட்டு அழியாது காத்தல் வேண்டும் என்றும், செத்துப் பிறக்கும் சிறுமானிடரைப் பாடலாகாது என்றும், ஐம்புல வேடரால் அழிந்துபடாமலும், அறுபகைவர்களால் மோதப்படாமலும் காக்கவேண்டும் என்றும், அசட்டு யோகியாகாது, சிவயோகியாய்ச் சிவஞானம் பெற அருள்புரிய வேண்டும் என்றும் ஆனைக்கா முருகனை வேண்டுகின்றார்.

திருவானைக்காவில் ஒரு விசேடம். ஒரு மதிலைச் சிவனே, சித்தர் வேடம் தாங்கி விபூதியையே கூலியாகக் கொடுத்துக் கட்டினார் என்றும் சொல்வார்கள். இதைக் குறித்து அருணகிரிநாதரும் பாடியிருக்கிறார்:

"ஆழித் தேர்மறு கிற்பயில் மெய்த்திரு
நீறிட் டான்மதில் சுற்றிய பொற்றிரு
ஆனைக் காவினில் அப்பர் பிரியப்படு பெருமாளே!"

என்று அருணகிரிநாதர் திருப்புகழில் காணப்படுகிறது. அப்படி சிவனே முன்னின்று கட்டிய மதில்தான் இத் தலத்தில் மிகப் பெரிய திருமதிலாகவும் நான்காவது மதிலாகவும் இருக்கும் மெய்த்திரு நீறிட்டான் மதில். திருநீறு, வீட்டிலே பொன்னாக மாறி, அத் தொழிலாளர்க்கு இகவாழ்வைத் தந்தது. கோயிலைக் கட்டிய திருப் பணியால் அவர்கள் வீடுபேறும் அடைந்தனர்.

10. தாயுமானவ சுவாமிகள்

இவர் சோழநாட்டுத் திருமறைக் காட்டிலே பிறந்தவர்; சிறந்த சித்தாந்த வேதாந்த ஞானம் கைவரப் பெற்ற வித்தகர்; அரிய உண்மைகளையும், எளிமையாய் எடுத்துக்காட்டுவதில் இவருக்கு நிகர் இவரே. இவருடைய பாடல்கள் எல்லாம், "தாயுமான சுவாமிகள்

திருப்பாடல்கள்'' என்று வழங்கப்படுகின்றன. எந்நாட் கண்ணி, பராபரக் கண்ணி, பைங்கிளிக் கண்ணி முதலான பாக்களையெல்லாம் பலமுறையும் படித்து இன்புறலாம்.

இவர் பாடிய துதிப்பாடல் ஒன்று திருவானைக்கா அகிலாண்ட நாயகி அம்மையைப் போற்றுவது. அந்த ஒரு பாட்டு, இவர் பாடிய பிற பாடல்கள் அனைத்திற்கும் நிகர் என்று சொல்லக்கூடிய அளவுக்குச் சிறப்பானதாக இருக்கிறது எனலாம். மனமாகிய மதயானையை அடக்குவேன்; காற்றைப் பிடித்து வாழும் யோக நிலையில் நீடு வாழ்வேன் என்று கூறுகிறார். அகிலாண்ட அம்மை பத்தருக்கு அறிவு நலமும், கவித்துவமும், யோகமும் பல சித்திகளும் நல்குவதற்கு விருது கட்டிக்கொண்டு இருத்தலால், தமக்கும் யோக நிலையில் வாழ அருள்வாள் என்கிறார்.

தாயுமானவர் பாடிய பாடலைப் பார்ப்போம்.

"வட்ட மிட்டுஒளிர் பிராண வாயுஎனும்
நிகள மோடு கமனஞ் செயும்
மனமெனும் பெரிய மத்த யானையைஎன்
வசம் அடக்கிடின் மும்மண்டலத்து
இட்ட முற்றவள ராச யோகம் இவன்
யோகம் என்றறிஞர் புகழவே
ஏழையேன் உலகில் நீடு வாழ்வன்—இனி
இங்கிதற்கும் அனுமானமோ
பட்ட வர்த்தனர் பராவு சக்ரதர
பாக்ய மானசுப யோகமும்
பார காவிய கவித்துவ நான்மறை
பராய ணஞ்செய் மதி யூகமும்
அட்ட சித்தியும் நல் லன்பருக் கருள
விருது கட்டியபொன் அன்னமே!
அண்ட கோடி புகழ் காவை வாழும்அகி
லாண்ட நாயகியென் அம்மையே!"

11. கச்சியப்ப சுவாமிகள்

18ஆம் நூற்றாண்டில் பெரும்புலவராய் வாழ்ந்திருந்த மாதவச் சிவஞான முனிவரின் தலைமாணுக்கரே கச்சியப்பர். திருவானைக்காப் புராணம் இவர் பாடிய நூலாகும். இந் நூலில் உள்ள திருவிருத்தங்களின் மொத்த எண்ணிக்கை 1555; இலக்கிய இலக்கண நலங்களும், சாத்திரக் கருத்துகளும், பக்திச் சுவையும் நிறைந்த நூல். காப்பிய நலங்கள் அமையக் கச்சியப்ப முனிவர் இப் புராணத்தைப் புலவர் பெருமக்களுக்குப் பெருவிருந்தாகச் சமைத்துத் தந்துள்ளார். திருவானைக்காப் புராணம் மிகவும் கடினமான நூல் என ஐயரவர்கள் குறிப்பிடுவதனால், ஆசிரியர் உதவியின்றி ஒருவர் அத்தனை எளிதில்,

இந் நூலைப் பொருள் விளங்கிக் கொள்ள இயலாது. மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்களால் போற்றிப் படிக்கப்பட்டதும், பதிப்பிக்கப்பட்டதும், பாடஞ் சொல்லப்பட்டு வந்ததுமாகிய பெருமைகளைக் கொண்டது இந் நூல்.

பதினென் புராணங்களுள், 'பாத்ம புராணமும்' ஒன்று. அதில் கஜாரண்ய மகாத்மியத்தில் கூறப்படும் செய்திகளையே இத் திருவானைக்காப் புராணத்தில், அவர் விரித்துரைக்கிறார்.

"பொத்தனுக்கு மிதுபாத்ம மெனப் புகலும் புராணத்தின்
மத்தியினுள் ளதுநுமக்கு வரன்முறையே உரைக்கின்றோம்"

என்று பாடியிருக்கிறார்.

நைமிச வனத்தில் வாழ்பவர் சூத முனிவர். இவர் கரும்பும் கனிச் சாறும், தேனும் ஒருங்கு கலந்தாற் போன்ற இன்சுவைப் புராணங்களை ஓதும் விருப்பினர்.

"திங்க ரும்புஞ் செழுங்கனி யுஞ்சுவை
ஓங்கு தேனும் உடங்குகுத் தாலென
வீங்கு திஞ்சுவை மேய புராணங்கள்
பாங்கி னோதும் பயிற்சி யார்"

என்று குறிப்பிடுகிறார். சூத முனிவரிடம் பிற முனிவர்கள் உத்தமமான தீர்த்தம், மூர்த்தி, தலம் யாவை என்று வினவுகிறார்கள். சூத முனிவரும் மூர்த்தி, தலம், தீர்த்தம் மூன்றினும் சிறந்த தலம் திருவானைக்காவே என்று விடையிறுக்கிறார். மேலும், பரமேசுவரனார் உமா தேவிக்கும், நந்திக்கும் இத் தல மகிமையை விரித்துரைத்தார். அவ்வாறே யாமும் உங்களுக்கு உரைப்போம் என்று சூத முனிவர் சொல்லத் தொடங்குகிறார்.

நந்தி பகவான் பரமனைப் போற்றுவதாக அமைந்துள்ள பின்வரும் பாடலில், தேவர்க்கு அரியவனாய் இருக்கும் இறைவன் பத்தர்க்கு எளியனாய் இருக்கும் தன்மையைப் போற்றுகின்றார்:

"பண்ணவர்க் கரியாய் போற்றி! பத்தருக் கெளியாய் போற்றி!
தண்ணிய மதியும் பாம்பும் தரித்தருள் தலைவா போற்றி!
கண்ணிய அடியா ருள்ளக் கருத்தினை முடிப்பாய் போற்றி!
புண்ணிய முதலே போற்றி! பூரணப் பொருளே போற்றி!"

இத் தலச் சிறப்பினைக் கூறுமிடத்து, இதை 'ஞான தலம்' என்று கூறுகிறார். இங்கே மாதவர்கள் பலர் வந்து தவம் புரிகின்றனர். காவிரி நதி, கங்கையினும் அதிகப் பெருமையுடையதாய் இங்கு விளங்குகிறது. சரயு நதி, தாம்பிரவருணி, கோமதி, கோதாவரி, சந்திர பாகை, நருமதை முதலிய நதிகள் எல்லாம் இங்கு வருகின்றன.

ஆகையால் எப்படிப்பட்ட தீர்த்தங்களும் இங்கு உள்ளன. பாவங்கள் பல செய்து, நெறியில்லா நெறிச் சென்றோர்களும் வந்து, இப் பதியினைத் தொழுது வாழ்வாராயின் தீவினை நீங்கி, நற்பேறு பெறுவர் என்று பாடுகிறார் :

"மண்டு பெரும் பாதகங்கள் வைகலும்வை கலும்புரிந்து
வழுவி னோரும்
பண்டுபுரி நல்வினையாற் பகர்ஞான கேத்திரத்துப்
படர்ந்து வாழின்
மிண்டுமல மாயை கன்மம் வேரொடும் விடைகொள்ள
வீடு சேர்வார்
கண்டுநறுங் கனியமுதுங் கலந்தனைய தீங்கிளவி
கதித்த வாயாய் !"

தலப் பெருமை கூறியவர் தீர்த்தப் பெருமை கூறுகிறார். திருவானைக்காத் தலத்து விளங்கும் தீர்த்தங்கள் பல. அவை எல்லாம் குளிர்ந்த நீரினை உடையதாய், கரும்பின் இனிய சுவையுடைத்தாய் இலங்குகின்றன. இத் தீர்த்தங்களில் முழுகினவர் எல்லாப் பேறும் பெறுவர் என்று பாடுகிறார் :

"ஒழுக்கம் அறிவு தவம்தானம் உறவு சீலம் உபசாரம்
வழுக்கில் கருணை ஆசாரம் வாய்மை வணக்கம் வந்தித்தல்
அழுக்கில் அன்பு துறவடக்கம் அழுக்கா றாமை முதலறங்கள்
முழுக்க அருளும் முழுகுநர்க்கு முழுவெண் திங்கள் முகத்தினாய்!"

இங்குள்ள ஒரு தீர்த்தத்தில் முழுகினோர் பெறும்பேறுகள் இவையாம். இங்கு, ஒரு தீர்த்தமன்று ; ஒன்பது தீர்த்தங்கள் சிறப்பாய் உள்ளன. 1. பிரம தீர்த்தம், 2. இந்திர தீர்த்தம், 3. சம்பு தீர்த்தம், 4. இராம தீர்த்தம், 5. சிமத் தீர்த்தம், 6. அக்கினி தீர்த்தம், 7. அகத்திய தீர்த்தம், 8. சோம தீர்த்தம், 9. சூரிய தீர்த்தம் ஆகிய ஒன்பது தீர்த்தங்களும் இவ்வொரு தலத்தின்கண்ணே உள்ளன.

மூர்த்தி விசேடப் படலத்தில், திருவானைக்காவில் திகழும் அப்பு லிங்கத்தின் பெருமைகள் பேசப்பட்டுள்ளன. உமாதேவியார் வணங்கி வழிபட்ட லிங்கம், மிகவும் உயர்வானது என்பதனை,

"எவ்வகை லிங்கத்தும் மேலாம் அணங்கு
நீபணிந் திடப்படும் லிங்கம்"

என்னும் பாடற் பகுதியால் நன்கு தெளியலாம்.

உமாதேவியார் நீர்த்திரளாய் அமைத்த அந்த உயர்வான லிங்கம், அமுதலிங்கமாகும். அவ் வமுதலிங்கத்தை வணங்குவார் அடையும் பயன்களைக் கூறுகிறார் :

"அமுத மென்றதன் புனலினால் திரட்டி அமைக்குமச்
சிவலிங்கமவ் வியப்பால்
அமுத லிங்கமென் றுரைத்திடப் படும்அங்கு அடுத்து
இறைஞ்சினோர் நித்திய மெய்தி
அமுதர் ஆதலி னானும் மும்மலத்தின் அழிந்து
தோன்றுயிர் அருளிடத் தனவாய்
அமுத மென்மொழி எமையறி யறிவுஅங்கு அழிவது
இன்மையினானும் அப்பெயராம்"

திருவானைக்காவில் தல விருட்சம் 'சம்பு' எனப்படும் நாவல் மரம். இது சம்பு முனிவர் வயிற்றிலிருந்து முளைத்து, இறைவன் ஆணையால் இங்கு நிலைபெற்றது. இதனடியில் இறைவன் கோயில் கொண்டான். ஆதலால் இத் தலம், சம்புகேசுவரமாயும், மூர்த்தி சம்புலிங்கமாயும் பெயர் பெறும் தன்மை வாய்ந்தது. இன்னும் இந் நூலில் வழிபட்டு உயர்ந்தார் வரலாறு முதலாக எண்ணற்ற வரலாறு கூறப்படுகின்றது.

12. மகா வித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளை

கவிச்சக்கரவர்த்தி என்ற பட்டம் எப்படிக் கம்பர் ஒருவருக்கே உரித்தானதோ அதுபோல, மகா வித்துவான் என்ற பட்டமும் திரிசிரபுரம் மீனாட்சிசுந்தரம் பிள்ளை ஒருவருக்கே உரித்தானதாகும். இவர் திருவானைக்கா அகிலாண்டநாயகி மாலை, அகிலாண்டநாயகி பிள்ளைத் தமிழ் என்னும் இரண்டு நூல்களைத் திருவானைக்காத் தலத்தின்மீது பாடியிருக்கிறார். அவர்தம் இருபத்தோராம் வயதிலேயே இவ்விரு நூல்களைப் பாடிவிட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

இவர் அகிலாண்ட நாயகி மாலையைப் பாடியது, ஒரு சுவையான நிகழ்ச்சியாகும். இவரும் இவர்தம் நண்பர்களும் திருவானைக்காப் பெருமானை வணங்கிவரப் புறப்பட்டுக் காவிரியின் தென்கரையிலுள்ள ஓடத்தில் ஏறி அமர்ந்தார்கள். உடன் வந்த, சிதம்பரம் பிள்ளை என்பவர் இவரை நோக்கி, ஸ்ரீஅகிலாண்டேசுவரியின்மீது ஒரு மாலை இயற்ற வேண்டுமென்று கேட்டுக் கொண்டார். அப்போது, உடன் சென்றவருள் ஒருவர், "திருவண்ணாமலையை வலம்வரத் தொடங்கிய துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகள் ஒருமுறை வலம் வருவதற்குள், சோண சைல மாலையைப் பாடிமுடித்ததைப்போல நீங்கள் சம்பு நாதரைத் தரிசனம் செய்து திரும்புவதற்குள், அம் மாலையைச் செய்வதற்கு இயலுமா?" என்று கேட்டார். "நேருமானாற் செய்யலாம்" என்று பதில் கூறியவர். எல்லாரும் வியக்கும்படியாக, இறைவனைத் தரிசித்துத் திரும்புவதற்குள் நூறு விருத்தங்களில் செய்து முடித்ததே இந்த அகிலாண்டநாயகி மாலை ஆகும். இந்த நூலில் ஒவ்வொரு செய்யுளிலும் வகைவகையான நயம் அமைந்திருப்பதைக் காணும் ஒவ்வொருவரும், இவ்வளவு விரைவில் இத்துணைச் சுவை மிக்க செய்யுட்களைப் பாடிய இவர், இறைவன் திருவருள் பெற்றவரே என எண்ணி வியப்பர்.

ஒரு பானைச் சோற்றுக்கு ஒரு சோற்றையல்லவா பதம் பார்க்கிறோம்? தன்னுடைய செவி, கண், வாய், கை முதலான அங்கங்களைத் தாம் பெற்றது எதற்காக என்பதை ஒரு பாடலிலே கூறுகின்றார்:

"ஒப்பில்நின் புகழே கேட்கஎன் செவி; கண்
ஓங்குநின் உருவமே காண;
தப்பில்நின் றனையே பாடிடவாய்; கை
தவாதுநின் வடிப்பணி ஆற்ற
இப்படி யுறுமேற் செங்கதி ருதயம்
எத்திசை எழிலுமற் றென்னே!
கப்பிணர் தருக்கள் சூழ்திரு வானைக்
காவகி லாண்ட நாயகியே!" (42)

"கண் பெற்றது அன்னையைக் காண; செவி பெற்றதும் அவள் புகழ் கேட்க; வாய் பெற்றதோ நாளும் அவளை ஏத்த; கை பெற்றதும் அவளைத் தொழவே ஆகும். அவ்வரமே அன்னை தருவாளே யானல் கிழக்கிலே உதிக்கவேண்டிய சூரியன் எத்திசையில் உதித்தாலும், தமக்கேதும் கேடில்லை; தாம் பெறவேண்டிய பேற்றைப் பெற்ருகி விட்டது" என்று மிக உருக்கமாகப் பாடியிருக்கிறார்.

அகிலாண்டநாயகி பிள்ளைத்தமிழ், இவர் பாடியுள்ள எட்டுப் பிள்ளைத்தமிழ் நூல்களுள்ளும் முதன்முதலில் பாடப்பட்டதாகும். இவர் சென்னைக்குப் போயிருந்தபோது, சிறந்த தமிழறிஞரான மழவை மகாலிங்கையரைச் சந்தித்தார். அப்போது இவருடன் காஞ்சிபுரம் சபாபதி முதலியார், திருவேங்கடாசல முதலியார், திருவம்பலத்து இன்னமுதுப்பிள்ளை ஆகியோரும் உடனிருந்தனர். அப்போது மகாலிங்கையர் ஏதாவதொரு பாடல்சொல்லும் எனக் கேட்க, மீனாட்சி சுந்தரம் பிள்ளையும் ஒரு பாட்டைச் சொன்னார்.

"மரகத வரையிள கியஎழி லெனஎழில்
வாய்த்த செழுஞ்சுடரே!
மதுரித நவரச மொழுகக் கனியும்
வளத்த நறுங்கனியே
தரணி மிசைப்பொலி தருமக் குயிலே!
தாலோ தாலேலோ!
தழையுந் தந்திவனத்தமர் மயிலே
தாலோ தாலேலோ!"

என முடியும் பாட்டை மீனாட்சிசுந்தரம் பிள்ளை கூறக் கேட்ட அவர்கள் இப் பாடலின் சொல்லழகு, பொருளழகுகளில் திளைத்து, 'இதை யார் பாடியது?' என்று கேட்டார்கள். மீனாட்சிசுந்தரம் பிள்ளையே பாடிய அகிலாண்டநாயகி பிள்ளைத்தமிழில் வரும் பாடலே அது என்று தெரிந்து, அவர்கள் மீனாட்சிசுந்தரம் பிள்ளையை மிகவும் பாராட்டினார்கள்.

இந் நூலில், அன்னையின் கையைக் குறிப்பிடும்போது, "வளர நங்கள் முப்பத்திரண்டும் புரிகை" என்று பாராட்டுகின்றார். அம்மையின் கூந்தல் அழகை,

"நெரிந்து சரிந்து நெய்த்து இருண்டு
நீண்டு சுருண்டு மகரந்தம் நிமிரத் திமிர்ந்து
நறிய பனிநீரில் நனைந்த குழல்"

என்கிறார். 'இத்தகைய சொல்லழகு மிக்க வருணிப்பு, வேறெங்கேனும் உண்டோ!' என்று வியக்குமளவிற்கு அம்மையின் குழலை வருணித் திருக்கிறார்.

வாரானைப் பருவத்தில் இவர் அன்னையை எப்படியெல்லாம் வரவேற்கிறார் பாருங்கள் :

"பொன்னே வருக! மூவுலகும் பூத்தாய் வருக! நாயேனைப்
புரந்தாய் வருக! வழுதியர்கோன் புதல்வி வருக! முகிற்கிளைய
மின்னே வருக! மெய்ஞ்ஞான விளக்கே வருக! மறைநான்கின்
விரிவே வருக! பேரின்ப விளைவே வருக! மிகுங்கருணை
யன்னே வருக! அகநெகுவார்க் கணியே வருக! அலர் மடவார்க்
கரசே வருக! உரைப்பருஞ்சீர் அம்மே வருக! அழற்கரத்து
மன்னே ருடலம் பகிர்ந்தவிள மயிலே வருக வருகவே!
மதமா தங்க வனத்துமட மானே வருக வருகவே!"

(வாரானை - 10)

இவர் அகிலாண்டநாயகியின்மீது அந்தாதி ஒன்று பாடியிருப்பதாகத் தெரிய வருகிறது. ஆனால், அந்நூல் இப்பொழுது கிடைக்கவில்லை.

13. தண்டபாணி சுவாமிகள்

அருள்மிகு தண்டபாணி சுவாமிகள் சிறந்த ஆசு கவி. சுமார் 50000 பாடல்கள் இவர் பாடியிருப்பதாகத் தெரிகிறது. இவர் திருவானைக்காத் திருத்தலத்திற்குப் பதிகங்கள், யமக அந்தாதி, வண்ணப் பாமாலை, திருப்புகழ் என்னும் நால்வகையான பாமாலைகளைத் தந்திருக்கிறார். திருவானைக்காத் தலத்தில் எழுந்தருளியுள்ள சம்புலிங்கர், அகிலாண்டநாயகி, கணபதி, முருகப் பெருமான் நால்வரையும் தனித் தனி நூலில் பாடியிருப்பது இவர் சிறப்பு.

"திருவானைக் காவுறையும் சிவபெருமானே!"

"ஆனைக்காவில் அமர்ந்தரு ளன்னையே!"

"ஆனைக்கா வுறை ஐங்கரப் பிள்ளையே!"

என்று இவர் பாக்கள் முடியும்.

"வேலும் மயிலுமே தம்மைக் காப்பன; வேலவனே தமக்குச் சொந்தம்'' என்று பாடுகின்றார்.

"எண்முகமும் போற்றும் எழிலானைக் காவளர்சேய்
சண்முகத் திருப்புகழைச் சாற்றுகின்றேன்—உண்முகத்தில்
வந்தவடி வேலுமயிற் பரியுமே எனக்கார்
சொந்தமெனக் காக்குந் துணை''

என்று பாடியுள்ளார். இவர் முருகன்மீது பாடியுள்ள பாக்கள் ''சண்முகத் திருப்புகழ்'' என்றும் அழைக்கப்படும் என்பது இவர் வாக்காலேயே தெரிகிறது.

இவர் ஆனைமுகனிடம் இக வாழ்வு இன்பத்தை வேண்டுகின்றார் :

"ஆனைக் காவளர் ஐங்கரப் பிள்ளைமேல்
தேனைப் போல்ப திகத்தமிழ் செப்புவேன்''

என்று கூறி,

"முண்டகப் பதமேமிக முன்னுகேன்
வந்து சோக மனைத்தும் ஒழித்து மெய்
வாழ்வ ளித்திடும் வல்லப மில்லையோ?''

என்று அவன், தமக்கு வரும் தொல்லையை ஒழிப்பான் என்று பாடியுள்ளார்.

உமையிடம், பிழையின்றிக் கவிதை பாடும் வரமும், சிவனிடம் இனிப் பிறவா வரமும் வேண்டிப் பாடும் பாடல்கள் குறிக்கத்தக்கன.

"மானைக் காட்டும் கரத்தோர் வள்ளல் மருவுதிரு
வானைக் காவிற் குலவும் அன்னையே—மோனை
வழுவாக் கவிபாடும் வாக்கு அருள்க''

என்று அன்னையிடமும்,

"பங்கயன்கை எழுதும்விதி பழுதெனினும்
திருத்தியருள் பாலிப்பா யென்று
அங்கண் நிலத் தினரறியத் துதிசெயுநான்
இனிப் பிறவா தருள்வாய் கொல்லோ?''

என்று இறைவனிடமும் வேண்டுகின்றார். இவ்வாறு ஒவ்வொருவரிடமும் ஒவ்வோர் வரம் வேண்டிப் பாடியிருக்கிறார்.

14. மனோன்மணி அம்மையார்

திருவானைக்காத் தலத்தைப் பாடிப் பரவிய பெண்பாலார் இவர் ஒருவரே. இந்த அம்மையார், அகிலாண்டநாயகியை வழிபட்டு வந்த ஒரு பக்தை என்பதை,

"அணிகொண்ட காவை அகிலாண்ட நாயகிக்கு அன்புசெய்யும்
பணிகொண்ட பாவை மனோன்மணி"

என்று; தண்டபாணி சுவாமிகள் குறிப்பிட்டுள்ளமை கொண்டு தெளிய லாம். ஔவை முதலியோருக்குப் பின்னால் தோன்றிய பெண்மணி களுள் அறிவிற் சிறந்தவர் இவரே என்று பலரும் புகழ்ந்திருக்கிறார்கள்.

"முன்னாளி லவ்வை முதலோ ரியம்பியபோல்
இந்நாளில் ஏவர் இயம்பினர்—மின்னாருள்
மண்ணிப்பாக் கம்வாழ் மனோன்மணிபோற் செந்தமிழை
எண்ணிப்பார்த் தேயுரைமி னே"

என்று இவரைப் பாராட்டுவர். இவர் திருவானைக்கா அகிலாண்ட நாயகி அந்தாதி பாடியிருக்கிறார். இவர் அபிராமி அந்தாதியை அடி யொற்றிச் சில பாக்களை இவ் வந்தாதி நூலில் செய்திருக்கிறார்.

"மணியே! மணியின் ஒளியே! ஒளிரும் மணிபுனைந்த
அணியே! அணியும் அணிக்கழகே! அணுகாதவர்க்குப்
பிணியே! பிணிக்கு மருந்தே! அமரர்பெரு விருந்தே!
பணியேன் ஒருவரை நின்பத்ம பாதம் பணிந்த பின்னே"

என்பது அபிராமிபட்டரால், அபிராமி அந்தாதியில் பாடப்பட்ட ஒரு பாடல். அதே பாடலை அடியொற்றி,

"மணியே மரகதவல்லியென் றேத்தி வருந்தும்அவர்
பிணியே அகற்றி மலவினை யாவும் பிரித்தபின்னர்
கணியா அனந்தங் கிருபையை யீந்திடுங் காவையளே
பணியேன் ஒருவரை நின்பாதம் போற்றிப் பணிந்தபினே"

என்று இவரும் பாடியிருக்கிறார்.

அன்னையின் இன்மொழி, சாயல், வேல்விழி ஆகியவற்றை இவர் அழகுற வருணித்துள்ளார்.

"குயிலைப் பழித்த மொழியையும், மேகங் குறித்தகவும்
மயிலைக் கழித்த வொயிலையும், கொல்லன் வடித்தெடுத்த
அயிலை நிகர்த்த விழியையுங் கண்டங் கதிசயித்துக்
கயிலைக் கிறையவன் காவையில் ஏங்குறுங் காரணங்கே"

என்னும் பாடலில் அன்னையின் மொழி, குயில்போல் இனிது, அன்னை மயில் போன்ற சாயலுடையவள், அவள் விழிவேல் போன்று கொடி யது; ஆனைக்காப் பெருமானை ஏங்க வைக்கும் அழகு அன்னையுடையது என்று போற்றியுள்ளார்.

அன்னையை வணங்குவதால் அடையும் பயன்களையும் அழகுறக் கூறுகிறார் :

"நிதிபெற லாகும், குபேரனைப் போல ; நிலையுலகில்
மதிபெற லாகும், மனுவாதி போல ; மனிதர்களின்
துதிபெற லாகும், அரிஅயர் போலச், சுகித்தபின்னர்
கதிபெற லாகும், தடையிலை—காவையைக் காண் மனமே !".

குபேரனைப் போன்று செல்வமும், மனுவாதிபோல அறிவும், அன்னையை வணங்குவார் அடைவர் என்கின்றார்.

15. கே. வி. சுப்பையர்

இவர் திருவானைக்காப் பதிற்றுப்பத்தந்தாதி என்னும் நூலை யாத்துள்ளார். இவ் வந்தாதி நூலைப் படித்தால் உண்டாகும் இன்பத்தை,

"உவமையிலா அமுதென்கோ ?
தேனொடு பால் என்கோ
எப்படி உரைப்பேன் ; இதனைக்
கற்பதனால் உண்டாகும் இனிமையை"

என்று பெரியவர்கள், சிறப்பித்துப் பாடியுள்ளார்கள்.

"எண்ணரிய பிறவிதனில் மானிடப் பிறவிதான்
யாதினும் அரிதரிது காண்
இப்பிறவி தப்பினால் எப்பிறவி வாய்க்குமோ
யாது வருமோ அறிகிலேன் !"

என்று பாடினார் தாயுமானவர்.

"நண்ணருமிப் பிறவி விடின்
நணுகுவதெப் பிறவிகொலோ நாயினேற்கு"

என்று இவரும் பாடுகிறார். பிறவி இல்லாப் பேரின்ப வாழ்வு பெறுதற்கு, இறைவன் திருவடியைச் சரணம் அடைகிறார்.

"நம்பகி லாண்ட வல்லி கொளமுன் னவிற்று
ஞானோப தேச ! சரணம் !
கம்பலை நீடு கங்கை யினும்கா விரிக்குக்
கனநல்கு நாத ! சரணம் !
பம்பெழு சாகரங்கள் திசைநான்கும் மல்கி
பரவு அப்பு லிங்க ! சரணம் !
வம்பவிழ் மேருவாவி நதியாகுமாறு
வரநல்கு வள்ளல் ! சரணம் !"

என்று இறைவனைச் சரண் அடைவதோடு இந் நூல் முடிவடைகிறது.

16. சிங்காரவடிவேல் வன்னியமுண்டார்

இவர் திருவானைக்காத் தலத்தின்மீது திருவானைக்கா அந்தாதி, அகிலாண்டநாயகி பதிகம் என இரு நூல்கள் செய்துள்ளார்.

"உள்ளேன் பிறதெய்வம் உன்னையல்லால்
எங்கள் உத்தமனே"

என்று பாடுவதால் இவர் தீவிரமான சிவப்பற்றுடையார் என்பது தெளிவாகும்.

"பணிஅம் பரப்பணி அம்பர! பத்தர்கள் பற்றுஅறுக்கும்
பணிஅம் பர!நின் பாதாம்புயம் அன்றிப் பரசுரரைப்
பணியம் பரவம் அவர்தளி நோக்கிலம் பார்வையினல்,
பண்ணியம் பரவை எனஒலி தோற்காப் பரம்பொருளே"

எனப் பாடியுள்ளார். இதனுல் மறந்தும் புறந்தொழாத இந்த ஆசிரியரின் தீவிரமான சிவப்பற்றுத் தெளிவாகத் தெரியவரும்.

ஆனைக்காவை இவர் தோற்கா, அத்திக்கா என்னும் பெயர்களாலும் வழங்குகின்ருர். கரிக்கா என்னும் பெயரையும் இவர் வழங்கியுள்ளார். ஆனைக்கா என்னும் பொருளையே, இப் பிற பெயர்களும் கொண்டுள்ளன. தோல் என்பதும், அத்தி என்பதும், கரி என்பதும் யானைக்கு வழங்கும் பெயர்களே.

17. வேலாயுத சுவாமிகள்

இவர் அகிலாண்டநாயகி அம்மனிடம் மிகுதியான பக்தி பூண்டவர். அகிலாண்டநாயகி அம்மன்பேரில் மூன்று பதிகப் பாமாலைகள் பாடியுள்ளார்:

1. அகிலாண்டநாயகி பதிகம்,
2. திருவானைக்கா அகிலாண்டநாயகி பிரார்த்தனைப் பதிகம்,
3. அகிலாண்டநாயகி நேரிசை வெண்பா.

"ஈன்ற தாய் கோபங்கொண்டு குழந்தையை விலக்கினுலும், அக் குழந்தை அத் தாயிடம் தானே மீண்டும் மீண்டும் செல்லும். அது போல, தாயே! காமத்தால் கன்னியரை நாடி அலையும் என்னைப் பாவி என்றே நீ விலக்கினுலும், உன்னையன்றி நான் எங்கே போவேன்?" என்று இவர் வருந்திப் பாடும் பாடல், அகிலாண்டநாயகி பதிகத்தில் வருகிறது:

"தருதுயரம் தடாதுவிடில் பெருங் கருணைத்
தாயே நின் சரண்வே றில்லை
மருளுமனப் பாவியனுய் மங்கையர்கள்
மலவுடம்பின் மடியு மென்னை
அரிசினத்தால் அருளாமல் அகற்றிடின்உன்
அருள்நினைந்தே அழுவேன்! அன்ருே!
விரைபொழில் திருவானைக்கா அமரும்
வித்தகி! நின் சரணம் போற்றி"

என்னும் இவர் பாடல், குலசேகரர் பாடியுள்ள வித்துவக்கோட்டு அம்மான் பாட்டைப் பெரிதும் ஒத்துள்ளது.

“தருதுயரம் தடாயேல் உன் சரணல்லால் சரணில்லை
விரைகுழவு மலர்ப்பொழில்சூழ் வித்துவக் கோட்டம்மானே
அரிசினத்தால் ஈன்றதாய் அகற்றிடினும் மற்றவள்தன்
அருள்நினைந்தே அழுங்குழவி அதுவேபோன் றிருந்தேனே!”

என்னும் பாடல் அடிகளையே, சற்று மாற்றி வேலாயுத சுவாமிகள் பாடியுள்ளார் எனலாம்.

பொய்மை கூறுதலும், பிறர் பொருளை விழைதலும், வஞ்சகம் செய்தலும் முதலான தன் தீக்குணங்களைக் களைந்து. நல்ல குணம் தருமாறு கீழ்வரும் பாடலால் வேண்டுகின்றார், சுவாமிகள் :

“வாய்மை மொழியேன்பிறர்தம் பொருள் விழைவேன்
வஞ்சகமு முள்வேன் மற்றும்
தீயதாம் விடையவா தனை மகிழ்வேன்
செருக்கிறைற் சிறந்தோர்ப் பேணேன்
பேயனேன் இனையதீக் குணங்களொழித்
துன்பெருமை பேசல் வேண்டும்
நேயமாம் வரமளிப்பாய் அகிலாண்ட
நாயகியே நின்தாள் போற்றி!”

பேயனும் பித்தனுமாகிய தன் பிழையைப் பொறுத்து, அருளு மாறு அன்னையை வேண்டுகின்றார் :

“நம்பினே னுன்னை நாளும்அகி லாண்டவம்மை
வெம்பிறவி தீர வினையேனுக்—கம்புவியில்
திக்கு வேறில்லை திருவருள்நீ செய்திலையேல்
எக்கதியு முண்டோ இயம்பு?”

என்னும் பாடலில், அன்னையே கதி; வேறு கதியில்லை என்று பாடி யிருக்கிறார்.

18. அப்புலிங்கம்

இவர் ஆனைக்கா முருகன்மீது பிள்ளைத்தமிழ்ப் பாடியிருக்கிறார். ‘காவை முருகன் பிள்ளைத்தமிழ்’ என்பது இதன் பெயர். பிள்ளைத் தமிழ் நூல்களிலே, அமைப்பிலும் பொருளிலும் இது புதுமையான போக்குக் கொண்டது.

காப்புப் பருவத்தில் பிள்ளையைக் காக்கும்படி தெய்வங்களை வேண்டுவதே மரபு. இம்முறையை இவர் மாற்றிக் காரைக்காலம்மை யார், நாவரசர், மெய்கண்டார், சிவஞான முனிவர், வள்ளலார் ஆகிய

வர்களைக் குழந்தையைக் காக்குமாறு வேண்டுகின்றார். இவர்கள் எல்லாம் மனிதப் பிறப்பெடுத்தவர்களே! எனினும், தெய்வத்தோடு ஒப்ப மதிக்கத் தக்கவர்கள்.

திருவானைக்காவிற்கு இவரும் ஒரு புதுப்பெயர் சூட்டியுள்ளார். திருநாவற்காடு என்பதே இவர் வழங்கியுள்ள பெயர்.

"வருக! திருநாவற் காட்டின்
வள்ளால் வருக, வருகவே!"

என்கிறார்.

முருகனை அழகன் என்றும், தமிழன் என்றும் போற்றுகின்றார்.

"மற்றை உலக மானுடத்து
மதலையரைப் போல் மாயாத
மாண்போடு அழகுச் சேயோனாய்
மருதக் காவை மாநகரத்து
உற்றே இருந்த பெருந்தமிழன்"

அழகனாகிய முருகன், தமிழகம் போற்றும் தமிழ்க் கடவுள்; தமிழ் தந்த கடவுள்; அதனால் அவனைப் பெருந்தமிழன் என்றே பெரிதும் போற்றுகின்றார்.

"சேனாறு வானவர் சேனை முதலி; எம்
செந்தமிழ் தந்த முதல்"

"எங்கள் காவை வளர் தெய்வமே! தமிழர்
ஏத்தும் ஞானகுரு பண்டிதா!"

என்றும் போற்றுகின்றார்.

இவர் முருகனை உறங்க வைக்கக் கூறும் காரணம், இன்றைய உலகியலைச் சுட்டுவதோடு, சுவையான காரணமாகவும் இருக்கின்றது.

"மக்களுக்கு உள்ளத்தில் தெளிவு இல்லை; ஓயாமல் உறுமிப் போராடுகிறார்கள். ஓஓ ... என்று ஊளையிடலே உயிர் வாழ்வின் உண்மைக் குறிக்கோள் என்று இளைஞர்கள் நினைக்கின்றனர். அம் மக்களைப் பெற்ற அன்னையரோ பேதைமையில் மூழ்கியுள்ளனர். வயிற்றுப் பிழைப்புக்காக எதையும் மறுக்காமல் பிழை என்று உணர்ந்தும் கள்ள மனத்தோடு செய்து, ஆண்கள் காலம் கழிக்கிறார்கள். இவர்கள் நிரம்பியிருக்கும் உலகத்தைக் கண்டால், உன் வேலானது அழித்துவிடும். ஆதலால் நீ உறங்குவாயாக! என்று முருகனுக்குத் தாலாட்டுப் பாடுவது விந்தையாக மட்டுமல்ல, சிந்தனையைத் தூண்டுவதாகவும் உள்ளது."

இருக்கின்ற உலக நிலைக்கு வருந்தும் இவர், உலகம் மாறவேண்டிய விதத்தை மற்றொரு பாடலில் மிகவும் அழகான முறையில் கூறுகிறார். அப் பாடலைப் பாருங்கள் :

“சகவாழ்வி லேயுறும் சங்கடப் பாலையைச்
சகலரும் தாண்டி விடுக !
சந்தோடம் எனும் அரிய விந்தைக் கொழுங்கனிச்
சாற்றைச் சுவைத்து அனைவரும்
இகலோக வாழ்வையே இந்திரா தியர்பெறும்
இன்பமய மாக்கி விடுக !
ஈடிலாப் பேரறிவு தேடாமல் வந்துஇவண்
எல்லோ ருளத்தும் மலர்க !
திகழ்கின்ற புத்தொளித் தீபச் சுடர்க்குளத்
தீக்குளித்து இழிவு மாய்க !
தெய்வீக முற்றுமே எய்தி மானுடமெலாம்
தேவைகள் கடந்து வாழ்க !
யுகமுடிவு கண்டுபுது சுகவாழ்வு பூக்களன
உலகெலாம் கேட்டு மகிழும்
ஒலிஎங் கணும்பரவ ஒளிர்காவை யின்குமர !
உனது சிறுபறை முழக்கே !”

உலகம் முற்றும் தெய்விகப் பெருவாழ்வு வாழ விழைகின்றார் கவிஞர்.

ஐயடிகள் காடவர்கோன் முதலாக அப்புலிங்கம் வரையில் அமுதலிங்கேசுவரரை எப்படியெல்லாம் போற்றிப் பரவியிருக்கிறார்கள் என்பதைத் ‘திருவானைக்கா இலக்கியம்’ என்னும் இப் பகுதியில் கண்டு மகிழ்ந்தோம். இலக்கிய நயமுணர்வார் இன்னும் எத்தனை எத்தனையோ சொல்லோவியங்களை இவ் விலக்கியங்களில் காணலாகும். இவற்றைப் பயிலப் பயில—ஊன்றி நோக்கநோக்கச் சிந்தனைக்கு நல்விருந்தாம்.

3. சமயமும் தத்துவமும்

சமயம்

சமயம் என்ற தலைப்பில் நான் கூற எண்ணியிருப்பது திருவானைக் காக் கோவிலில் நாள்தோறும் நடைபெறும் பூசைகள், விசேடதின பூசைகள், திருவிழாக்கள் ஆகியனவாம். இவைகளே நம் கண்முன் செய்யப்படும் வழிபாடு.

(1) திருவானைக்கா—அண்ணல் (2) திருவானைக்கா—அகிலாண் டேஸ்வரி ஆகிய இரண்டு மூர்த்திகளும் ஒரே கோவிலில் இரண்டு தனித் தனிப் பாகங்களில் உள்ளனர். சிவன் கோவில் மேற்கு முகமாகப் பார்த்து இருக்கிறது. அகிலாண்டேஸ்வரி கோவில் கிழக்கு முகமாகப் பார்த்து இருக்கிறது. சுவாமி கோவிலுக்குத் தனியாகப் பரிவார தேவதைகளும், அம்மன் கோவிலுக்குத் தனியாகப் பரிவார தேவதை களும் உண்டு. சுவாமி கோவிலில் பூசை நடக்கும்போது அதன் பரி வார தேவதைகளுக்கும் பூசை நடக்கும். அதேமாதிரி அம்மன் கோவிலுக்கும். சுவாமி கோவில் பரிவார தேவதைகள், கணபதி, சுப்பிரமணியர், கல்யாணசுந்தரர், ஸ்ரீ லக்ஷ்மி, நடராசர், நவக்கிர கங்கள், சூரியன், சந்திரன், சண்டேசுவரர், தட்சிணாமூர்த்தி. இவர்கள் உட்பிராகாரப் பரிவார தெய்வங்கள்; வெளிப் பிராகாரத்திலும் சில பரிவார தெய்வங்கள் உண்டு. அதாவது இரண்டாம் பிராகாரத்தில் உற்சவ விக்கிரகங்கள் ஒரு புறம்; மற்றொரு புறம் வெளிப்புறப்பாடு நடராஜர்.

தினசரி பூசைகள்

சுவாமி கோவிலிலும் அம்மன் கோவிலிலும் நாள்தோறும் நான்கு கால பூசைகள் நடக்கின்றன; காலை எட்டரை மணிக்கும் மத்தியானம் 11½ மணிக்கும், சாயந்திரம் ஐந்து மணிக்கும், அர்த்தசாமம் 9 மணிக் கும் நடைபெறுகின்றன. சுவாமிக்கும் அம்மனுக்கும் 16 விதமான உபசார பூசை. ஒவ்வொரு கோவிலிலும் பூசைகள் நடக்கும்போது, அந்தந்தக் கோவில் பரிவார தெய்வங்களுக்கும் நடந்துவிடும். ஒவ் வொரு காலத்திலும் அபிடேகம், ஆராதனை, உபசார பூசை, தேவாரம் ஓதுவது இவைகள் நடைபெறுகின்றன.

இந்தக் கோவிலில் ஒரு தனிப்பட்ட விஷயம் என்னவென்றால் சுவாமிகோவில் மத்திய கால பூசையை அந்தக் கோவிலில் பூசை செய்

யும் சிவாச்சாரியார் செய்வதில்லே. ஆனல் அந்த வேளேயில், எந்த சிவாச்சாரியார் அம்மன் கோவிலில் செய்கிருரோ, அவர் தம்மை அம்மனுகவே பாவித்துப் புடவை உடுத்துக் கிரீடம் தரித்து, யானே முதலிய எடுபிடிகளுடன், மேளவாத்தியங்களுடன் புறப்பட்டுச் சுவாமியை வலமாக வந்து அபிடேகம் முதலியவை செய்து, தீபாரா தனே செய்வது வழக்கம். அதாவது அம்மனே, சுவாமியைப் பூசை பண்ணுவதாக ஐதீகம். இந்தப் பூசையான உடனேயே அதே சிவாச் சாரியார் பூசை செய்து, வாசல் தாண்டியவுடன் ஒரு காராம் பசுவை பூசை செய்து, நைவேத்தியம் செய்து, தீபாராதனேகள் செய்து வழி பாடு செய்வார். பிறகு இந்தச் சிவாச்சாரியார் அம்மன் கோவிலுக் குப் போய் தம் புடவையையும் கிரீடம் முதலியவைகளேயும் களேந்து விட்டு, அம்மனுக்கு மத்திய கால பூசை செய்வார். இவ்விதம் அம்மனுகை வந்து வழிபாடு செய்வதும், அதே அம்மன் பசுவை வழிபாடு செய்வதும் சிறப்பான அம்சம். இதைத் தரிசிப்பதற்கு மக்கள் ஏராளமாகக் கூடுவார்கள். பசுவைப் பூசை பண்ணுவது, லோகமே க்ஷேமமாக இருப்பதற் கென்றும் சொல்லுகிருர்கள். எல்லாத் தெய்வங்களும் பசுவில் அடங்கியிருக்கின்றன என்பது ஒரு கொள்கை.

விசேட பூசைகள்

ஒவ்வொரு தமிழ் மாதமும் மாதப் பிறப்பன்று தினசரி பூசையில் மாதத்துக்கேற்றபடி பழத்தை வைத்து நைவேத்தியங்கள் செய்யப் படும். பிரதோஷ காலங்களில் மக்கள் ஏராளமாக சுவாமியைத் தரிசிக்க வருவார்கள்.

பிரம்மோற்சவம் வெகு சிறப்பான உற்சவம்; தொடர்ந்து நாற்பது நாட்கள் நடைபெறும். எல்லா மூர்த்திகளுக்கும் அப்பொழுது விழாக்கள் நடைபெறும். முதல் நாள் மண் எடுத்தல்; தொடர்ந்து விநாயகருக்கும் சுப்பிரமணியருக்கும் 5 நாட்களும், நால்வருக்கு 3 நாட்களும், கல்யாண சுந்தரருக்கு 3 நாட்களும், சந்திரசேகரருக்கு 6 நாட்களும், சோமஸ்கந்தருக்கு 10 நாட்களும், பல்லக்குச்சொக் கருக்கு 3 நாட்களும், மௌன விழா 3 நாட்களும், சண்டிகேசு வரருக்கு 3 நாட்களும், பஞ்சபிராகாரம் 1 நாளும் விடையாற்றி 1 நாளும், மண்டலாபிஷேகம் 1 நாளும் ஆக 40 நாட்கள் இந்த பிரம் மோற்சவம் நடைபெறும்.

மாசி மாதம் மிருகசிரிச நட்சத்திரத்தில் கொடியேற்றமும், பங்குனி ரேவதியில் தேரோட்டமும், ரோகிணியில் தீர்த்தமும், பங்குனி மாதம் சித்திரை நட்சத்திரத்தில் பஞ்சப் பிராகாரமும் நடைபெறும். அந்தப் பஞ்சப்பிராகாரமாவது ஐந்து பிராகாரங்களேயும் சுற்றி வருவது. அது இந்தக் கோவிலுக்கே உரிய சிறப்பான திருவிழா. திருநீறிட் டான் மதிலேச் சுற்றிப் பிராகாரம் வரும். அன்று சுவாமிக்குப் பெண் கோலம், அம்பிகைக்கு ஆண்வேடம் கொண்டு ஐந்து வீதிகளிலும்

உலா வருவது கண்கொள்ளாக் காட்சியாகும். நல்ல வேதகீதங்கள் முழங்க, சுவாமியைத் தொடர்ந்து இசைவாணர் செல்வர். திருமுறைகள் வெகு விசேடமாகப் பாடப்பட்டு மக்களுக்குச் செவிக்குப் பெரும் விருந்து அளிக்கப்படும். இந்த விழாவுக்குமுன், பிடாரியம்மனுக்கு 5 நாள் உற்சவம் நடக்கும்.

வைகாசி மாதத்தின் வசந்தோற்சவம் வசந்த மண்டபத்தில் 10 நாட்கள் நடைபெறும்.

ஆனி மாதத்தில் பௌர்ணமியில் முப்பழ அபிடேகமும், ஆனித் திருமஞ்சனத்தில் நடராசர் புறப்பாடும் நிகழும். ஆடி மாதத்தில் கார்த்திகையன்று கொடியேற்றம்; தொடர்ந்து ஆடிப்பூர விழா 10 நாட்கள் நடக்கும். கடைசி நாளாகிய பூரத்தில் உட்குளமாகிய சூரிய தீர்த்தத்தில் தெப்ப விழா நடைபெறும்.

ஆவணி மாதத்தில்—மூலத்தில், பிட்டுக்கு மண் சுமந்த ஐதீகம் நடைபெறும்.

புரட்டாசியில் 10 நாட்கள் அம்மன் சந்நிதியில், நவராத்திரி மண்டபத்திலே நவராத்திரி விழா நடைபெறும். அப்போது சமயச் சொற்பொழிவுகளும் நல்ல இசை அறிஞர்களின் கச்சேரிகளும் மற்றும் நாட்டியம் முதலிய கச்சேரிகளும் நடைபெறும்.

ஐப்பசியில் கந்தர் சஷ்டியில் சூரசம்ஹார உற்சவம் நடைபெறும்.

கார்த்திகையில் சோமவாரந்தோறும் சங்காபிஷேகமும், பெரிய கார்த்திகையன்று சுடலைத் தீபமும் நடைபெறும்.

மார்கழியில் திருவாதிரை நாளில் இரண்டாம் பிராகாரத்தில் உள்ள நடராசர் அறுபத்துமூவருடன் புறப்பாடு. முதல் பிராகாரத்தில் உள்ள மூல நடராசர் புறப்படுவது இல்லை.

தை மாதத்தில், உற்சவம் நடந்து கடைசி நாளில் இராமர் தீர்த்தத்தில் தெப்பத் திருவிழா நடைபெறும். கோச்செங்கணுருக்கு மாசித் திங்களில் விழா நடைபெறுகின்றது.

தத்துவம்

தத்துவம் என்ருல், அடிப்படையான கொள்கை. கோவில் வழிபாட்டின் அடிப்படையான கொள்கைகள் யாவை என்பதை நாம் சற்று கவனிக்கலாம்.

கோவில் வழிபாட்டின் அடிப்படை

கோவிலில் எழுந்தருளியிருக்கும் தெய்வம் மந்திர சக்திகளால் கோவிலின் சிலைகளில் பிரசன்னமாகி அருள் செய்கின்ருர் என்பது

தொன்று தொட்டு இருந்துவரும் நம்பிக்கையாகும். கோவில் வழிபாடு, இந் நாட்டில் தொன்றுதொட்டே உள்ளது. அது தொல்காப்பிய காலத்திலேயே இருந்து வந்ததாகச் சொல்லுகிருர்கள். சங்க காலத்தில் புறநானூற்றில் பரிபாடலில், இன்னும் ஏனைய சிறந்த நூல்களில், கோவில் வழிபாடு மக்கள் வாழ்வோடு இணைந்திருந்தது என்பது எடுத்துக் காட்டப்பட்டிருக்கிறது. தெய்வ உருவிற்குக் கல் கொள்ளுதல் பதிற்றுப்பத்தில் கண்டிருப்பதாகச் சொல்லுகிருர்கள்.

நம் தமிழ்நாட்டில், பண்டைக் காலந்தொட்டே திருக்கோயில்கள் அமைத்து அக் கோயில்களில் இறைவன் உருவத்தைச் சமைத்து அதில் இறைவனைப் பிரதிஷ்டை செய்து மக்கள் வணங்கி வந்தார்கள். ஆக, உருவ வழிபாடு பழங்காலந்தொட்டே நாட்டில் இருந்து வந்திருக்கிறது.

'படிமம்' என்பது, 'பிரதிமா' என்னும் வடமொழியின் திரிபு. இது, 'தேவர்க்கு ஒப்புமையாக நிலத்தின்கண் செய்து அமைத்த தேவர்' என்பதாகப் பெரியோர்கள் போற்றி வந்துள்ளார்கள். அவருக்குப் பூஜையும் விழாவும் நடத்துவது வழிபாடு. இது வேதத்திலும் ஒப்புக் கொள்ளப்பட்டிருக்கிறது. இதற்கு விரோதமாக வேதம் ஒன்றும் சொல்லவில்லை. இந்த வேத நெறியிலே உருவ வழிபாடு ஒரு பகுதியாகும்.

வேத நெறியை ஆறு சமயங்களாக வகைப்படுத்தி அதிமேதையான பெரியார் ஸ்ரீசங்கராச்சாரியார் நிலைநிறுத்தியுள்ளார். இந்த ஆறு சமயங்களும் அவர் காலத்தில் தமிழ்நாட்டில் வேத நெறியின் அங்கங்களாக அமைந்திருக்கவேண்டும். அந்த ஆறு சமயங்களில் ஒவ்வொன்றிலும் ஒரு தெய்வத்தை மூல தெய்வமாக வைத்து வழிபடுவது காணப்படுகிறது. கணபதியை முதல் தெய்வமாக வைத்தால் கணபதி வழிபாடு. சுப்பிரமணியரை முதல் தெய்வமாக வைத்தால் கௌமார வழிபாடு. சிவனை முதல் தெய்வமாக வைத்தால் அது சிவ வழிபாடு. விஷ்ணுவை முதல் தெய்வமாக வைத்தால் திருமால் வழிபாடு. தேவியை முதற்பொருளாகக் கொண்டால் சாக்த வழிபாடு. சூரியனை முதல் தெய்வமாகக் கொண்டால் சூரிய வழிபாடாகும்.

மேலே குறிப்பிட்ட ஆறு வேத நெறிச் சமயங்களில் திருவானைக்காவில் சிவனை வழிபடுவது சிவன் வழிபாடு. இந்தத் தலத்தில் தேவிக்கும் ஒரு முக்கியத்துவம் கொடுத்து, சாக்த வழிபாடு நடந்திருக்கலாம் என்று தோன்றுகிறது. தேவிக்கு இங்கு முதலிடம் கொடுக்கப்படுவதால், இவ்வாறு கருத நேரிடுகிறது.

மதம் என்பதற்கு என்ன பொருள்? 'ம' என்ற மனிதனை 'தம்' என்ற கடவுளுடன் இணைப்பதே மதமாகும். உலகின் பல்வேறு பகுதிகளில் பல்வேறு மதங்கள் இருந்து வருகின்றன. எல்லாம் வல்ல இறைவனை 'அல்லா' என்றும், 'அரன்' 'அரி', 'பரமண்டலத் தந்தை'

என்றும், 'சொற்களால் விளங்காத நிர்வாணம்' என்றும் பலவாறுகக் குறிப்பிடுவார்கள். தம்தம் மதமே இறைவனை அடைதற்குரிய வழி என்று அந்தந்த மதங்கள் வலியுறுத்தினாலும், நாம் வழிபடும் இந்து மதமாவது, எம்மதமும் சம்மதமே என்னும் அடிப்படையில், பிற மதத்தினராயினும் தம் குறிக்கோளில் நிலைத்து நிற்பரேல், இறைவன் அடிசேர்வார் என்று பெரியோர்களால் பின்பற்றப்பட்டு வந்த ஒரு சிறந்த மதமாகும். நம்முடைய திருநாவுக்கரசர்,

'விரிவிலா அறிவி னார்கள்
வேறொரு சமயம் செய்தே
எரிவினால் சொன்னாரேனும்,
எம்பிரார்க்கு ஏற்றதாகும்'

என்பதை நினைந்து இன்புறுவோம். விவேகானந்தரும் இவ்வாறே சொல்லியிருக்கிறார். தமது சிக்காகோ சொற்பொழிவில், ஒவ்வொரு மதத்திலும் உண்மை இருக்கிறது என்பதை வலியுறுத்தியிருக்கிறார்.

நாம் இங்குக் கவனிக்கவேண்டியது ஒன்று உண்டு. திருவானைக்காக் கோவில் புராணம் இந்த உண்மையை நிலைநிறுத்துகிறது. திருவானைக்காக் கோவிலில் யானைக்கும் சிலந்திக்கும் வழிபாட்டில் சண்டை நடந்த செய்தி இங்கு எண்ணத்தக்கது. நமது வைதிக பூஜையைப் போல யானை தண்ணீராலும் பூவாலும் பூஜை செய்தது. சிலந்தியோ, அது தவறு என நினைத்து, பூவையும் அகற்றி இறைவன் பேரில் விழும் செத்தைகளையும் போக்கி அவைகள் இறைவன்மீது விழாமலிருக்கக் கூடு — அதாவது, சிலந்திக்கூடு — அமைத்துப் பூஜை செய்து வந்தது. யானை பூஜை செய்து முடிந்து அது போனபின்னர்ச் சிலந்தியானது தன்னுடைய பூஜையை நடத்தும். ஒரு நாள் சிலந்திக்கு யானைமீது கோபம் வந்துவிட்டது; யானை வழக்கப்படி பூஜை செய்ய வந்தபோது அதன் துதிக்கையின் வழியாக உள்ளே சென்று அதைக் கடித்தது. அதனால் யானையும் மாண்டது! சிலந்தியும் மாண்டது! கடவுள் இருவருக்குமே மோட்சம் கொடுத்தார். ஒரு வழிபாட்டுக்கு மற்றொரு வழிபாடு குறைந்ததன்று என்பது இதிலிருந்து தெரிகிறது.

கண்ணப்ப நாயனார் சரித்திரம் இதை நன்றாக வெளிப்படுத்துகிறது. திருவானைக்கா எம்பிரானை திருஞானசம்பந்தர் வழிபாடு செய்தபோது, கண்ணப்ப நாயனாரின் பக்தியையும் அவர் இறைவனை வழிபட்ட வரலாற்றையும் நினைத்து, 'ஊனொடு உண்டல் நல்லது, ஊனொடு உண்டல் கெட்டது' என்று தொண்டர்கள் இருவிதமாகப் பேசவும், அன்புடன் செய்யப்படும் எல்லா வழிபாடுகளையும் ஏற்றுக்கொள்பவன் என்று பாடுகிறார். அதாவது, நம் முன்னோர்கள் இறைவன் வழிபாட்டு முறையில் ஒரு சமரசத்தை ஏற்படுத்தினார்கள். அன்போடு இருந்தால், ஊனொடு வழிபட்டாலும் இறைவன் ஏற்றுக்கொள்வான்;

அன்பில்லாமல் கோலாகலமாய் வழிபாடு செய்தாலும் இறைவன் அதை ஏற்றுக்கொள்ளமாட்டான் — சிரிப்பான்—என்பதே அந்த சமரசத்தின் அடிப்படை உண்மை.

நம் முன்னோர் ஏற்படுத்திய இறை வழிபாட்டை பயத்துடனும், பக்தியுடனும், அன்புடனும் நாம் கடைப்பிடிக்கவேண்டும். நம்முடையது தான் 'மேல்' என்று மற்ற மதவழிபாட்டைக் குறைசொல்லக் கூடாது. இது நம் மதத்தின் ஓர் அடிப்படைக் கொள்கை. இதை நாம் கடைப்பிடித்தால், இந்தக் காலத்துக்கு அவசியமாயிருக்கின்ற எல்லா மதங்களுக்குள்ளும் ஓர் அன்பான தழுவல் ஏற்படும். எதிர்காலத்தில் நாம் எதிர்பார்க்கும் கொடுரங்களில் இந்தச் சமயங்களுக்குள் போட்டாப் போட்டி போன்ற கொடுர நிலை ஏற்படவே வேண்டாம். இதுவே, நம்முடைய மதத்தின் அடிப்படைக் கொள்கை.

நம்முடைய மதத்தின் முக்கிய அடிப்படைக் கொள்கை ஒன்றை எடுத்துச் சொன்னேன். அந்த அடிப்படைக்கு அடிப்படை, 'கடவுள்' என்ற பரமாத்மா இருக்கிறார் என்பது பற்றிய ஆதாரமாகும். கடவுள் இல்லை என்று நாத்திகர்கள் பேசுகிறார்கள். அது பிசகு என்று திருநாவுக்கரசு நாயனார் கண்டிக்கிறார்:

"நடையை மெய்யென்று நாத்திகம் பேசாதே
படைகள் போல்வரும் பஞ்சமா பூதங்கள்
தடையொன்று இன்றியே தன்அடைந் தார்க்கெலாம்
அடைய நின்றிடும் ஆனைக்கா அண்ணலே!" (5539)

என்றவாறு, இறைவன் இல்லையென்ற கொள்கையை நன்றாகக் கண்டிக்கிறார்.

கடவுள் இருக்கிறார் என்பதை எப்படி மெய்ப்பிப்பது? கடவுள் ஒருவர் இருக்கிறார்; அவர் எங்கும் உள்ளவர்; பிறப்பு இறப்பு அற்றவர்; அவர்தான் எல்லாப் பொருள்களிலும் கலந்து இயக்குபவர்; அவர் அழிவில்லாதவர்; எல்லா உயிர்களுக்கும் துணையானவர்; அவருடைய அருளாலேதான் ஒவ்வொரு ஜீவாத்மாவும் நன்மை அடைய வேண்டும் என்பதாக எல்லா நாயன்மார்களும் கருத்துத் தெரிவித்துள்ளார்கள். "கண்டதே காட்சி கொண்டதே கோலம்" என்பதை அவர்கள் கண்டித்துள்ளார்கள். ஊனக்கண்ணால் பார்க்காவிட்டால் ஒரு பொருள் இல்லையென்று ஆகிவிடுமா? இறைவன்,

"விறகில் தீயினன் பாலில் படுநெய்போல்
மறைய நின்றுளன் மாமணிச் சோதியான்
உறவுக்கோல் நட்டு உணர்வுக் கயிற்றினால்
முறுக வாங்கிக் கடைய முன்நிற்குமே" (6121)

பாலிலே நெய் மறைந்திருக்கிறது; விறகில் தீ மறைந்திருக்கிறது; மணியில் ஜோதி மறைந்திருக்கிறது. இரண்டு விறகைத் தட்டி

நெருப்பு உண்டாக்க வேண்டும்; பாலைக் காய்ச்சி உறை ஊற்றித் தயிர்செய்து கடைந்து வெண்ணெய் எடுத்துக் காய்ச்சி நெய் உண்டாக்க வேண்டும். மணியில் படிந்துள்ள தூசுகளைப் போக்கிப் பட்டை தீட்டினுல், அது நல்ல ஒளியினை வீசும். அஃதேபோல் மறைந் திருக்கும் பரமாத்மாவை, அவருடைய உடைமை என்று நாம் நம்மைக் கருதி அவரை நேசித்து, அந்த உறவினுல் அன்பு மேலிட்டு அந்த அன்புக் கயிற்றினுல் முறுக வாங்கிக் கடைந்தால், வெண்ணெய் கிடைக்கும், நெய் கிடைக்கும்—அதேபோல மறைந்திருக்கும் இறை வன் நம் முன் நிற்பான்! தரிசனம் தருவான் என்பது திருநாவுக் கரசருடைய வாக்கு.

(1) பாலில் நெய் மறைந்திருப்பதை நாம் எப்படி உணரு கிருேமோ அதைப்போல் அவரை நேசித்தால் உணரலாம். நேசிக் காமல் கண்டதே காட்சி என்று, கடவுள் இல்லை என்று தள்ளுவது அறிவுக்கு ஒவ்வாதது. பெரியோர்களின் அனுபவ நன்மையை நாமும் கடைப்பிடித்துப் பார்த்து, அப்போது அனுபவத்துக்கு ஒத்து வரா விட்டால் தள்ளிவிடலாம்.

(2) கடவுள் இருக்கிருர் என்பதை அனுபவ வாயிலாகப் பெரி யோர்கள் உறுதி செய்திருக்கிருர்கள். நாம், சமஸ்கிருதம் தெரியாத தால், வேதத்தையும் உபநிஷத்தையும் சொல்லவில்லை. நாயன்மார் களில் மூவர், ஒவ்வொருவரும் கடவுளை நிதர்சனமாகத் தரிசித்துக் களித்துள்ளார்கள். அவைகளில் சில பாடல்களைப் பின்னுல் சொல்லு கிறேன். இந்த நாயன்மார்கள் சொல்லியுள்ள அனுபவ உண்மையைக் கட்டாயம் நாம் நம்ப வேண்டும். நாயன்மார் ஒவ்வொருவருடைய வாழ்வே அதற்குச் சான்று.

(3) நமக்குத் திருவாசகத் தேனை வழங்கிய மாணிக்கவாசகர் தன்னுடைய அனுபவத்தைத் தெளிவாகக் காட்டியிருக்கிருர். இறை வனைத் தாம் நேரில் தரிசித்ததையும் அதனுல் தமக்கு உண்டான பயனையும் திருவாசகத்தில் பல இடங்களில் அவர் சொல்லியிருக்கிருர்:

“கண்ணுல் யானுங் கண்டேன் காண்க,
அருள்நனி சுரக்கும் அமுதே காண்க,
கருணையின் பெருமை கண்டேன் காண்க,
புவனியிற் சேவடி தீண்டினன் காண்க,
சிவனென யானுந் தேறினன் காண்க,
அவனெனை யாட்கொண் டருளினன் காண்க!”

(திருவாசகம்—திருவண்டப்பகுதி 58-63)

பல கோவில்களின் அருமை பெருமைகளையும் எடுத்துக் கூறியுள்ளார். கோவில்வழிபாட்டில் திடமான கொள்கையுடையவர் அவர். அவர்

சிவனையே குருமுகமாகத் தாம் கண்டதாகச் சொல்லியிருக்கிறார். அதை ஏன் நம்பாமல் இருக்க வேண்டும்?

(4) வழிபடுபவர்களுக்கு இறைவன் கட்டாயம் தரிசனம் வழங்குவார். நம்முடைய மடாதிபதிகள், சிவஞானபோதம் அருளிய மெய் கண்டார், சிவஞான சித்தியார் வழங்கிய அருணந்தி சிவாச்சாரியார் போன்ற பெரியோர் யாவரும் தங்களுடைய அனுபவ வாயிலாக, வழிபாட்டின் பயனைக் கடவுளை நேரில் கண்டு தரிசித்துள்ளார்கள். அவர்கள் சொல்லுவதை நாம் நம்பாமல் ஏன் இருக்க வேண்டும்?

(5) 19-ம் நூற்றாண்டில், இராமகிருஷ்ண பரமஹம்சர் உருவ வழிபாட்டை நிலைநிறுத்திக்காட்டி, உண்மையாக வழிபடுபவர்களுக்குத் தேவி காட்சி தரும் தாயார் என்பதை நிலைநிறுத்தியுள்ளார். விவேகானந்தர்—எம். ஏ. பட்டம் பெற்றவர்; அதிமேதை; அறிவே உரு எடுத்தவர்; கடவுள் 'இல்லை' 'இல்லை' என்று சொல்லிக் கொண்டிருந்தவர்—பரமஹம்சரால் அவருக்குக் கடவுள் காட்டப்பட்டவுடன்—அதைக் கண்டு களித்து நம்பிக்கை பெற்று, கடவுள் வழிபாட்டில் பெரிதும் ஈடுபட்டிருந்திருக்கிறார். உருவ வழிபாட்டை எல்லோரும் கடைப் பிடிக்க வேண்டுமென்று அவர் வற்புறுத்தியுமுள்ளார்.

(6) கடவுள் இல்லை என்பவர்கள், விஞ்ஞானிகள் பேரில் பாரத்தைப் போட்டு, அவர்கள் கடவுள் இல்லை என்று சொல்லுவதை ஒரு சாக்காகச் சொல்லி வந்தார்கள். ஆனால், அந்தக் காலம் பறந்து போய்விட்டது! இந்த நூற்றாண்டில் பெரும் விஞ்ஞானியாக மதிக்கப் பெறும் ஐன்ஸ்டீன் அவர்கள் அண்டங்களிலெல்லாம் நிகழும் முறையைப் பார்த்து ஒரே ஆச்சரியமுற்று, கடவுள் இருக்க வேண்டும் என்ற துணிவுக்கே வந்திருக்கிறார்.

(7) ஏதாவது ஒரு விஞ்ஞானி எங்காவது சொல்லியிருந்தாலும் அதை நாம் முடிவாக எடுத்துக் கொள்ளக்கூடாது. நம்முடைய துறை விஞ்ஞானமல்ல. நம்முடைய துறை மெய்ஞ்ஞானம். விஞ்ஞான உலகத்தில் விஞ்ஞானிகள் சொல்லுவதை நாம் நம்ப வேண்டும்—அந்தத் துறையில் அவர்களின் அனுபவத்தை நாம் நம்ப வேண்டும். ஆனால், மெய்ஞ்ஞானத் துறையில் அவர்கள் சொல்லுவதை நாம் ஏன் நம்ப வேண்டும்? விஞ்ஞானத்தில் எப்படி மேதைகள் இருக்கிறார்களோ, அதேபோலவே மெய்ஞ்ஞானத்தில் ஈடுபட்ட ரிஷிகள், சங்கராச்சாரியார், நாயன்மார்கள் போன்ற பெரியார்கள், ஆழ்வார்கள், சிவஞான போதம் சிவஞானசித்தியார் தந்தவர்கள், இன்னும் கோடானுகோடி மெய்ஞ்ஞானிகள் 'கடவுள் என்ற பரம்பொருள் இருக்கின்றது; அவரை மனிதர் வழிபட்டால் உய்வு உண்டு; அதற்கு யாதொரு தடையுமில்லை' என்ற பேருண்மையை எடுத்துக் காட்டியிருக்கிறார்கள். கடவுள் இருக்கிறார் என்பது நம் மதத்தின் அடிப்படைத் தத்துவம்.

மனிதனுக்கு ஆத்மா உண்டா?

கடவுள் பரமாத்மா; அழியாதவர், அநாதியாய் என்றும் இருப்பர்; ஓர் உருவம் இல்லாதவர்; ஆனால் வேண்டும்போது எந்த உருவத்தையும் தாங்கக் கூடியவர்.

மனிதன் நிலை

இப்பொழுது மனிதனைப் பற்றிக் கவனிப்போம். மனிதனுக்கு ஆத்மா உண்டா? உடலிருக்கிறது. அது அழிந்து போகிறது என்பது உண்மையானது. அப்பொழுது மனிதன் உடல் இறந்தால், அவன் அடியோடு அழிந்து போகிறானா? உடல் மட்டும் அவனுக்கு உண்டானால் அவன் அழிந்துதான் போகவேண்டும். அப்படி இல்லாமல் ஏதாவது ஒன்று உடலுக்கு அப்பாலாய் இயங்கிக்கொண்டிருந்தால், அது இறந்த பிற்பாடு விடுபட்டு என்ன ஆகிறது? மனிதன் இறந்த பிற்பாடு மனிதனுடன் இருந்து வாழ்ந்த ஆத்மாவுக்கு வேறு வாழ்வு உண்டா? எப்படிக் கண்ணால் காணாத கடவுள் இருக்கின்றாரோ அப்படியே கண்ணால் காணாத ஆத்மாவும் இருக்கிறது. அதுதான் ஜீவாத்மா. அந்த ஜீவாத்மாவும் பரமாத்மாவும் ஒரே தன்மை வாய்ந்ததாயினும் வித்தியாசம் உண்டு. அந்த ஜீவாத்மா பிறப்பு இறப்புக்கு உட்பட்டது. பரமாத்மாவுக்குப் பிறப்பு இறப்புக் கிடையாது. ஜீவாத்மா அனுபவிப்பதற்கு உடல்தாங்கி உலகத்தில் பிறப்பெடுக்கவேண்டும். அப்படியிருந்தால், அந்த ஜீவாத்மாவுக்கும் பரமாத்மாவுக்கும் என்ன உறவு? ஜீவாத்மா பரமாத்மாவிடம் எப்படி நடந்து கொள்ளவேண்டும்? மனித ஆத்மா, பரிணாம வளர்ச்சியில் (Evolution) ஓர் உயரிய கட்டத்தை அடைந்தாலும் உயர்வதற்குக் கடவுள் தன்மையை முழுவதும் அடைவதற்கு, ஒன்று அவர் பாதத்தை அடைவதற்கு அல்லது அவருடன் சேர்வதற்கு என்ன செய்யவேண்டும்? தனி வழிபாடு செய்யவேண்டும். கோவில் வழிபாடு செய்யவேண்டும். இதை விவரமாகப் பின்னர்க் காண்போம்.

இப்பொழுது நாம் கவனித்தது மனிதனுக்கு அழியாத ஆத்மா உண்டு. மெஸ்மெரிசம் (Mesmerism), ஹிப்நாட்டிசம் (Hypnotism), டிரான்ஸ் (Trance), இவைகள் மூலமாக சயன்ஸ் (Science) கொஞ்சம் உதவி செய்து மனிதனுக்கு உடம்பைத் தவிர, அவனை இயக்கிக் கொண்டிருக்கும் சக்தி ஒன்று இருக்கின்றது என்றும் இறப்பிற்குப் பின் அது தனியாகப் பிரிந்து இருக்கலாம் என்றும் தொனிக்கின்றன. ஆகையால், நாம் அடிப்படையாகக் கொண்டிருக்கிற கொள்கை, மனிதன் பிறப்பு இறப்பு உடையவன்; பிறந்தவன் தன் செய்வினைகளுக்கேற்ப மரணத்துக்குப்பின் வேறு உடல் தாங்கி வரலாம். இந்தப் பிறப்பு இறப்புகளுக்கு ஏற்ப, அநேக பிறவிகள் உண்டு என்பது ஓர் அடிப்படைக் கொள்கை. ஆன்மா மனிதனுக்கு உண்டு என்பது கூடு விட்டுக் கூடுபாய்தல் என்ற வித்தையினால் நன்றாக உறுதிப்படுத்தப்

படுகிறது. திருமூலர் சரித்திரத்தைக் கவனிக்கவேண்டும். அது வெறும் கதையல்ல. தாயுமானவருடைய சரித்திரத்தையும் கவனிக்கவேண்டும்.

ஆகவே, இப்பொழுது மனித ஆத்மா எப்படி முழுத்தன்மை அடையலாம் என்பதற்கு என்ன வழிபாடு செய்யவேண்டும் என்பதைப் பார்ப்போம்.

கோவில் வழிபாடு

கோவில் வழிபாட்டை நாயன்மார்களும், ஆழ்வார்களும், மடாதிபதிகளும் வற்புறுத்தியிருக்கிருர்கள். 'கோயிலில்லா ஊரில் குடியிருக்கவேண்டாம்' என்பது நம்முடைய பழமொழி.

"திருக்கோயில் இல்லாத திருவி லூரும்
திருவெண்ணீறு அணியாத திருவி லூரும்
பருக்கோடி பத்திமையால் பாடா ஊரும்
பாங்கிஞெடு பலதளிகள் இல்லா ஊரும்
விருப்பொடு வெண்சங்கம் ஊதா ஊரும்
விதானமும் வெண்குடையும் இல்லா ஊரும்
அருப்போடு மலர்பறித்து இட்டு உண்ணு ஊரும்
அவையெல்லாம் ஊரல்ல, அடவி காடே"

எவ்வளவு அழுத்தமாகக் கோவில் வழிபாட்டையும், அதைச் சார்ந்த சின்னங்களையும் திருநாவுக்கரசர் வலியுறுத்தியிருக்கிருர் என்பது மேலே கண்ட பாட்டிலிருந்து தெரிய வருகிறதல்லவா? இத்துடன் இன்னெரு பாடலையும் கவனிப்போம் :

"திருநாமம் ஐந்தெழுத்தும் செப்பா ராகில்
தீவண்ணர் திறம்ஒருகால் பேசா ராகில்
ஒருகாலும் திருக்கோயில் சூழா ராகில்
உண்பதன்முன் மலர்பறித்திட் டுண்ணு ராகில்
அறுநோய்கள் கெடவெண்ணீறு அணியா ராகில்
அளிஅற்ருர் பிறந்தவாறு ஏதோ என்னில்
பெருநோய்கள் மிகநலியப் பெயர்த்தும் செத்துப்
பிறப்பதற்கே தொழிலாகி இறக்கின் ருரே!"

செத்துப் பிறக்காமலிருப்பதற்கும், நலியும் பிறப்பால் தொந்தரவு கொடுக்கமாலிருப்பதற்கும் அவர் கண்ட ஒரே வழி கோவில் வழிபாடு தான். நல்லவகையில் கோவில் வழிபாடு செய்தால் கெடுதல்கள் நீங்கிப் பிறப்பில்லாமல் இருக்கும் பெரும் பேற்றைப் பெறலாம்.

திருமூலர் சொல்லுவதைச் சற்றுக் கவனிக்கலாம் :

ஆர்வம் உடையவர் காண்பர் அரன்தன்னை
ஈரம் உடையவர் காண்பார் இணையடி

பாரம் உடையவர் காண்பார் பவந்தன்னை
கோல நெறி கொடு கொங்குபுக் காரே.

அன்பின் மிகுதியினால், உருகும் மனத்தினால், அடியார்கள் பிறவி வேரறுக்கும் இறைவனைக் கண்டு இன்புறுவர். எவ்வுயிர்க்கும் பரிவாகிய அன்புடையவர்கள் எவ்விடத்தும் இறைவன் திருவடியினைக் கண்டு மகிழ்வார்கள். அன்பெனும் பண்பின்றி உலகப் பற்றாகிய சுமையினை உடையவர்கள் அடுத்தடுத்துப் பிறவியைப் பெற்று அல்லல் படுவர். அன்பில்லாது வழிபடாமலிருப்பவர்களுக்குத் துன்பம் அதிகம். இப்படி, வெள்ளைவாரணர் தம் திருமந்திர அருள்மொழித் திரட்டில் சொல்லியிருக்கிறார்.

வழிபாட்டின் பயன்

கோவில் வழிபாட்டின் முக்கியத்தைப் பற்றித் திருமூலர் சொல்லியிருப்பது பின்வருமாறு:

ஆற்றரு நோய்மிக் கவனி மழையின்றிப்
போற்றரு மன்னரும் போர்வலி குன்றுவர்
கூற்றுகைத் தான்திருக் கோயில்க ளானவை
சாற்றிய பூசைகள் தப்பிடில் தானே.

பூசைகள் தப்பினால், தேவ ஆகமங்களில் கூறப்பட்ட வழிபாட்டு முறை தவறுபட்டால், நாட்டில் மழையில்லாது ஒழிந்து, பொறுத்தற்கு அரிய நோய் மிகுந்து, நாட்டினைக் காக்கும் மன்னர்களுக்கும் கேடு வரும். திருமூலர் மறுபடியும்,

முன்னவனால் கோயில் பூசைகள் முட்டிடின்
மன்னர்க்குத் தீங்குள வாரிவளங் குன்றும்
கன்னங் களவும் மிகுத்திடும், காசினி
என் அருநந்தி எடுத்துரைத் தானே.

பேர்கொண்ட பார்ப்பான் பிரான் தன்னை அர்ச்சித்தால்,
போர்கொண்ட வேந்தர்க்கு பொல்லா வியாதியாம்
பார்கொண்ட நாட்டுக்குப் பஞ்சமுமாம் என்றே
சீர்கொண்ட நந்தி தெரிந்து ரைத்தானே.

பூஜை பண்ணுபவன் முறைப்படி செய்ய வேண்டும். பிறப்பால் மட்டும் பார்ப்பனாக இருந்தால் போதாது. அதற்கு வேண்டிய ஒழுக்கம், திருமுறை, மறை ஓதுதல் உணர்தல் முதலிய குணங்கள் அவரிடம் இருக்க வேண்டும். தகுதியில்லாதவன் பூசை செய்தால் அரசனுக்கும் நாட்டுக்கும் கேடு வரும். ஆகவே, கோவில் வழிபாடு நாட்டின் நன்மைக்கு, அரசுக்கு, மக்கள் உயர்வுக்கு, பசி, பிணியைப் போக்குவதற்கு அவசியமாகும்.

தனிப்பட்ட மனிதனுக்கும் அது அவசியமானது. அவனது மனத்தை அது சுத்தப்படுத்தும். திருநாவுக்கரசர் சொல்லியிருப்பதுபோல், "திருகு சிந்தையைச்" செம்மை செய்யும். அவனை முதலில் தூய்மைப் படுத்தும்; பிறகு பூசை செய்யச் செய்ய அவனுக்கு ஓர் ஆனந்தத்தைக் கொடுக்கும். திருநாவுக்கரசர் இதை ஒரு பாட்டில் - திருவானைக்காப் பதிகத்தில் - எடுத்து உரைத்திருக்கிறார். திருவானைக்கா அண்ணலின் ஆற்றலைச் சொல்லும் பொழுது பின்வருமாறு விவரித்திருக்கின்றார்:

"திருகு சிந்தையைத் தீர்த்துச் செம்மைசெய்து
பருகி யூறலைப் பற்றிப் பதமறிந்து
உருகி நைபவர்க்கு ஊனம் ஒன்று இன்றியே
அருகில் நின்றிடும் ஆனைக்கா அண்ணலே."

"துன்பமின்றித் துயர்இன்றி என்றும் நீர்
இன்பம் வேண்டில் இராப்பகல் ஏத்துமின்
என்பொன் ஈசன், இறைவன் என்று உள்குவார்க்கு
அன்ப னாயிடும் ஆனைக்கா அண்ணலே."

ஆகையால் நாம் இறப்பதற்குமுன் தொழுது, தூமலர்களால் தூவி, நின்று இறைவனை வழிபட வேண்டுமென்று தீர்மானிக்கிறார்.

இதுவரையில் கோயில் வழிபாட்டையும் அது தனி மனிதர்க்கும் நாட்டுக்கும் செய்யும் நலனையும் கவனித்தோம். கோவில் வழிபாடு நம் நாட்டில் ஏற்பட்ட மதத்திற்கு ஓர் அடிப்படையான தத்துவம்.

மனிதனுக்கும் கடவுளுக்கும் உள்ள உறவும் கடவுள் தன்மையும்

இப்பொழுது மனிதனுக்கும் கடவுளுக்கும் உள்ள உறவைப்பற்றிச் சற்றுக் கவனிப்போம். கடவுள் இல்லாமல் மனிதன் இல்லை. கடவுளேதான் எல்லாவற்றுக்கும் முதல். கடவுளேதான் நமக்கிருக்கும் உறவினர் - துணையாய் இருப்பவர்.

"அப்பன்நீ அம்மைநீ ஐயனும்நீ
அன்புடைய மாமனும் மாமியும்நீ
ஒப்புடைய மாதரும் ஒண்பொருளும்நீ
ஒருகுலமும் சுற்றமும் ஓர்ஊரும்நீ
துய்ப்பனவும் உய்ப்பனவும் தோற்றுவாய்நீ
துணையாய்என் நெஞ்சம் துறப்பிப்பாய்நீ
இப்பொன்நீ, இம்மணிநீ, இம்முத்தும்நீ
இறைவன்நீ, ஏறூர்ந்த செல்வன்நீயே"

இப்படியிருக்க, மனிதன் இறைவனை எப்படி வழிபடாமல் இருக்கலாம்?

“வெம்பவரு கிற்பதுஅன்று கூற்றம் நம்மேல்
வெய்யவினைப் பகையும் பைய நையும்
எம்பரிவு தீர்ந்தோம் இடுக்கண் இல்லோம்
எங்கெழில்என் ஞாயிறு எளியோம் அல்லோம்
அம்பவளச் செஞ்சடைமேல் ஆறுசூடி
அனல்ஆடி ஆன்அஞ்சும் ஆட்டு கந்த
செம்பவள வண்ணர்செங் குன்ற வண்ணர்
செவ்வான வண்ணர் என்சிந்தை யாரே!”

கடவுள் இன்ன தன்மை வாய்ந்தவன் என்று சொல்ல முடியாதவன். எல்லாமுமாயிருக்கிறன், அல்லதுமாயிருக்கிறன். நமக்குத் தெரியாமலே நமது ஆத்மாவில் குடியிருக்கிறன். உலகத்தில் காணும் ஒவ்வொரு பொருளிலுமிருக்கிறன். எல்லாக் காலத்திலுமிருக்கிறன் —சென்ற காலம், நிகழ்காலம், எதிர்காலம். முன்னைப் பழம் பொருளுக்கும் பழம்பொருள். எதிர்காலத்தில் வரக்கூடிய புதுப் பொருளுக்கும் புதுப்பொருள். எல்லா உருவமும் உண்டு; ஓர் உருவமும் அவனுக்கு இல்லை. இப்படி எப்பொழுதும், எப்பொருளிலும், எக்காலத்திலும், உன்னுடனும் உடனுயிருக்கும் பழம்பொருளை இன்ன தன்மையன் என்று சொல்லால் விவரிக்க முடியாமற் போனுலும், அவன் வேண்டும்போது அடியவர்க்கு இரங்கி வந்து கரையேற்றி விட்டிருக்கிறன் —‘எளிவந்தபிரான்’. இதுவும் இந்து மதத்தின் ஒரு அடிப்படையான கொள்கை. தங்கள் தங்கள் அனுபவத்தினுல் இதைப் பெரியவர்கள் காட்டியிருக்கிறர்கள். இந்தத் தன்மையைக் குறித்துச் சில பாடல்களை இங்குக் காணலாம் :

“ஊனுகி உயிராகி, அதனுள்நின்ற உணர்வாகி,
பிறவனைத்தும் நீயாய் நின்றுய்,
நானேதும் அறியாமே என்னுள் வந்து
நல்லனவும் தீயனவும் காட்டா நின்றுய் ?
தேனுரும் கொன்றையனே, நின்றியூராய்,
திருவானைக் காவிலுறை சிவனே!
ஞானம்ஆனுய், உன்பொற்பாதம் அடையப்பெற்றுல்,
அல்லகண்டம் கொண்டு அடியேன் என்செய்கேனே.”

காயமே கோயிலாகக் கடிமனம் அடிமையாக
வாய்மையே தூய்மையாக மனம்மணி இலிங்கமாக
நேயமே நெய்யும்பாலா நிறையநீர் அமையஆட்டிப்
பூசனை ஈசனுர்க்கு போற்றவிக் காட்டினேமே.

ஓசை ஒலியெலாம் ஆனுய் நீயே,
உலகுக்கு ஒருவனுய் நின்றுய் நீயே,
வாச மலரெலாம் ஆனுய் நீயே,
மலையான் மருகனுய் நின்றுய் நீயே,

பேசப் பெரிதும் இனியாய் நீயே,
பிரானய் அடிஎன்மேல் வைத்தாய் நீயே,
தேசவிளக்கெலாம் ஆனய் நீயே,
திருவையாறு அகலாத செம்பொன் சோதி !

ஆனைக்கா அப்புலிங்கம்

கோவில் வழிபாட்டில், சைவ வழிபாட்டில், சில கோவில்களுக்கு முக்கியம் கொடுத்திருக்கிறார்கள். பன்னிரண்டு ஜோதிலிங்கக் கோவில்களுக்கு முக்கியத்துவம். பஞ்சபூத ஸ்தலங்கள் என்று ஐந்து ஸ்தலங்களை முக்கியமாக எடுத்திருக்கிறார்கள். ஐந்து பூதங்கள் மண், தண்ணீர், வாயு, நெருப்பு, ஆகாயம் ; இவை ஒவ்வொன்றிற்கும் கடவுள்தான் அதிபதி; அந்த ஒவ்வொரு பூதத்திலும் அவன் இருக்கிறான் ; வழிபடக்கூடியவன் என்று அந்தந்தப் பூதத்துக்கு அந்தந்தக் கோயிலை ஏற்படுத்தியிருக்கிறார்கள். திருவானைக்காவை தண்ணீர் ஸ்தலம் என்று சொல்லுவார்கள். லிங்கமானது எப்போதும் தண்ணீரில் இருக்கின்றது ; தண்ணீர் எப்போதும் ஊறிக் கொண்டிருக்கிறது. ஆனி, ஆடி மாதங்களில் காவிரியில் வெள்ளம் வரும்போது நீர்பெருகி லிங்கத்துக்கு மேலாகப் பல அடிகள் தண்ணீர் சேர்ந்து விடும். அப்போது இயந்திரம் வைத்து நீரை இறைத்த பிறகுதான் பூஜை நடக்கும்.

கோவில் வழிபாட்டில் அதேமாதிரி மண் பூதத்திற்கு ஒப்பாகத் திருவாரூர் கோவில் ஒரு சிறந்த கோவில். அதுவும் பழைய கோவில். இந்த இரண்டு கோவிலைப் பற்றி மட்டும் உள்ள சில பாட்டுகளை கோவில் வழிபாட்டு விசேஷத்துக்காக எடுத்துக்காட்டாகப் படிக்கிறேன். திருவாரூர் கோவிலில் உள்ள பாடல்கள் பின்வரும் விஷயங்களைக் கற்பிக்கின்றன :

நெஞ்சிற்கு அறிவுரை

ஒருவனுக்கு இடர் கெட வேண்டுமானல், பற்றி நின்ற பாவங்கள் போக வேண்டுமானல், முற்பிறப்பு வினைகள் அகலவேண்டுமானல், நன்மைகள் ஒருங்கே சேர வேண்டுமானல் திருவாரூர் ஆரூரன் வழிபாட்டைத் துணையாகக் கொள்ள வேண்டுமென்று திருநாவுக்கரசு சுவாமிகள் பாடல்கள் அறிவுறுத்துகின்றன. எல்லாவற்றையும் விட நிம்மதி வேண்டுமானல் அந்தக் கோவிலில்போய் எப்படி வழிபட வேண்டுமென்று அவர் சொல்லுகின்றார் :

இடர்கெடுமாறு எண்ணுதியேல் நெஞ்சே நீவா
ஈண்டு ஒளிசேர் கங்கைச் சடையாய் என்றும்
சுடர்ஒளியாய் உள்விளங்கு சோதி என்றும்
தூநீறு சேர்ந்து இலங்குதோளாய் என்றும்

கடல்விடம் அதுஉண்டு இருண்டகண்டா வென்றும்
கலைமான் மறிஏந்து கையா என்றும்
அடல்விடையாய் ஆரமுதே ஆதி என்றும்
ஆரூரா என்றென்றே அலறா நில்லே.

செடியேறு தீவினைகள் தீரும் வண்ணம்
சிந்தித்தே நெஞ்சமே திண்ணமாகப்
பொடியேறு திருமேனி உடையாய் என்றும்
புரந்தரன்தன் தோள்துணித்த புனிதா என்றும்
அடியேனை ஆளாகக் கொண்டாய் என்றும்
அம்மானே ஆரூர்எம் அரசே என்றும்
கடிநாறுபொழில் கச்சி கம்பா என்றும்
கற்பகமே என்றென்றே கதறா நில்லே.

புண்ணியமும் நன்நெறியும் ஆவ தெல்லாம்
நெஞ்சமே இதுகண்டாய் பொருந்தக் கேள்நீ
நுண்ணிய வெண்ணூல் கிடந்த மார்பா என்றும்
நுந்தாத வெண்சுடரே என்றும் நாளும்
விண்ணியங்கு தேவர்களும் வேதம் நான்கும்
விரைமலர்மேல் நான்முகனும் மாலும் கூடி
எண்ணரிய திருநாமம் உடையாய் என்றும்
எழில்ஆ ரூரா என்றே ஏத்தா நில்லே.

பற்றிநின்ற பாவங்கள் பாற்ற வேண்டில்,
பரகதிக்குச் செல்வதொரு பரிசு வேண்டில்,
சுற்றிநின்ற சூழ்வினைகள் வீழ்க்க வேண்டில்,
சொல்லுகேன் கேள், நெஞ்சே! துஞ்சா வண்ணம்;
உற்றவரும் உறுதுணையும் நீயே என்றும்
உன்னையல்லால் ஒருதெய்வம் உள்கேன் என்றும்
புற்றுஅரவ கச்சார்த்த புனிதா என்றும்
பொழில்ஆரு ராஎன்றே போற்றா நில்லே.

நிலைபெறுமாறு எண்ணுதியேல் நெஞ்சே நீவா
நித்தலும்எம் பிரானுடைய கோயில் புக்குப்
புலர்வதன்முன் அலகிட்டு மெழுக்கு மிட்டுப்
பூமாலை புனைந்தேத்திப் புகழ்ந்து பாடித்
தலையாரக் கும்பிட்டுக் கூத்து மாடிச்
சங்கரா சயபோற்றி போற்றி என்றும்
அலைபுனல்சேர் செஞ்சடைஎம் ஆதி என்றும்
ஆரூரா என்றென்றே அலறா நில்லே.

இந் நாட்டுச் சரித்திரத்தில் சில கோயில்களில் இறைவனே இறைவியோ வழிபடும் பக்தர்களுக்கு நேரே தோன்றி இடர்களை வராமல் தடுத்திருக்கிறார் :

'ஏரிகாத்த பெருமாள்' என்று ஸ்ரீராமன் வந்து ஏரிகரை உடைவதைத் தடுத்திருக்கிறார். பவானியிலும் மதுரையிலும் இறைவி சிறு பெண் உருவம் தாங்கிச் சமயத்தில் வந்து பெரும் கேடுகளுக்கு உள்ளாகாமல் காத்திருக்கிறார். (செங்கற்பட்டு, கோயம்புத்தூர் ஜில்லா கஜட்டியர்களைப் பார்க்கவும்.)

திருக்கோயில் வழிபாட்டின் முக்கியத்தைப் பற்றியும், கடவுள் நிலை, உயிர்களின் நிலை, கடவுளுக்கும் உயிருக்குமுள்ள தொடர்பு முதலியவற்றையும் யான் அனுபவ வாயிலாய் அறிந்தவரையில் விளக்கினேன். சிறப்பாகத் திருவானைக்காத் தேவாரப் பாக்களையும், மற்றும் பெரியார்களின் பாக்களையும் எடுத்துக் காட்டினேன்.

கச்சியப்பர் அருளிய புராணம்

முக்கியமான அடிப்படைக் கொள்கைகளைப் பற்றிக் கச்சியப்பர் தம் புராணத்தில் சொல்லியிருக்கிறார். அவர் அருளிய இத்தல புராணத்தில் 'ஞானேபதேசப் படலம்' என்னும் ஒரு படலம் இருக்கிறது. அவருக்கும் இரண்டு நூற்றாண்டுக்கு முற்பட்ட கமலை ஞானப்பிரகாசர் பாடிய தந்திவனப் புராணத்திலும் 'ஞானேபதேச சருக்கம்' என்னும் ஒரு பகுதி இருக்கிறது. இவ்விரு பெரியார்களும் சைவ சித்தாந்த சாத்திரங்களை நன்றாகக் கற்றவர்கள்; பலருக்கு அவற்றைத் தெளிவாக எடுத்துச் சொன்னவர்கள். இவர்கள் இறைவன் உமாதேவிக்கு அருளிச் செய்யும் முறையில் உயிர், இறை, மாயை என்னும் முப்பெரும் தத்துவங்களையும் தெளிவாக உணர்த்தியுள்ளார்கள். இவர்கள் வெளியிட்டுள்ள கருத்துக்களில் ஒன்றிரண்டை மட்டும்தான் சொல்லக் காலம் இடங்கொடுக்கிறது.

"உலகமெல்லாம், நமது அருள்வழியே நடக்கிறது. ஆடல் பயிற்றும் ஆடலாசிரியன், தான் ஆடிக்காட்டுவது போல, நாமே உலகத்திற்கு வழிகாட்ட வேண்டும். மலபந்தம் உள்ள உயிர்கள் நிலையற்ற மாயா போகத்தை அனுபவிக்கும்பொருட்டு, உன்னேடுகூடிப் போகியாகக் காட்சி தருகிறேன். ஆசைகளை விடுத்து யோகநிலைகளைக் கடைப்பிடித்து, மெய்ஞ்ஞானம் பெற்று உய்வதற்காக, நான் யோகியாகவும் காட்சி தருகின்றேன்" என்று இறைவன் உமாதேவிக்கு அருளியதாகக் கவிஞர் பாடுகிறார்.

இந்தக் கருத்து,

"போகியா யிருந்து உயிர்க்குப் போகத்தைப் புரிதல் ஓரார்;
யோகியாய் யோக முத்தி உதவுதல் அதுவும் ஓரார்;
வேகியா னற்போற் செய்த வினையினை வீட்ட லோரார்;
ஊகியா மூட ரெல்லாம் உம்பரின் ஒருவன் என்பார்"

என்ற சிவஞான சித்தியார் பாடலிலும் காணப்படுகிறது.

“தென்பால் உகந்தாடும் தில்லைச் சிற்றம்பலவன்
பெண்பால் உகந்தான் பெரும்பித்தன் காணேடி
பெண்பால் உகந்திலனேல் பேதாய் இருநிலத்தில்
விண்பாலி யோகெய்தி வீடுவர்காண் சாழலோ”

என்ற மணிவாசகர் வாக்கும் இங்கு நினைவுகூரத் தக்கது.

“மலங்களோடு கூடிய உயிர்கள் மாயை என்னும் மறைப்புடன் போகங்களை நுகர்ந்து, நுமது அருளினால் ஞானம் பெற்று விட்டுலகை அடையும் என்று சொன்னீர்! நாயகனே! எனக்குத் தோன்றும் ஐய வினாக்களுக்கும் விடை தருவீராக” என்று உமாதேவியார் கேட்கும் வினாக்களுக்கு, இறைவன் விடையிறுப்பதாய் ஞானோபதேசப் படலம் அமைக்கப்பட்டுள்ளது.

இறைவி : ஆணவ மலம் என்பது யாது?

இறைவன் : ஆணவ மலமென்பது, இருள் மயமானது; வலிமை யுடையது; மூலமாயுமுள்ளது. ஆன்மாவிற்கு அறிவு உண்டு. ஆனால், அந்த அறிவை, ஆணவ மலம் ஆன்மாவுடன் இரண்டறக் கலந்திருந்து மறைத்துவிடும். கண்களுக்குப் பொருளைக் காணும் சக்தியிருந்த போதிலும், பொருளைக் காண இயலாதவாறு இருட்டுத் தடுக்கிற தல்லவா? ஆன்மா எனும் காணும் சக்தியை மறைக்கும் இருட்டே இந்த ஆணவ மலம். எல்லா உயிர்களிடமும் இந்த ஆணவ மலம் தங்கியிருந்து, ஒரு குறிப்பிட்ட கால எல்லையில் நீங்குவதாகும்.

இறைவி : உயிர் என்பது யாது?

இறைவன் : உயிர்கள் கணக்கற்றன; சிற்றறிவு உடையன; எப் பிறவி எடுக்கின்றனவோ அப் பிறவிக்கேற்றவாறு செயல்படுவன; சுதந்திரமில்லாத அவ் வுயிர்கள் சிற்றறிவுடையனவாயினும், நாம் உணர்த்தினால், எவற்றையும் உணருமேயன்றித் தாமாக எதையும் உணரும் ஆற்றலுடையன அல்ல.

இறைவி : மாயை என்பது யாது?

இறைவன் : மெய்ஞ்ஞானத்தில் அல்லாமல், வேறெதிலும் தோய்வுறாத நமது திருவருளினால் தொழிற்பட்டு, எல்லா உயிர்களுக்கும் உடம்பு, உட்கருவி, உலகம், நுகர்ச்சி ஆகிய பொருள்களாக விரியும் ஒரு சத்திதான் மாயை. சுத்தம், அசுத்தம் என இருவகைப் பட்டிருக்கும். சுத்தம் நல்ல பிடிப்புக்களுக்கும், அசுத்தம் தீய பிடிப்புக் களுக்கும் வழிகோலுவதாகும்.

இறைவி : கன்மம் என்பது யாது?

இறைவன் : மாயையைக் கருவியாகக் கொண்டு, உயிர்கள் செய்யும் தொழில்தான் கன்மம். சுத்த மாயையின் பிடிப்பில் செய்யும் தொழில்களே நல்வினை. அசுத்த மாயையின் பிடிப்பில் உயிர் செய்யும் தொழில்களே தீவினை. நல்வினை இன்பத்தைத் தரும்; தீவினை துன்பத்தைத் தரும்.

ஆணவம், மாயை, கன்மம் மூன்றும் ஒன்றோடொன்று தொடர்புடையன. மூல மலமாகிய ஆணவம், ஆன்ம அறிவை மறைத்து நிற்பதால், மாயை, உயிர்களை ஆட்டுவிப்பது எளிதாகிறது. மாயை ஆட்டுவித்தலால் நிகழும் நல்வினை தீவினைகளுக்கு ஏற்ப, அவ் வுயிர் இன்பமும் துன்பமும் அடைகிறது.

உயிர்களுக்கு மாயையும், கன்மமும் நாமே தந்திருக்கிறோம். இவற்றை உயிர்களுக்கு நாம் ஏன் தந்திருக்கிறோமென்றால், நாம் தோன்றிய காலந்தொட்டே நமக்கு எதிராகச் செயல்பட்டுவரும் மூல மலமாகிய ஆணவத்தின் சேட்டையை அகற்றுவதற்கே ஆகும். துணியில் உள்ள மூல அழுக்கைப் போக்குதற்குச் சாணிப்பால், உவர்மண் முதலிய வேறு அழுக்குகளைச் சேர்ப்பது போன்றே, நமக்குப் போட்டியாக இருக்கும் தீமைச் சத்தியான ஆணவ மலத்தைப் போக்குதற்கு நாம் உயிர்களுக்கு மாயை, கன்மம் ஆகிய தீமைச் சக்திகளைத் தந்தருளுகிறோம்.

இறைவி : முத்தி என்பது யாது?

இறைவன் : ஆணவ மலத்துடன் இரண்டறக் கலந்திருந்த உயிர், எம்முடன் இரண்டறக் கலக்கும் நிலையே முத்தி. புறப்பற்று, அகப்பற்று இரண்டும் உள்ளவரை, உயிர் மாயையுடன் இரண்டறக் கலந்திருக்கும். யான், எனது என்னும் இருபற்றும் மாயும்போது, உயிர் எம்முடன் இரண்டறக் கலக்கும்.

"வஞ்சம் இன்றி வணங்குமின் வைகலும்;
வெஞ்சொல் இன்றி விலகுமின் வீடற;
நைஞ்சு நைஞ்சுநின்று உள்குளிர் வார்க்கெலாம்
அஞ்சல் என்றிடும் ஆனைக்கா அண்ணலே!"

'தந்தை யாயுல குக்கோர்
தத்துவன் மெய்த்தவத் தோர்க்குப்
பந்த மாயின பெருமான்
பரிசுடை யவர்திரு வடிகள்
அந்தண் பூம்புன லானைக்
காவுடை ஆதியை நாளும்
எந்தை யென்றடி சேர்வார்
எம்மையும் ஆளுடை யாரே."

"அருள்வளர் சம்புமூலத்து அமுதலிங் கேசர்வாழ்க !
வரும்அகி லாண்டவல்லி வாழ்கவே ! ஆகமத்தின்
பொருள்நிலை வழாதுவாழ்க ! புகழ்திரு வானைக்காவாம்
திருநகர் வாழ்க!வாழ்க ! தேயங்கள் அனைத்தும் மாதோ !"

(திருவானைக்காப் புராணம்)

"ஞாலம்நின் புகழே மிகவேண்டும்
ஆனைக்காவில் உறையும் எம்ஆதியே !
எம்அன்னை அகிலாண்ட நாயகியே !"

"வாழ்க அந்தணர், வானவர், ஆனினம்
வீழ்க, தண்புனல் ! வேந்தனும் ஓங்குக !!
ஆழ்க தீயது ! எல்லாம் அரன்நாமமே
சூழ்க ! வையக மும்துயர் தீர்கவே !!"

பின்னிணைப்பு :

திருவானைக்கா இலக்கிய அடைவு

(அச்சிடப்பட்டவை)

திருமுறை இலக்கியம்

1. ஐயடிகள் காடவர்கோன் நாயனார் (நூ. 6)	க்ஷேத்திரத் திருவெண்பா 11-ஆம் பாடல் (பதினோராம் திருமுறை)
2. திருஞான சம்பந்தர் (நூ.7)	(1) திருமுறை 2 : பதிகம் 23 (2) திருமுறை 3 : பதிகங்கள் 59, 109
3. திருநாவுக்கரசர் (நூ. 7)	(1) திருமுறை 5 : பதிகம் 31 (2) திருமுறை 6 : பதிகங்கள் 62, 63
4. சுந்தரர் (நூ. 8)	திருமுறை 7 : பதிகம் 75
5. மாணிக்கவாசகர் (நூ. 9)	திருமுறை 8 : திருவம்மானை 19
6. கபிலதேவர் (நூ. 10)	சிவபெருமான் திருவந்தாதி பாடல் எண் 41 (பதினோராம் திருமுறை)
7. சேக்கிழார் (நூ. 12)	(1) திருநாவுக்கரசு புராணம் பெரிய. 1571, 1572 (2) திருஞான சம்பந்தர் புராணம் பெரிய. 2247-2250 (3) சுந்தரர் - ஏயர்கோன் பெரிய. 3234, 3236

பிரபந்த இலக்கியங்கள்

8. காளமேகப் புலவர் (நூ. 14)	(1) திருவானைக்கா உலா (2) தனிப்பாடல்கள்
9. அருணகிரிநாதர் (நூ. 17)	திருப்புகழ் : 14 பாடல்கள்
10. தாயுமானவர் (நூ. 17)	"தாயுமான சுவாமி பாடல்கள்" "வட்டமிட்டு ஒளிர்"—எனத் தொடங்கும் பாட்டு

11. கச்சியப்பர் (நூ. 18)	திருவானைக்காப் புராணம்
12. மகா வித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை (நூ. 19)	(1) திருவானைக்கா அகிலாண்ட நாயகி மாலை (2) திருவானைக்கா அகிலாண்ட நாயகி பிள்ளைத்தமிழ் (3) திருவானைக்காத் திரிபந்தாதி
13. தண்டபாணி சுவாமிகள் (நூ. 19)	(1) சம்புலிங்கர் பதிகம் (2) அகிலாண்ட நாயகி பதிகம் (3) கணேசர் பதிகம் (4) திருவானைக்கா யமக அந்தாதி (5) திருவானைக்கா வண்ணப் பாமாலை (6) சண்முகத் திருப்புகழ்
14. மனோன்மணி அம்மையார் (நூ. 19-20)	திருவானைக்கா அகிலாண்ட நாயகி அந்தாதி
15. கே. வி. சுப்பையர் (நூ. 20)	திருவானைக்காப் பதிற்றுப்பத்து அந்தாதி
16. சிங்காரவடிவேல் வன்னிய முண்டார் (நூ. 20)	திருவானைக்கா அந்தாதி
17. வேலாயுத சுவாமிகள் (நூ. 20)	(1) அகிலாண்ட நாயகி பதிகம் (2) திருவானைக்கா அகிலாண்ட நாயகி பிரார்த்தனைப் பதிகம் (3) அகிலாண்டநாயகி நேரிசை வெண்பா
18. அப்புலிங்கம் (கலைவாணன்) (நூ. 20)	காவை முருகன் பிள்ளைத்தமிழ்

திருவானைக்கா இலக்கியம்

(அச்சாகாதன)

1.	கமலைஞானப் பிரகாசர் (நூ. 16)	தந்திவனப் புராணம்
2.	ஆசிரியர் பெயர் தெரியவில்லை	அகிலாண்டவல்லி ஆசிரிய விருத்தம்
3.	,,	திருப்பணி மாலை
4.	,,	சில தனிப்பாடல்கள்

(இவை திருவான்மியூர் உ. வே. சாமிநாதையர் நூலகத்தில் உள்ளன)

திருவானைக்கா இலக்கியம்

(உரைநடை நூல்கள்)

1.	ம. வீ. இராமநுஜாச்சாரியர் (நூ. 20)	திருவானைக்கா மான்மியம்
2.	ப. பஞ்சாபகேச சாஸ்திரியார் (நூ. 20)	திருவானைக்காவல் மஹாத்மியம் (பாத்மபுராண மொழிப்பெயர்ப்பு)
3.	ஜி. வரதராஜன் (நூ. 20)	திருவானைக்கா புராண உரைநடை
4.	பஞ்சநதம் பிள்ளை (நூ. 20)	திருவானைக்காத் தல வரலாறு
5.	திருப்பணிக்குழு (நூ. 20)	ஸ்ரீ ஜம்புகேஸ்வரர் திருக்கோயில் மகா கும்பாபிஷேக மலர்

மேற்கோள் முதற்குறிப்பு அகராதி

[எண்: பக்க எண்]

பொருள் அகராதி

[எண் : பக்க எண்]